# மாந்தர் மாண்பு

## கோப்பாய் சிவம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# மாந்தர் மாண்பு

## ~வாழ்வியல் சிந்தனைகள்~

ஆசிரியர்:

**வித்யாபூஷணம், கலாபூஷணம்**

**பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா** B.A.Hons.

*(கோப்பாய் சிவம்)*

*வெளியீடு:*

**கோப்பாய் சிவம் பாராட்டுவிழாக் குழுவினர்**

**(மணிவிழா மற்றும்,**

**'கலாபூஷணம்' விருது பெற்றமையை முன்னிட்டு)**

**15~03~2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Title | : *Manthar Manpu* |
| Subject | : Glimpses of Human Values in social Life |
| Language | : Tamil |
| Author | : P. Sivanandasarma B.A. (Hons) (Kopay Sivam) |
| Address | : 'SRINAGRAM', ALAVODAI VEETHY, Inuvil West, Chunnakam, Sri Lanka. T.P. 021 224 1504 |
| Rights | : To The Author |
| Type Setting & Designing | : Sri Vidya Computer Press, Inuvil |
| Printers | : Gajananth Printers, Manipay Road, Inuvil. |
| Date ot Publication | : 15 - 03- 2015. |
| Price | : Rs. 250 /= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

## சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள்

### நீர்வேலி, வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் தேவஸ்தான ஆதீன கர்த்தரும், பிரதம குருவும்

பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா, மணிவிழாக் கண்ட பெருமைக்குரியவர். கல்வியால் மேம்பட்டு, பல பட்டங்கள் பெற்றிருக்கும் அதே நேரத்தில் அந்தணர்க்குரிய சம்ஸ்காரங்களுள் ஒன்றாகிய, உடலையும் உள்ளத்தையும் புனிதப்படுத்தும் ஷஷ்டியப்த பூர்த்தி நடத்தப்பெற்றுப் பொலிவு பெற்றிருக்கிறார். இவ்வைபவமானது வாழ்வில் பல சிறப்பான மாற்றங்களை உருவாக்கும்.

அவ்வகையில், மணிவிழாவின் சிறப்பாக, கும்ப பூஜை, அபிஷேகம், ஹோமம் முதலிய வைபவங்களின் பேறாக, 'கலாபூஷணம்' விருது இவருக்குக் கிட்டியுள்ளது என்றால் மிகையாகாது.

தமிழ், சம்ஸ்கிருத மொழிகளில் பல இலக்கிய, சமய நூல்களையும் பத்ததி நூல்களையும் கோப்பாய் சிவம் வெளியிட்டிருக்கிறார். அவருடைய இப்பணிகளையும் பாராட்டி, கலாபூஷணம் விருதுபெற்றமையையும் கௌரவித்து பாராட்டுவிழா ஒன்றை எடுப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். இவ்விழாவில் 'மாந்தர் மாண்பு' என்னும் நூல்வெளியீடும் இடம்பெறுவது பெருமைக்குரியது. இந்நூல் சமூக விழுமியம் சார்ந்த பல கருத்துக்களை - லௌகிக வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த செய்திகளை, மனித உள்ளங்களைக் கவரும் தன்மையோடு மிக எளிமையாகத் தந்திருக்கிறார் நூலாசிரியர். இந்நூல் பாராட்டுவிழாக் குழுவினரால் வெளியிடப்படுவது சிறப்பான ஓர் அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறப்புக்குரியவரான பிரம்மஸ்ரீ சிவானந்தசர்மா பல துறைகளிலும் மேலும் சிறந்து எழுபது வயதில் செய்யும் பீமரத சாந்தி முதலிய அடுத்துவரும் எல்லா வைபவங்களையும் கண்டு மகிழ்வதோடு ஆலயம், ஆன்மீகம், இலக்கியம் எனப் பல்துறையிலும் மேம்பட்டுப் பல பட்டங்களும் பெற்றுச் சிறக்க ஆசி வழங்குகிறேன்.

**சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள்**
**ஆதீனகர்த்தரும் பிரதம குருவும்**
**வாய்க்காற்றரவை விநாயகர் ஆலயம்**
**நீர்வேலி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்,
சமூகவியல் துறைத் தலைவர்,
சிரேஷ்ட பேராசிரியர்,
கலாநிதி என். சண்முகலிங்கன் அவர்கள்
வழங்கிய

# அணிந்துரை

கோப்பாய் சிவம் அவர்களின் 'மாந்தர் மாண்பு' - புதிய நூலின் வரவில் மனது மிகவாய் மகிழ்கின்றது.

சமூக வாழ்வின் மேம்பாட்டுக்கு இன்றியமையாத, சிவம் அவர்களின் சிந்தனை வீச்சுக்களின் தொகுப்பாக இந்நூல் வடிவம் கண்டுள்ளது. மலரும் நினைவுகளாகவும், காலப் பதிவுகளாகவும், சமூகப் பகுப்பாய்வுகளாகவும் விளங்கும் இந்நூலின் ஆக்கங்கள் யாவும் சிவம் அவர்களின் அக மலர்ச்சியையும் சமூக உணர்திறனையும் வெளிப்படுத்துகின்றன.

நவீன வாழ்வில் நாம் தொலைத்துநிற்கின்ற வாழ்வியல் மேன்மைகளை, விழுமியங்களை மீளக் கட்டமைக்கும் சிவத்தின் ஆவலும், தேடலும் இக்கட்டுரைகள் முழுமையும் விரவி நிற்கக் காணலாம்.

சிவம் அவர்களின் இந்தப் பண்பாட்டுக் கவலையும் மேம்பாட்டுச் சிந்தனையும் இளமைக் காலமுதலே தந்தைவழி முதுசொமாக அவருக்குள் காக்கப்ட்ட மேன்மைகள் என்றால் மிகையில்லை.

அந்நாளிலே ஒரு கவிஞராக எங்கள் ஆக்க இசைப் புலத்து அறிமுகமான கோப்பாய் சிவத்துடனான என் உறவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ச்சியையும் வளர்ச்சியையும் இவ்வேளை நினைத்துப் பார்க்கிறேன். பின்னொரு நாளில் எங்கள் பண்பாட்டின் உயர் ஆளுமையான மறுமலர்ச்சி எழுத்தாளர் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா அவர்களின் மேன்மைகளைப் பதிவுசெய்யும் கள ஆய்வு அனுபவத்திடை அவரின் மகனாக சிவம் மனத்துக்குள் உயர்ந்திட்ட கணங்களையும் மீட்டுப் பார்க்கிறேன்.

எங்கள் 'மஹாகவி' பாடிய "அப்பனே மகனாகிய" மலர்ச்சியிலே இன்று நாடறிந்த படைப்பாளியாக, சமூக - ஆன்மீக பணிகளின் பங்காளியாக கலாபூஷணம், வித்யாபூஷணம் பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா என்ற பெரும் ஆளுமையாக நிமிர்துள்ள மாண்பு உயர்வானது.

இன்று சிவம் அவர்களின் மேலான வாழ்வின் பெறுமதியை உணர்த்துவதாய் 'மாந்தர் மாண்பு' மணிவிழா மங்கலப் பொழுதின் வரவாகின்றது.

சிவம் குடும்பத்தினர் வாழ்வில் நல்லன எல்லாம் வசமாக எல்லையிலா என் அன்பு வாழ்த்துக்கள்.

**சிரேஷ்ட பேராசிரியர்,**
**கலாநிதி என். சண்முகலிங்கன்.**
**முன்னாள் துணைவேந்தர்,**
**தலைவர், சமூகவியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

"புகழோ பழியோ எதுவானாலும் இரண்டுமே ஒரு நல்ல மனிதனை அவன் இயல்பாக நடந்து கொண்டிருக்கும் நடையிலிருந்து சில வினாடிகள் நிறுத்தித் தயங்க வைத்து விடக் கூடியவை" என்பது எழுத்தாளர் **மணிவண்ண**னின் கூற்று. அதே எழுத்தாளர் வேறொரு நாவலில் கூறுகிறார், "புகழ்கிறவர்கள் புகழப்படுபவர்களுடைய பொறுப்பைப் புகழ்வதன் மூலமே அவர்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நல்ல புகழ் யாரை வந்தடைகிறதோ அப்படி வந்தடைகிறவனுக்கு அவனது பொறுப்பையும் தகுதியையும் அவனே மறக்க முயல்கிற வேளை பார்த்து நினைவூட்டுகிறது" என்று.

1967இல் ஒரு கவிதையோடும், 'அம்புஜம்' கையெழுத்துப் பத்திரிகையோடும் மறுமலர்ச்சி எழுத்தாளர் **பண்டிதர் ச.ப. சர்மா**வின் மகன் என்ற முதுசொத்தோடும் எழுத்துலகில் காலடி எடுத்துவைத்த இவன் இன்று இலக்கிய, சமய எழுத்துத் துறையிலும், மேடைப் பேச்சிலும், தமிழ் சம்ஸ்கிருத நூல் பதிப்பு - வெளியீட்டுத் துறையிலும் ஆன்மீகப் பணிகளிலும் உலகப் புகழ்பெற்றவனாக வளர்ந்து, இலங்கை அரசின் உயர்விருதாகிய **'கலாபூஷணம்'** விருது பெற்று பாராட்டுவிழாக் காண்கின்றபோது மேற்கூறிய வாசகங்கள் நினைவுக்கு வருகின்றன.

எனவே எனது பணிகளை விரித்து எனது அன்பு நன்றிகளை யாவருக்கும் பகிர்ந்துகொள்ளும் வகையில் இன்று நடைபெறும் விழாவில் இந்தச் சிறு நூலினை உங்கள்முன் சமர்ப்பிக்கிறேன். இக்கட்டுரைகள் யாவும் சமூக விழுமியம் சார்ந்த சிந்தனைகள் என்ற வகையில் ஒரே மகுடத்தின்கீழ் வருகின்றன. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பத்திரிகைகளில் வெளிவந்தவை.

பாராட்டு விழாச்செய்தும் இந்நூலை வெளியிட்டும் தட்டிக் கொடுத்து எனது பணிகளைத் தூண்டும் பாராட்டுவிழாக் குழுவினருக்கும் ஆசியுரை, அணிந்துரை வழங்கிய பெரியோர்க்கும் மதிப்பார்ந்த வாசகர்களுக்கும் எனது பணிவான நன்றி கலந்த வணக்கங்கள்.

**– கோப்பாய் சிவம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| மலரும் நினைவுகள் | 01 |
| சக்தி பிறக்கட்டும் | 06 |
| வாழ்க்கையின் இலட்சியம் இலட்சிய வாழ்க்கையே | 09 |
| ஆற்றுப்படுத்தும் அண்ணல்கள் | 18 |
| உதவிகள் பலவிதம் - ஒவ்வொன்றும் ஒருவிதம் | 25 |
| இரப்பவர்கள் மட்டுமா இரவலர்கள்? | 31 |
| வருவாய்க்கேற்ப வாழ்க்கையை அமைத்தல் | 39 |
| எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்கள் தேறுதல்கள். | 49 |
| நமது கல்விப் பாரம்பரியத்தின் இன்றைய நிலை | 54 |
| இது இவர்களுக்குத் தெரியாததேன்? | 59 |
| நுகர்வோரை நோக்காத வியாபாரங்கள் | 62 |
| சமூக மனநோயாளர்கள் | 65 |
| எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்....... | 68 |
| கமலனும் விமலனும் 1 - 4 | 71 |
| தெருப்பயண ஞானம் | 86 |
| இதயராகங்கள் | 89 |
| இளமை இலக்கிய நினைவுகள் 1 - 5 | 97 |
| தொடர்பாடல் வெற்றிபெற...... | 103 |
| சிந்தனை மேடை | 112 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாயில் மலர்ந்த 'அம்புஜம்' தேசமெங்கும் மணம் வீசியது.

'அம்புஜம்' என்பது ஒரு கையெழுத்துச் சஞ்சிகை. அது கோப்பாய்க் கிராமத்தில் 1967ஆம் ஆண்டு முதல் 1975ஆம் ஆண்டுவரை வெளியாகியது. அதன் பெயர் இலங்கை வானொலி, பேராதனைப் பல்கலைக் கழகம் முதலிய பல இடங்களிலும் பேசப்பட்டது. இது கோப்பாய்க் கிராமத்திற்குப் பெருமைசேர்க்கும் ஒன்று என்பதால் அந்த இதழ் பற்றிய நினைவுகளைச் சற்றே இரைமீட்டலாம் என எண்ணுகிறேன்.

எமது தந்தையார் **மறுமலர்ச்சி** எழுத்தாளர் **பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா** ஆவார். ஈழத்து இலக்கியம் பற்றிய பேச்சு எழுமாயின் அங்கு நிச்சயமாக 'மறுமலர்ச்சி' சஞ்சிகை பற்றியும் பேசப்படும். நாற்பதுகளில் முளைகொண்ட 'மறுமலர்ச்சி'ப் பத்திரிகை ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஈழகேசரிக்கு அடுத்த நிலையில் பேசப்படுவது. புத்திலக்கியம் பற்றிய எழுச்சி மிக்க சிந்தனைகொண்ட சில இளைஞர்களால் தொடங்கப்பட்ட மறுமலர்ச்சிச் சங்கம் அந்தச் சஞ்சிகையை வெளியிட்டது. மிகச்சில ஆண்டுகளே வெளிவந்தபோதிலும் காத்திரமான இலக்கியப் பங்களிப்பு நல்கியது மறுமலர்ச்சி.

'மறுமலர்ச்சி'யுடன் நமது கிராமத்தைச் சேர்ந்த இருவருக்குத் தொடர்பிருந்தது என்பது நமக்குப் பெருமைதரும் விடயமாகும். அச்சஞ்சிகை வெளியீட்டாளர் **'வரதர்'** எனும் **தி. ச. வரதராசன்** அவர்களது வலக்கரமாகவும் அவ்விதழின் இணையாசிரியர்களுள் ஒருவருமாகத் திகழ்ந்தவர் கோப்பாய்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா அவர்கள். அவ்விதழில் பல ஆக்கங்களை இரட்டையர்கள் என்ற பெயரில் வெளியிட்ட இருவரில் ஒருவர் பஞ்சாட்சர சர்மா. அடுத்தவர் **கவிஞர் சாரதா எனும் க. இ. சரவணமுத்து** ஆவார். இவ்விருவரும் நமது கிராமத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சி சஞ்சிகையின் பிரதிகள் அதன் வெளியீட்டாளரான வரதரிடம்கூடக் கைவசம் கிடைக்காத நிலையில் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மாவிடம் அதன் பிரதிகள் நீண்டகாலமாகப் பாதுகாக்கப்பட்டு வந்து இன்று அவரது புதல்வராகிய என்னிடம் இன்றுவரை இருப்பது குறிப்பிடத்தக்க விடயம். அவ்விதழ்களில் வெளியாகிய சிறுகதைகள் எழுத்தாளர் **செங்கை ஆழியான்** அவர்களால் தொகுக்கப்பட்டு **'மறுமலர்ச்சிக் கதைகள்'** என வெளியாகியுள்ளது. அதேபோல அதில் வெளியாகிய கவிதைகள் **'மறுமலர்ச்சிக் கவிதைகள்'** என்ற பெயரில் **கவிஞர் செ. சுதர்சன்** என்பவரால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

மறுமலர்ச்சிச் சங்க இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் 1945ஆம் ஆண்டில் கூடித் தமது செயற்பாடுகளை ஆரம்பித்தபோது முதன்முதல் செய்த வேலை கையெழுத்துச் சஞ்சிகையாக மறுமலர்ச்சியை வெளியிட்டமைதான். இரண்டு இதழ்கள் இவ்வாறு வெளிவந்தன. சாதாரண நாற்பது பக்கக் கொப்பி ஒன்றிலே வரதர் தமது கைவண்ணத்திலே சில ஓவியங்களையும் வரைந்து சில இளைஞர்களின் ஆக்கங்களைக் கையெழுத்திலே எழுதி அந்த ஒரு பிரதியைத் தயாரித்து நண்பர்களிடையே பரிமாறி வாசித்து மகிழ்ந்தனர். அதன்பின்னர் அது அச்சுவாகனமேறிப் புகழ்பெற்ற சஞ்சிகையாகச் சுமார் இரண்டு ஆண்டுகள் வெளிவந்தது.

மிகவும் சிதைந்த நிலையிலே அந்த மறுமலர்ச்சி கையெழுத்துச் சஞ்சிகையின் பிரதிகள் எனது தந்தையாரால் பெருமையோடு எனக்குக் காட்டப்பட்டபோது எனக்குப் பதின்மூன்று வயது. ஏழு எட்டு வயதிலிருந்தே நமது வீட்டில் வாசிப்புப் பழக்கம் நிறைய இருந்தது. சிறுவர் நூல்கள் மாத்திரமல்லாமல் தமிழ்நாட்டிலிருந்து அப்போது வெளிவந்துகொண்டிருந்த கலைமகள், மஞ்சரி முதலிய பல சஞ்சிகைகளையும் நூல்களையும் செய்திப் பத்திரிகைகளின் வாரமஞ்சரிகளையும் நாம் ஆர்வத்துடன் வாசிக்கப்பழகியிருந்தோம். அப்பா எழுத்தாளர் என்பது மட்டுமல்லாமல் எமது அம்மா **இராசாத்தி அம்மா** அவர்களும் நல்ல ஒரு வாசகி என்பதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

மறுமலர்ச்சி கையெழுத்துப் பத்திரிகை எனது பார்வைக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டியது எனது இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாயிற்று. அடுத்த வாரமே ஒரு கொப்பியில் நமது கையெழுத்துச் சஞ்சிகை தயாராகியது. முகப்பை அழகுபடுத்த ஓர் அழகிய தாமரைப் பூவின் படம் கிடைத்தது. அதை ஒட்டிவிட்டு அந்த இதழிற்குப் பெயர் தேடியபோது தாமரையின் பெயர்களுள் ஒன்றாகிய **'அம்புஜம்'** நினைவுக்கு வரவே, அதுவே அச் சஞ்சிகையின் பெயராக அமைந்தது.

'அம்புஜம்' கையெழுத்துச் சஞ்சிகையின் ஆசிரியர் அடியேன். அதற்கு விடயங்கள் தந்த எழுத்தாளர்கள் யார் தெரியுமா? எனது தமையனார் 'ஆனந்தன்' (பொறியியலாளராக உருவாகிய இவர் இராமகிருஷ்ண மடத்திலே சேர்ந்து இப்போது **சுவாமி அட்சராத்மானந்தா** என்ற பெயரில் இந்தியாவில் செங்கல்பட்டு என்ற இடத்தில் புகழோடு விளங்குகிறார், பின்னாளில் **சௌமினி** என்ற பெயரில் பிரபல சிறுகதை எழுத்தாளராகப் புகழ்பெற்ற எனது அக்கா, எனது தம்பி **சோமசேகரன்,** மைத்துனர் **ஸ்ரீதரன்,** அயல்வீடுகளில் வசித்த சில நண்பர்கள். இவர்களது கவிதைகள், கதைகள், கட்டுரைகளுடன் 1967ஆம் ஆண்டு சித்திரைப் புதாண்டு நன்னாளிலே முதலாவது இதழ் வெளியாகியது. எமது தந்தையார் ச. பஞ்சாட்சர சர்மா தமது கைப்பட வாழ்த்து ஒன்றை அதில் எழுதித் தந்திருந்தார். பெரியதந்தையாராகிய **சித்தாந்தபாநு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள்** அவர்கள் (வடகோவை சித்திரவேலாயுத சுவாமி கோவில் பிரதமகுரு) அதிலே ஒரு சிறிய பழங்கதையைக் கூறி சமய விளக்கம் தந்திருந்தார். அதை அவர் சொல்லச் சொல்ல நானே எழுதியமை ஞாபகமாக இருக்கிறது.

இதே ஆண்டில்தான் எனது முதலாவது கவிதை **'ஜோதி'** பத்திரிகையில் வெளிவந்தது. பாடசாலை முடிந்து மாலைநேரம் கோப்பாய் வடக்கு சனசமூகநிலைய வாசிகசாலையில் அதனைப் பார்த்துவிட்டு நிலத்தில் கால்பாவாமல் வீட்டிற்குப் பறந்து வந்து எனது பெற்றோரிடம் அந்தச் செய்தியைக் கூறியது இன்றும் பசுமையாக நினைவிலுள்ளது.

'அம்புஜம்' - காலாண்டுச் சஞ்சிகை எனக் குறிப்பிட்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடத் தீர்மானித்தோம். முதலிரண்டு இதழ்களும் இவ்வாறு வெளியாகிக் கோப்பாயக் கிராமத்தில் உலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. கையெழுத்துப் பத்திரிகை என்பதால் ஒரேயொரு பிரதிதான் தயாராகியிருக்கும் என்பது கவனிக்கவேண்டும். அந்த ஒரு பிரதியை நாமாகவே நமக்குத் தெரிந்தவர்களிடம் கொடுத்து வாசித்துவிட்டுத் தாருங்கள் என்று கூறி மறுபடி அதனைப் பத்திரமாக வாங்கி அடுத்தவரிடம் கொடுத்து...... இவ்வாறு அது ஒரு சுவையான, ஆனால் பல சங்கடங்களோடு தொடர்ந்த கதையாகும். தண்ணீர் பட்டு மை சிதைந்திருக்கும். மூலை மடிந்திருக்கும். சிறு பிள்ளைகளின் கையில் பட்டுக் கசங்கியிருக்கும். அதனால் நமது உள்ளமும் கசங்கும்.

ஆனால் 'அம்புஜத்'தின் வாசகர் வட்டமும் விரியத் தொடங்கியது. எழுத்தாளர்களும் புதிதாக கிடைத்தனர். எனது சித்தப்பா **பிரம்மஸ்ரீ ச. சிவசாமி ஐயர்** அவர்களும் சிறந்த ஒரு வாசகரும் அறிஞரும் ஆவார். அவரது புதல்வர்கள் **ஜோதீந்திர சர்மா, இரவீந்திர சர்மா,** அண்ணி **ஞானப்பூங்கோதை** மற்றும் உறவினர்களும் நண்பர்களும் இணைந்துகொண்டமை இச்சஞ்சிகையின் இரண்டாவது வளர்ச்சிக் கட்டம்.

பாடசாலை நண்பர்கள் சிலரிடம் இவ்விரு இதழ்களும் கிடைத்ததும் எனது சகபாடிகளும் அதில் பங்குகொள்ளத் தொடங்கினர். மூன்றாம் நான்காம் இதழ்கள் வண்ணப்படங்களுடன் உருவாகத் தொடங்கியது. எனது வகுப்பு நண்பன் **ஆனந்தமுருகன்** அருமையான ஒரு ஓவியன். அவனது கைவண்ணம் அம்புஜத்தை மெருகூட்டியது. இந்த மூன்றாம் வளர்ச்சிக்கட்டம் புதிய வாசகர்களையும் எழுத்தாளர்களையும் அறிமுகம் செய்ததோடு மிக நீண்ட தூரத்திற்கு 'அம்புஜம்' பயணம் செய்யும் வாய்ப்பையும் ஏற்படுத்தியது.

எனது சித்தப்பாவின் மகன் **இரவீந்திரசர்மா** (தற்போது ஓய்வுபெற்றிருக்கும் திட்டமிடல் அதிகாரி) அப்போது பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்தார். அவர்மூலமாக அம்புஜத்தின் சில இதழ்கள் பல்கலைக்கழக மாணவர்களிடையே அறிமுகமானபோது அப்போது அங்கே தமிழ்த்துறை விரிவுரையாளராக இருந்த **பேராசிரியர் நா. சுப்பிரமணியம்** அவர்களது கையில் கிட்டியிருக்கிறது. அவர் அம்புஜத்தை அறிமுகம் செய்து சிறப்பித்து பல்கலைக்கழக மாணவர்களிடையே மாணவர் மன்றக் கூட்டங்களில் உரையாற்றியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல எனது பாடசாலை நண்பராக இருந்த **க. தில்லைநாதன்** அவர்கள் மூலமாக **கவிஞர் வ. ஐ. ச. ஜெயபாலன்** அவர்களது கைகளில் அம்புஜம் போய்ச் சேர்ந்திருக்கிறது. இவர்தான் பின்னாளில் இலங்கை வானொலியின் மெல்லிசைப் பாடல். துறையில் பிரகாசித்தவர். இப்போது அதிகம் பேசப்படுகின்ற **'ஆடுகளம்'** திரைப்படத்தில் நடித்துப் புகழ்பெற்றவரும் இந்தக் கவிஞர்தான். இவர்மூலமாக இலக்கிய விமர்சகர் **பேராசிரியர் க. கைலாசபதி** அவர்கள் அம்புஜத்தைக் காணநேர்ந்தது. அவர் இதுபோன்ற பல கையெழுத்துப் பத்திரிகைகளைச் சேகரித்து அவற்றைப் பற்றி இலங்கை வானொலி தேசீய சேவை நிகழ்ச்சியொன்றில் அருமையானதொரு விவரண நிகழ்ச்சியை நடத்தினார். அந்த நிகழ்ச்சிக்கு அம்புஜம் ஆசிரியர் என்ற வகையில் என்னையும் அழைத்து நேரடியாகப் பேட்டிகண்டு எமக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தார்.

எனது தந்தையார் மண்டிதர் ச. ப. சர்மாவின் மாணவி என்ற வகையில் மூளாயைச் சேர்ந்த செல்வி யோகேஸ்வரி அம்புஜத்தின் வாசகியாகவும் எழுத்தாளராகவும் எமது குடும்ப நண்பராகவும் ஆனார். அவர்தான் இப்போது பிரபல எழுத்தாளராக விளங்கும் **திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்** அவர்கள். அவர் கோப்பாயைப் புக்ககமாகக் கொண்டு எமக்குப் பெருமை சேர்ப்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்காலகட்டத்தில் எம்மூர் எழுத்தாளர்களான **வடகோவை வரதராஜன், இராஜமனோகரன்** ஆகியோரது தொடர்பும் கிடைத்து நாம் மூவருமாக இணைந்து **ஈழநாடு** பத்திரிகையில் **பூநாகம்** என்ற குறுநாவலையும் எழுத வாய்ப்புக் கிடைத்தது.

அறிவும் ஆற்றலுமுடைய பல பெரிய இலக்கியவாதிகளை எமக்கு அறிமுகம் செய்துவைக்க உதவியதாகவும் இப்போதும்கூட அறிஞர் மத்தியில் ஒரு நல்ல இடத்தைப் பெறுவதற்கும் வகை செய்துவைத்த அம்புஜம் கையெழுத்துச் சஞ்சிகை என்றும் எமது நினைவில் நிற்கும். அது கோப்பாயின் நற்புகழுக்கும் சிறிது பங்களிக்கின்றது என்ற நம்பிக்கை என் மனத்தில் இறும்பூதெய்த வைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி பிறக்கட்டும்

விநாடிகள் ஒவ்வொன்றாகத் தேய்ந்து நிமிடங்களாகி மணித்துளிகளாகி அதுவும் மறைந்து போகப் புதுப்புது நாட்கள் தோன்றுகின்றன. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி மாதங்களும் வருடமாகி மறைகின்ற போது புத்தாண்டு பிறக்கிறது.

புதிய ஆண்டு புதிய சிந்தனைகள் மலர்வதற்குத் துணை செய்கிறது. புதிய நம்பிக்கைகள் தோன்ற வழிவகுக்கின்றது. புதிய வாய்ப்புகள் உருவாக இடம் கொடுக்கிறது. எனவே புதிய ஆண்டொன்று பிறக்கும் போது புதிய வாழ்க்கை ஒன்று ஆரம்பமாகுவதாகவும் நாம் கணித்துக் கொள்ளலாம்.

நாட்காட்டியின் தாள்கள் ஒவ்வொன்றாகக் கழன்றுபோய் புத்தம் புதிய நாட்காட்டி சுவரிலே தொங்குகிறது. அது நம் இதயத்திலே ஒரு புதிய தீபத்தை ஏற்றிவைக்கின்றது. ஒவ்வொரு பக்கமாக எழுத்துக்கள் பதிக்கப்பெற்ற நாட் குறிப்பு நிறைவுற்று ஒரு மூலையில் இடம் தேடும்போது இன்னொரு புதிய நாட்குறிப்பில் பிள்ளையார் சுழி இடப்படுகின்றது. அதன் வெண்மையான பக்கங்கள் எமது எதிர்காலத்தின் விரிந்த பாதையை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

அந்த வெண்மையான ஒவ்வொரு பக்கத்திலும் விரைகின்ற கரிய கோடுகள் நேரிய வாழ்வின் சீரிய பாதைக்குக் கூரிய எல்லையை வகுக்கும் பாரிய கடமையை நினைவூட்டுகின்றன. புத்தம்புதிய வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தின் சுவையான சம்பவங்களையும் அந்தப் பக்கங்கள் தாங்கி நிற்கப் போகின்றன.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள் தமிழ்ப் பெரியோர்கள். புதிய ஆங்கில ஆண்டு பிறந்த இருவாரங்களில் தைமகளின் சிலம்பொலியும் தரணியெங்கும் ஒலிக்கிறது. இந்தத் தையின் வருகை ஒரு தைரியத்தின் வருகைக்குக் கட்டியம் கூறுகிறது. பீடை பிடித்த மாதம் என்று சொல்லப்படுவதும் பனிக் குளிர் நடுக்கம் நிறைந்ததுமான மார்கழி மாதம் மறைந்து தைமாதம் பிறக்கின்ற போது சூழலில் ஏற்படும் காலநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் இயல்பாகவே எமது மனத்திலும் உடலிலும் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

இந்தப் புத்துணர்ச்சி ஒரு புதிய வாழ்க்கையை எதிர் பார்க்கத் தூண்டுகிறது. புதிய ஆண்டு பிறந்து விட்டது, புதிய வாழ்க்கையும் பிறக்கும்: தை பிறக்கப் போகிறது எனவே வழியும் பிறக்கும் என்ற ஒரு நம்பிக்கை உருவாகிறது. "ஓ நம்பிக்கையே எங்களை நம்பிக்கையுள்ளவர்களாக்கு" என்கிறது ருக்வேதம். நம்பிக்கைதான் நம்மை வாழ்வில் உயர்த்தி வைக்கக் கூடிய மகாசக்தி.

"ஏதோ ஒரு நம்பிக்கையில் தாயத்துக் கட்டிக் கொள்கிறோம். அந்தத் தாயத்துக்கு உண்மையில் சக்தி இல்லாமல் இருக்கலாம். ஆனால் கையில் தாயத்துக் கட்டியிருக்கிறோம் என்ற நம்பிக்கை ஒரு மனிதனுக்கு அசாத்திய சக்தியைக் கொடுக்கும்" என்று ஒரு நாவலாசிரியர் குறிப்பிடுகிறார். மனோதத்துவ ரீதியில் இது ஒரு சுயவசிய முறையாகும். நாம் செய்கின்ற தவறுகள் குற்றங்களைத் திருத்திக் கொள்ளவும் புத்தம்புதிய காரியங்கள் பலவற்றை ஆரம்பிப்பதற்கும்கூடப் புதிய ஆண்டின் பிறப்பு வழிகோலுகிறது.

நாம் நமது தவறுகளைத் திருத்தி நல்ல வழியில் நடை போடுவதாகப் புதுவருடப் பிரதிக்ஞை ஒன்றை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அதை நிறைவேற்றத் தொடர்ந்து பாடுபடுவதில்தான் நமது வெற்றி தங்கியிருக்கிறது. முதலாம் இரண்டாம் தேதிகள் கிழிக்கப்பட்டபின் மீதி முந்நூற்றிச் சொச்சத் திகதிகளும் கிழிக்கப்படாமலே தொங்கவிடப்பட்டிருக்கும் கலண்டர்களையுடைய வீடுகளும் உண்டு. நாட்குறிப்பின் முதல் இரண்டொரு நாட்கள் மட்டும் எழுதப்பட்டபின் மீதி நாட்கள் ஒன்றுமே எழுதப்படாமலே வெள்ளையாக இருக்கும் நாட்குறிப்புகளும் உள்ளன. புதுவருடம் பிறந்த முதற்தினத்திலே பல பிரதிக்ஞைகளை எடுத்துவிட்டு ஒன்றிரண்டு வாரங்களிலேயே அவற்றைக் காற்றில் பறக்கவிடுபவர்களும் இல்லாமல் இல்லை. இவையெல்லாம் அவரவர்களின் மன உறுதியைப் பொறுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய வாழ்க்கையில் நம்பிக்கையும் ஈடுபாடும் உடையவர்களுக்குப் புத்தாண்டும் புதிய தையின் வரவும் புத்துணர்ச்சியூட்டும் புத்தமுதமாக இருக்கும்.

காலம் என்ற சரித்திரத்தின் பொன்னேடுகளைப் புரட்டுபவன் கதிரவன். வாழ்க்கை என்ற நாவலின் அத்தியாயங்களை வரிசையாக எழுதுபவன் பரிதி. சுழலும் உலகில் சுகதுக்க சக்கரத்தை சுழற்றுகின்ற சூத்திரதாரி சூரியன். இதனால்தான் புலர்கின்ற புத்தாண்டின் மகிழ்ச்சியிலே சூரியனுக்கும் பங்குண்டு. நமக்கு வேண்டிய அன்னத்தை வளர்த்துத் தருபவன் ஆதவன். அதனால்தான் அவனை நினைந்து ஆராதனை செய்கிறோம். பொருத்தமாகக் கிடைத்த விளைச்சலைப் பொங்கற்பானையிலிட்டு பொங்கல் பொங்குவோம். பரிதியின் கருணைக்குப் பரிசாக அதனைப் படையலிடுவோம்.

தொடர்ந்தும் நமக்கு இது போல் அன்னம் கிடைக்கவும் காலச்சுழற்சி நமக்குச் சாதகமாக இருக்கட்டும் என்றும் பிரார்த்திப்போம். புதிய சூரியனின் பொற்கிரணங்களில் நமது சோக மேகங்கள் யாவும் கரைந்தழியட்டும்.

- **ஈழமுரசு - *14.01.1987***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் இலட்சியம் இலட்சிய வாழ்க்கையே

வாழ்க்கை! வாழ்க்கை என்பது என்ன? நாம் இந்தப் பூமியில் வந்து பிறந்து விட்டோம். என்றோ ஒரு நாள் இறந்து விடுவோம் என்பதும் நிச்சயம். அந்த இடைக் காலத்தைத் தானே நாம் வாழ்க்கை என்கிறோம். இந்த வாழ்க்கையை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வாழ்கின்றார்கள். சிலர் எப்படியும் வாழ்ந்தால் போதுமென்று வாழ்ந்து விடுகிறார்கள். சிலர் இப்படித்தான் வாழ வேண்டுமென்ற சில இலட்சியங்களுடன் வாழ்கிறார்கள்.

ஒவ்வொருவரும் வாழ்க்கையில் பெறும் இன்ப துன்பங்கள் அனுபவங்களும் கூடப் பலதரப் பட்டதாகவே இருக்கிறது. வாழும் முறைக்கேற்ப வருகின்ற அனுபவங்களும் வேறுபடுகின்றன.

"உன்னுடைய இலட்சியம் எவ்வளவுக்கு உயர்வானதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு நீ வருத்தப்படுவாய்" என்கிறார் சுவாமி விவேகானந்தர். உண்மைதான். மேலான வாழ்க்கையை வாழ்பவர்கள் கஷ்டப்பட்டுத்தான் ஆக வேண்டும். ஆனால் சுகத்தை அனுபவித்துக் கொண்டு கீழ்த்தரமாக வாழ்வதைக் காட்டிலும் துயரங்கள் மத்தியில் மேலான வாழ்வு வாழ்வது நல்லதல்லவா?

"துன்பத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இன்பத்தை எதிர் பாருங்கள் நல்ல சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து வருகின்ற சோதனைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்" என்கிறார் கவியரசு கண்ணதாசன். வரப் போகின்ற இன்பங்களுக்காக நாம் துன்பங்களை சிறிது தாங்கிக்கொண்டால் தான் என்ன?

இந்த இன்பம் துன்பம் என்பதெல்லாம் என்ன? அவற்றை நாம் தானே உருவாக்குகிறோம். "வாழ்வில் இன்பமும் துன்பமும் வரலாம். ஆனால் அவை நம்மை எந்தளவிற்குப் பாதிக்கின்றன என்பதை நிர்ணயிக்கும் சக்தி நம்பிக்கையில் தான் இருக்கிறது" என்கிறார் நாவலாசிரியை சிவசங்கரி.

நமக்கென்று ஒரு வாழ்க்கைப் பாதை அமைந்து விடுகிறது. அதில் நாம் துணிந்து நடைபோட வேண்டியதுதானே? மனம் கலங்குவதோ இல்லாததற்காக ஏங்குவதோ வீண் சஞ்சலத்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும். "சூரியனை இழந்ததும் கண்ணீர் விட்டால், நீ நட்சத்திரங்களையும் இழந்து விடுவாய்" என்கிறார் தாகூர்.

"சிக்கல் மிகுந்ததனாலேயே வாழ்க்கைக்கு ஒரு அர்த்தமும், அதன் மீது ஒரு பற்றும் நமக்கு அதிகரிக்கிறது" என்பது ஜெயகாந்தனின் கூற்று. சுவையான வாழ்க்கைக்கு சிக்கல் அவசியம் தானே?

வாழ்க்கையில் தயக்கமென்பது கூடாது. "மின்விசிறி ஓடும் போது அதிலுள்ள பிளவுகள் மறைந்து ஒரே சுழற்சி வட்டம் தெரிகிறது. நிற்கும் போதுதான் பிளவுகள் தெரிகிறன்றன. ஒரு செயலுமின்றி முடங்கிக் கொண்டிருந்தால் உலக வாழ்வே துன்பமாகத் தெரியும். உழைப்பு இதற்கொரு நல்ல மருந்து" என்பது மணிவண்ணனின் நாவலொன்றில் வரும் கருத்து.

"வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். வாசல் தோறும் வேதனை இருக்கும் வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை" என்ற திரைப்படப் பாடல் எவ்வளவு அர்த்தமுள்ளது.

"துயரப்படுபவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் ஆறுதலடைவார்கள். என்று பைபிள் கூறுவது நமக்கு ஆறுதலளிக்கிறது. தொடர்ந்தும் ஏசுநாதர் கூறுகிறார், "கேளுங்கள் கொடுக்கப்படும். தட்டுங்கள் திறக்கப்படும். தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்று. நமக்கென்று ஒரு வாழ்வு நிச்சயமாக இருக்கிறது. அதற்காக நாம் முயற்சிப்போம்.

உலகின் சரித்திரம் என்பது தங்களிலே நம்பிக்கை கொண்டிருந்த ஒரு சில மனிதர்களின் சரித்திரம்தான். "முதலில் உங்களிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். அதன்பின் ஆண்டவனை நம்புங்க*ர். உணர்வதற்கோர் இதயமும், எண்ணுவதற்கோர் அறிவும், உழைப்பதற்கோர் உறுதியான உடலும் நமக்கு வேண்டும்" என்ற விவேகானந்தரின் வாக்கியத்தை நினைத்து நம்மீது நம்பிக்கை கொள்வோம்.

"ஓ நம்பிக்கையே! எங்களை நம்பிக்கையுள்ளவர் களாக்குக" என்ற ரிக் வேதத்தின் பிரார்த்தனையை நாம் செய்வோம். நமக்குக் கிடைத்த சிறிய சந்தர்ப்பத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்த முயற்சிப்போம். எழுத்தாளர் ஆதவன் சொல்கிறார், "வாழ்க்கையில் எல்லாவற்றுக்கும் எப்போதும் இரண்டாவது வாய்ப்புக் கிடைப்பதில்லை" என்று. எவ்வளவு உண்மை. நாம் இரண்டாவது வாய்ப்பை எதிர்பார்த்திராது முதலாவது சந்தர்ப்பத்தையே பயன்படுத்துவோம்.

"உலகத்தில் சின்ன விஷயம், சின்னத் தொழில் என்று ஒன்றுமே இல்லை. ஒவ்வொரு விஷயமும் முக்கியத்துவம் வாய்ந்ததே. அதை நன்றாக செய்யும்போது சிறப்பேற்படுகிறது" என்கிறார் பிரயாண எழுத்தாளர் மணியன்.

"இந்த விநாடி தியானத்தில் அமிழவேண்டும். அடுத்த விநாடியே அதோ அந்த நிலங்களை உழுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்" என்றார் சுவாமி விவேகானந்தர். எப்போதும் எதற்கும் நாம் தயாராக இருப்போம்.

"வறுமை கண்டு பயந்து விடாதே, திறமையிருக்கு மறந்து விடாதே" என்கிறது திரையிசை. எதிர்காலத்தின் வெற்றிகளை நோக்கி துணிவோடு நடைபோடுவோம்.

"பூபாளம் ஒலிக்கின்ற நாள் வந்துசேரும்
சுந்தர இசையோடு நலம் வந்து சேரும்
நாவாரப் பலர் உன்னை நயந்தேத்தும் காலம்
நாடி வந்துன் காலில் நலமாகச் சேரும்"

என்பது கவிஞர் சிவத்தின் பாடல்.

"சிலுவையைத் தாங்கிவிட்டோம். தாங்கள்தான் அதனை எங்கள் மீது சாத்தினீர்கள். சாகும் வரையில் அதனை நாங்கள் தாங்குமாறு வரம் தருவீர்களாக" என்று அந்தப் பரம்பொருளைப் பிரார்த்திப்போம்.

கென்னடி கூறியது போல "மனித சமுதாயம் வாழ்வின் சகல துறைகளிலும் உன்னத நிலையை அடையவேண்டும் என்ற இலட்சியத்திற்காக" நாமனைவரும் ஒன்றுபட்டும் நம்பிக்கை யோடும் பாடுபடுவோமாக!

வாழ்க்கையில் உன்னத நிலை அடைவதற்காக நாமனைவரும் உழைத்தாக வேண்டும். நம்மால் முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சந்தேகம் நமக்கு எழவே தேவையில்லை. "நீ உன்னால் முடிந்தளவு இன்று நன்றாகச் செயலாற்று, நாளை அதைவிட நன்றாகச் செய்யும் ஆற்றலைப் பெறுவாய்" என்றார் நியூட்டன்.

நம்மால் முடிந்ததை நாம் செய்வோம். மேலும் மேலும் கற்றுக் கொள்வோம். ஒவ்வொரு கணத்திலும், ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு காட்சியிலும், ஒவ்வொரு மனிதரிலும் நாம் முடிந்ததைக் கற்றுக்கொள்வோம். "புத்தகங்களைப் படித்தறிவது மட்டும் இந்த நூற்றாண்டு வாழ்க்கைக்கு போதாது, மனிதர்களைப் படித்தறிந்து கொள்கிற ஞானம்தான் இக்கால சமுதாய வாழ்வில் வெற்றிபெற உதவும்" என்கிறார் பத்திராதிபர் நா. பார்த்தசாரதி.

"விரோதிகளிடமிருந்துகூட மிகப் பல விஷயங்களை அறிஞர்கள் கற்றுக் கொள்கின்றனர்" என்கிறான் அரிஸ்டோபீன்ஸ் என்ற வெளிநாட்டறிஞன். சீனப் பேரறிஞன் கன்பூஷியஸ் கூறுகின்றான், "நல்லவரைப் பார்க்கும்போது பின்பற்ற நினையுங்கள். தீயவரைப் பார்க்கும்போது உங்கள் இதயத்தைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்" என்று. நாம் நலம்நாடிப் பெறுவோம். குறை தேடித் தவிர்ப்போம். நம்பிக்கையோடு முன்னேறுவோம்!

"பலவீனர்களின் பாதையில் தடையாக நின்ற கருங்கல், பலசாலியின் பாதையில் படிக்கட்டாக அமைகிறது" என்று கார்லைல் கூறியதற்கிணங்க எதிர்வரும் தடைகளை எமக்குச் சாதகமாக்கிக் கொள்வோம். "சூழ்நிலைகள் பாதகமாயிருந்தால்தான் நமக்குள்ளிருக்கும் சக்தி வெளிப்படுகின்றது" என்று சுவாமிஜி கூறுகின்றார்.

"நீ உன்னைத் தகுதி வாய்ந்தவனாக ஆக்கிக் கொள். மற்றவர்களின் தேவைகள் உனக்கான சந்தர்ப்பங்களை உன் வீட்டு வாசற்படியில் கொண்டுவரும்" என்பது அப்துல் ரஹீம் எழுதிய கூற்று. இதே கருத்தை சுவாமி சிற்பவானந்தர் உரைக்கிறார், "ஒரு மனிதன் தன்னை எதற்குத் தகுதியுடையவனாக்கிக் கொள்கிறானோ, இயற்கை அதனை வலியக் கொண்டுவந்து தக்க தருணத்தில் அவனுக்குக் கொடுத்துவிடுகிறது" என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேவை வந்தால் கூடவே திறமையும் வந்து விடும்" என்பது "கார்க்கி"யின் கருத்து. நமக்குத் திறமை இருக்கிறது அதை நாம் வெளிப்படுத்த ஏன் தயங்க வேண்டும். நமது செயல்களில் தவறுகள் நிகழலாம், ஆனால் திருத்திக் கொள்வோம்.

"ஒரு போதும் தவறு செய்யாதவன் ஒன்றுமே செய்ய மாட்டான்" என்கிறான் ஆல்பரி. "ஒவ்வொருவரும் தவறு செய்யக் கூடியவரே ஆனால் அத் தவறினை விடாது தொடர்ந்து செய்பவர்கள் மூடர்கள்" என்கிறான் ஸிஸரோ. தவறுகள் குற்றங்களல்ல, அவற்றைத் திருத்திக் கொள்ள முடியும்.

"உனது செயல்களில் தவறு நிகழலாம். அதனை ஒத்துக் கொள்ளத் துணிவு வேண்டும். தவறுகளை ஒத்துக் கொள்ளும் தைரியமும் அவைகளை விரைவில் திருத்திக் கொள்வதற்கான பலமும் தான் வெற்றி பெறுவதற்கான வழி" என்பது அப்துல் றஹீமின் அர்த்தமுள்ள கருத்து.

"மனிதன் உண்மையில் நல்லவனாக வாழ வேண்டுமானால் அவன் தவறு செய்யவும் அனுமதிக்கப்பட வேண்டும்" என்கிறார் ஜெயகாந்தன். நிகழ்ந்த தவறுகள் மூலம் நம்மைப் புடம்போட்டு நிகழும் வாழ்வை நலம் மிக்கதாக அமைப்போம்.

"எவ்வளவோ பழமையான வேலையாயிருப்பினும் அதையும் திறம்படச் செய்வதற்கு ஒரு புது வழி இருந்து கொண்டே இருக்கிறது" என்பதற்கிணங்க நாம் புதிது புதிதாக வாழ்க்கையைச் சீர்படுத்துவோம். பழமையின் பண்பை மறவாது அந்த அத்திவாரத்தில் புதுமையைக் கட்டி எழுப்புவோம்.

"உன்னை நிந்திப்பவர்களுக்கு நீ கொடுக்கும் தண்டனை மௌனமாகவும் ஒழுங்காகவும் உனது கடமைகளைச் செய்வதாகும்" என்று ஓர் அறிஞர் கூறினார். மற்றவர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நமது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நமது கடமையை நிறைவேற்றுவோம். மஹாத்மா காந்தி கூறினார், "உரிமையின் உண்மையான பிறப்பிடம் கடமைதான்" என்று. நாம் கடமையைச் செய்து உரிமையைப் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது செயல்கள் நமது சகோதர மனிதர்களையும் அரவணைத்துச் செல்லட்டும். "ஒற்றுமையாய் வாழ்வதாலே உண்டு நன்மையே, வேற்றுமையை வளர்ப்பதனாலே நேரும் தீமையே" என்பது திரை இசை.

நாமனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபடுவோம். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வோம். சொற்ப அளவிலாவது பரஸ்பரம் மனிதர்கள் புரிந்து கொள்கின்ற அந்தத் தன்மையால்தான் இந்த அளவிலாவது இன்று சமாதானமும் சாந்தியும் அன்பும் நிலைத்திருக்கிறது. நமக்குள் இருக்கும் போலி மரியாதைகளையும் மனம் விட்டுப் பேசுவதில் உள்ள சோர்வையும் நாம் களைவதன் மூலம்தான் உண்மையைத் தேடுகிற நமது பணியை நிறைவு செய்யலாம்.

நமக்குள்ளே இரகசியங்கள் வேண்டாம். மகாத்மா காந்தியிடம் இருந்து, தான் கற்றுக் கொண்ட பாடம் என்று ஜெயகாந்தன் கூறுவது இதைத்தான். "தனி மனித அளவிலும் சரி, சமூக அளவிலும் சரி ரகசிய வழிமுறைகள் எதையும் எதற்காகவும் வைத்துக் கொள்ளாமல் இருப்பதேயாகும்."

"இதயத்தைத் திறந்து நியாயத்தைப் பேசு, வழக்குகள் முடிவாகும்" என்பது திரைக் கவிஞன் கூற்று. நாம் வெளிச்சத்தில் நிற்போம். இருள் நம்மைச் சூழ முடியாது. நமது இதயங்களில் நிழல்விழ வேண்டாம். நாம் நமது நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்வோம். ஆனால், அநாவசியமான தற்பெருமைகளையும், கர்வத்தையும் ஒழித்துக் கட்டுவோம்.

"யாரொருவர் தன்னைப் பற்றி மிதமிஞ்சி நினைத்துக் கொள்கிறாரோ அவருக்கு அந்த நினைப்பே வீழ்ச்சிக்கான காரணம்" என்ற ஷேக்ஸ்பியரின் வார்த்தைகள் நம் நினைவில் இருக்கட்டும். நமக்கு வெற்றியும் வரலாம். தோல்வியும் வரலாம். வெற்றி கண்டு மயங்காமலும் தோல்வி கண்டு துவண்டு விடாமலும் தொடர்ந்து செல்வோம்.

"எழுந்திரு! விழித்திரு!! கோரிய கருமம் கைகூடும் வரை உழைத்திரு!" என்ற விவேகானந்தரின் வார்த்தையை எண்ணி என்றும் உழைத்திருப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். ஏதோ எம்மாலியன்றவரை உழைத்துக் கொண்டுதான் இருக்கிறோம். நாம் செய்கின்ற காரியங்களின் விளைவுகள்தான் நமது உழைப்பின் பலனை வெளிப்படுத்துகின்றன. “அர்த்தம் புரிந்த பின்னர்தான் அந்த அர்த்தத்தைப் பிறப்பித்த பதங்கள் முன்னைக் காட்டிலும் அழகாகத் தோன்றுகின்றன. அதுபோல் காரியமாகிற விளைவுக்குப் பின்தான் சில காரணங்கள் அழகாகத் தெரியும்” இது மணிவண்ணனின் ஒரு மணியான கருத்து.

நாம் அறிந்தோ அறியாமலோ விரும்பியோ விரும்பாமலோ நமது காரியங்கள் ஒவ்வொன்றுக்கும் விளைவுகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

“நீ பார்த்த பார்வைகள் கனவோடு போகும்
நீ சொன்ன வார்த்தைகள் காற்றோடு போகும்
ஊர் பார்த்த உண்மைகள் உனக்காக வாழும்
உணராமல் போவோர்க்கு உதவாமல் போகும்”

என்பது திரைஇசை. நமது செயல் ஒவ்வொன்றும் பிறரால் கவனிக்கப்படுகின்றன, கணிக்கப்படுகின்றன, பேசப்படுகின்றன.

“புகழோ பழியோ எதுவானாலும் இரண்டுமே ஒரு நல்ல மனிதனை அவன் இயல்பாக நடந்து கொண்டிருக்கும் நடையிலிருந்து சில வினாடிகள் நிறுத்தித் தயங்க வைத்து விடக் கூடியவை” என்பதும் மணிவண்ணனின் உரைதான். அதே எழுத்தாளர் வேறொரு நாவலில் கூறுகிறார். “புகழ்கிறவர்கள் புகழப்படுபவர்களுடைய பொறுப்பைப் புகழ்வதன் மூலமே அவர்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நல்ல புகழ் யாரை வந்தடைகிறதோ அப்படி வந்தடைகிறவனுக்கு அவனது பொறுப்பையும் தகுதியையும் அவனே மறக்க முயல்கிற வேளை பார்த்து நினைவூட்டுகிறது” என்று

நமது செயல்கள் பற்றி மற்றவர்களின் கணிப்பு நம்மைத் தடுமாற வைக்கும் என்பது நமக்குத் தெரியும் அதனால் நம்மை மற்றவர்கள் புகழும்படியான காரியங்களையே நாம் தொடர்ந்து செய்து கொண்டிருந்தால் நாம் பின்னோக்க வேண்டிய சந்தர்ப்பம் இல்லையல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காரியத்தைப் படைக்கிற கருவியைச் சார்ந்துகொண்டு மொய்க்கின்ற புகழைவிடக் காரியத்தைச் சார்ந்துகொண்டு அதற்கு ஏதுவாக இருக்கின்ற கருவியைத் தனியாகவும் நிம்மதியாகவும் செயற்பட விடுகின்ற புகழ் எவ்வளவு மேலானது" என்று ஏங்குகிறார் அந்த எழுத்தாளர். ஆனால், இது நடக்க முடியுமா? இன்று மனிதர்களின் திறமைகளை விட்டு மனிதர்களைத்தானே புகழ்கிறார்கள்.

அதனால்தான் "சில வேளைகளில், திறமையைப் பாராட்டுகிறவர்கள் எந்த அளவுக்கு மனப்பூர்வமாகப் பாராட்டுகிறார்கள் என்று தெரியாமல் பாராட்டுக்களைக் கூட ஏற்றுக் கொள்ள முடிவதில்லை" என்பதையும் அவர் குறிப்பிடுகிறார்.

"நல்லவர்களைப் புகழாவிட்டாலும் பரவாயில்லை. அப்படிப் புகழாதவர்களை மன்னிக்கலாம். ஆனால், கெட்டவர்களை அநாவசியமாகத் தூக்கி வைத்து மதித்துப் புகழ்கிறவர்களை மன்னிக்கவே முடியாது"

---- இது உண்மையான ஒரு தார்மீகக் கோபம் தானே?

தீயதைப்புகழ்வதன் மூலம் தீமையை மேலும் வளர அனுமதிக்கலாமா? நமது செயல்கள் மூலம் நாம் மேல் நிலையை அடையப் புகழ் என்பது வழிவகுக்கின்றதெனினும் நாம் அந்த நிலையில் சாமான்ய மனிதர்களிடம் இருந்து தனித்து விடப்பட்டவர்களாக நேரலாம். "செல்வமும், செல்வாக்கும், புகழும் சேரச்சேர அதைக் கண்டு சாதாரண மக்கள் பயப்படத் தொடங்கி மதித்து நிற்கிறார்கள். ஆனால் அவற்றுக்குரியவர்மேல் அன்பை நெகிழ விடக் கூசுகிறார்கள்"

நாம் என்றும் நம்மை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. போலிக் கௌரவமும் அந்தஸ்தும் நமக்கு வேண்டாம். எங்கள் செயல்களுக்கே அந்தப் புகழையும் கௌரவத்தையும் ஒப்படைத்துவிட்டு நாம் வழமை போல் தொழிற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைப் பொறுத்த வரையில் இந்த உண்மை நிதர்சனமானது "ஒரு பெண் புகழ் சம்பாதிக்கலாம், அளவற்ற அறிவைச் சம்பாதிக்கலாம். செல்வமும் செல்வாக்கும் சம்பாதிக்கலாம். ஆனால், சாதாரண உலகத்தில் சாதாரண மனிதர்களிடையே அவர்கள் வாழும் வாழ்க்கையை சம்பாதித்துக் கொள்ளாத வரையில் சாமான்ய உலகில் அவளைப் பெண்ணாக ஒப்புக் கொள்ள மாட்டார்கள்"

நமது பெண்கள்தானே நமது சமுதாயத்தின் சொத்துக்கள். அவர்களின் செயலும் புகழும்தான் நமது சமூகத்தைத் தலை நிமிர்ந்து நிற்க வைக்கிறது. ஒவ்வொரு பெண்ணும் நமது சமுதாய வாழ்வின் முன்னேற்றத்தில் முக்கிய பங்கேற்று நிற்கிறாள்.

"தமிழ்ப் பெண்குலத்தில் வளையொலிக்கும், கைகளில்தான் வீரமும் ஈரமும் வெற்றியும் வாழ்வும் பிறந்து வளர்ந்திருக்கின்றன. அந்தக் கைகளில் வளையோடு தமிழும் வளர்ந்து, தமிழோடு தமிழ்ப் பண்பும் வளர்ந்தது"

"பெண்கள் நம்முடைய சமுதாயப் பண்ணைக்கு விதை நெல்லுப் போன்றவர்கள். வருகின்ற தலைமுறைகளை நன்கு பயிர் செய்ய வேண்டியவர்கள். விதை நெல்லே கெட்டுச் சீரழிந்தால் விளைவு என்ன ஆகும்? நினைக்கவே அச்சமாக இருக்கிறது"

"பாதை தவறிய கால்கள் விரும்பிய
ஊர்சென்று சேர்வதில்லை - நல்ல
பண்பு தவறிய பிள்ளையைப் பெற்றவள்
பேர் சொல்லி வாழ்வதில்லை." என்பது திரை இசை

நமது புதிய சமுதாயத்தின் அத்திவாரங்கள் நமது பெண்கள். நாம்தான் அந்த அத்திவாரத்திற்கு உறுதி கொடுப்பவர்கள்.

நமது செயலும் புகழும் இந்த நாநிலத்தை உய்விக்க வேண்டும். உய்விக்கும் என்ற நம்பிக்கையோடு நாம் உழைப்போம்.

**- *வீரகேசரி 07.03.1986***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றுப்படுத்தும் அண்ணல்கள்

அந்த மகா வித்தியாலயத்தில் அன்று எல்லோரும் கூடிக் கூடி பேசிக் கொண்டிருந்தனர். அதிபரின் இடமாற்றம்பற்றிய சேதி அன்று வந்ததனால். அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றனர். புதிதாக வர விருக்கும் அதிபர் யார் என்பதை அறிவதில் தான் எல்லோருக்கும் பேராவல்.

ஆரோ சபாரத்தினம் எண்டவராம் வாறார். கனகராஜா மாஸ்டர்தான் செய்தி கொண்டந்தார்.

"எங்கை புங்குடுதீவிலை இருந்துதானே வாறார்?" சிவஞானம் மாஸ்டர் இப்படிக் கேட்டதிலிருந்து அவருக்குப் புதிய அதிபரைத் தெரிந்திருக்கலாம் என்ற ஆர்வம் தொனிக்க ஆவலுடன் அவரை நோக்கினர் அனைவரும்.

"புங்குடுதீவிலை இருந்துதான் வாறார். ஆள்நெல்லியடிப் பக்கத்து ஆள் எண்டு கேள்வி!" செய்தி கொண்டந்த கனகராஜாவின் விளக்கம் இது.

"அப்ப சரிதான், எனக்கு ஆளைத் தெரியும்" சிவஞானம் மாஸ்டருக்கு சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது போன்ற மகிழ்ச்சி. மற்றவர்களுக்குமுன் தனக்குப் புதிய அதிபரைத் தெரியுமென்று. அதுவும் ஓரளவுக்குத்தான்.

"ஆள் எந்தப் பகுதியாம்?" ஒரு வயோதிபரான ஆசிரியரின் கேள்வி.

"அவர் ஆட்ஸ் கிராஜுவேட்டாக்கும். அதோடை டிப்புளோமாவுமாம்........"

தனது கேள்வியைப் புரிந்து கொள்ளாத கனகராஜாவின் அப்பாவித் தனத்தை எண்ணி ஏளனமான ஒரு புன்னகையுடன், "அதில்லை ....ஆளின்ரை சாதி சமயம்" என்று இழுத்தார் கிழட்டு மாஸ்டர்.

"உங்களுக்கேன் காணும் அவற்றை சாதியை?" என்று "வெடுக்" கெனக் கேட்ட புரட்சிமாஸ்டர் சொர்ணம் பிள்ளையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் கவனிக்கவில்லை. கொஞ்ச நேரம் சாதி ஆராய்ச்சி நடந்தது. பிறகு புங்குடுதீவுக்குத் தாம் ஏதோ அலுவலாகப் போயிருந்த போது அங்கே ஒரு பாடசாலையில் அப்போது அதிபராயிருந்த சபாரத்தினத்தாரைப் பற்றித் தாம் அறிந்தவற்றையும் கேட்டவற்றையும் கைகால் கண் மூக்கு வைத்து "விளாசி"த் தள்ளினார் கனகராஜா. அன்றைக்கு அவர் தான் கதாநாயகன்.

கனகராஜா போனதினத்தில் ஏதோ விருந்தில் கொஞ்சம் "தண்ணி பாவித்திருந்த" காரணத்தால் இங்கே "குடிகாரர்" என்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தார். இது போலவே அவர் முற்கோபி, "பொம்பிளைக் கள்ளன்" என்றெல்லாம் கனகராஜாவால் புதிய அதிபர் பூதாகாரமான வடிவமாக உருவகப்படுத்தப்பட்டார்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

சின்னத்துரை முழிசியபடி கந்தோரை வளைய வந்தார். பின்னர் பெரியையா விக்னேஸ்வரலிங்கத்திலிருந்து பீயோன் பெருமாள்சாமி வரையில் ஒவ்வொருவரின் முகத்தையும் "வளர்த்த நாய் முகத்தைப் பார்ப்பது" போல மாறி மாறிப் பார்த்துக் கொண்டு ஒரு மூலையில் இருந்தார். அன்றுதான் அந்தக் கந்தோருக்கு, மாற்றலாகி வந்திருந்தார் சின்னத்துரை. புதிய அலுவலகத்தினது "நேச்ச"ரையும் அங்கு கடமை புரியும் உத்தியோகத்தர்களைப் பற்றிய தகவல்களையும் சேகரித்து விடவேண்டும் என்ற ஆவல் அவரை உந்தித் தள்ளியது.

மேலதிகாரிகள் இவரை ஒரு பொருட்டாகவே மதிக்க வில்லை என்பது இவரது முதலாவது கணிப்பாக இருந்தது. சக உத்தியோகத்தர்கள் மெல்ல மெல்ல புன்னகைத்தாலும் கலகலப்பைக் காணவில்லையே! இது இரண்டாவது அபிப்பிராயம்.

பீயோன்மார்தான் சரி என்ற எண்ணத்தில் ஒருவனை அழைத்து "தம்பி உவர் பெரியையா எப்பிடி? கொஞ்சம் "ஸ்ட்ரிக்ற்றோ"?" என்று உசாவினார்.

"உதை நாங்களென்னண்டையய்யா சொல்லிறது? நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகிப் பார்த்தால் தெரியுந்தானே?" என்று வெகு அலட்சியமாகச் சொல்லி விட்டு அவன் விரைந்து போய்விட்டான். இன்னொரு சிற்றூழியனான பெருமாள் சாமி இவரது வலையில் சிறிது மாட்டிக் கொண்டான்.

"என்னதம்பி பெருமாள் சாமி, நான் முந்திச் சிங்களவங்களோடைதான் வேலை செய்தனான். ஆனால் அவங்கள் எவ்வளவு மரியாதை. இஞ்சை எங்கடை ஆக்கள் ஏன் நாயே எண்டும் தேடுறாங்களில்லை....."

பெருமாள் சாமி சிரித்தபடி மௌனமாய் நின்றான். "உவர் "ஹெட்கிளாக்" ஒரு மூலக்கொதியனாம் உண்மை தானோ?"

"அப்பிடிச் சொல்லேலாது..... ஆள் கொஞ்சம் தண்ணிச்சாமி...... மற்றும் படி நல்ல மனிசன்......."

தன்னை மதித்து அவன் மறுமொழி சொன்னதில் சின்னத்துரைக்கு வலு சந்தோஷம். அவன் முகத்தையே ஆவலோடு பார்த்தவராக ஒவ்வொரு கேள்விகளாக எடுத்து வீசுகிறார்.

யார் யார் கொதியன்கள். யார் யார் "தண்ணிச் சாமிகள்" யார் யார் பச்சைத் தண்ணியள். யார் "காசடி" காறர், யார் கதை காவுபவர்கள்.... இப்படி அவனிடம் கறக்கக் கூடிய விபரங்களை யெல்லாம் கறந்து விடுகிறார்.

பெருமாள்சாமி போன சிறிது நேரத்தில் சக உத்தியோகத்தர் சண்முகலிங்கம் இவரிடம் வந்து கதைக்கத் தொடங்கியதும்.

"உவன் பெருமாள் சாமி எப்பிடி? ஆள் ஒரு பச்சைத்தண்ணி போலை கிடக்கு......... அப்பிடித்தானோ?" என்று வினவத் தொடங்குகிறார்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

குமாரசாமி வீதியில் 35 ஆம் இலக்கத்திலுள்ள ஞானகுமாரி என்ற பெண்ணைத் தன் மகனுக்குத் திருமணம் பேசி வந்ததிலிருந்து கணபதிப்பிள்ளை அலையாய் அலைகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரகர் சொன்னதை மட்டும் நம்பமுடியாது. வேறு யாரிடமாவது அந்தப் பெண்ணைப்பற்றிக் கேட்டு அலசி ஆராய வேண்டும் கல்யாணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிரல்லவா?

கணபதிப் பிள்ளையின் இளைய மகள் மஞ்சுளாவுடன் படிக்கும் சுமதியின் தமையனின் மனைவி கமலாவின் சினேகிதி அருணாவுடைய சகோதரனின் மனைவி பூமணியின் தங்கை மனோன்மணி (தலை சுற்றுகிறதா?) இந்த ஞானகுமாரி என்ற கல்யாணப் பெண்ணோடு ஐந்து வருடங்களுக்கு முன் டியூட்டரியில் படித்தவள் என்ற செய்தி கணபதிப்பிள்ளையரின் காதில் விழுகிறது.

உடனே கணபதிப்பிள்ளையால் முடுக்கப்பட்ட இயந்திரமாக மஞ்சுளா விரைகிறாள் மனோன்மணியிடம். (மஞ்சுளா யார்? மனோன்மணி யார்? மணப் பெண் ஞானகுமாரி இவர்களுக்கு என்ன தொடர்பு? இதற்கு முந்திய பந்தியை மறுபடி நிதானமாக வாசித்துப் பார்க்கவும்)

ஞானகுமாரியின் பெயரைக் கேட்டதும் சில நிமிடங்கள் யோசித்து ஐந்து வருடங்களுக்கு முந்திய சம்பவங்களை இரைமீட்டு அவளோடு தான் பழகிய காட்சிகளை மனத்திரையில் கொண்டு வருகிறாள் மனோன்மணி.

"அவள் நல்ல வடிவுதான். குணமும் நல்லது தான். ஆனால் பழக்கவழக்கங்கள் தான்...." என்று இழுத்த மனோன்மணியைத் தன் கேள்விக்கணைகளால் துளைத்தெடுத்த மஞ்சுளா தந்தையிடம் திரும்பி வந்து சொன்ன செய்தி 'டியூட்டரி'யிலை அவளுக்கு ஒரு பொடியனோடை தொடுப்பாம்.

கல்யாணம் நின்று போய் விட்டது.

இதன் பின்னணியில் ஒரு முக்கியமான விஷயம் உண்டு. ஞானகுமாரிக்கும் அவளைப்பற்றி அபிப்பிராயம் சொன்ன மனோன்மணிக்கும் டியூட்டரியில் கடும் போட்டி. அழகிலும் போட்டி, படிப்பிலும் போட்டி. அங்கே அந்த நேரம் 'மன்மதக் குஞ்சாக' விளங்கிய ஒரு வாலிபனுடன் நெருங்கிப் பழகுவதில் மனோன்மணிக்கிருந்த ஆர்வம் ஞானகுமாரியால் தோல்வியடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது குறிப்பிடத்தக்கது. ஞானகுமாரிக்கு அந்த 'மன்மதக் குஞ்சு'விடம் ஈடுபாடு இல்லாவிட்டாலும் அந்த 'மன்மதக் குஞ்சு' ஞானகுமாரியிடம் அசடு வழிந்ததும் மனோன்மணியைப் புறக் கணித்ததும் மனோன்மணிக்குப் பொறாமையை ஊட்டி ஆத்திரத்தையும் கிளப்பியிருந்தது. அதன் விளைவு ஐந்து வருடங்களின் பின் இப்படி ஒரு முடிவைக் கொண்டு வந்தது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

நாளாந்தம் நடக்கின்ற சம்பவங்களின் மூன்று மாதிரிக் காட்சிகள் மேலே தரப்பட்டவை. ஒரு புதிய மனிதரை நாம் சந்திக்க நேரும் போது அவருடன் கூடப் பழக நேரும் போது-- அவரோடு ஒன்றாக வேலை செய்ய நேரும்போது இப்படி ஒரு ஆவல் நேருவது எல்லோருக்கும் இயற்கையே!

இந்த ஆவல் புதியவரைச் சந்திக்க முன்னரே அவரைப் பற்றிய சகல விபரங்களையும் குண இயல்புகளையும் அறிந்து விட வேண்டும் என்று அளவில்லாத ஆசையாகக் கிளர்ந்து இப்படியான கேள்விகளை உருவாக்குகிறது.

அவர்களைப் பற்றி அறிந்து அவர்களுக் கேற்ற வகையில் வளைந்து நடந்து நற்பெயரெடுத்துக் காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் இவற்றின் அடிப்படை நோக்கம். சுயநலம் கலந்த ஒரு தற்பாதுகாப்பு நடவடிக்கைதான் இது.

ஆனால் இது எவ்வளவுதூரம் தமக்குச் சாதகமாக அமையமுடியும் என்பதைப் பலர் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

ஏதோ ஒரு விருந்தில் தற்செயலாகக் கொஞ்சம் குடிபானம் அருந்திவிட்டு நிலைதடுமாறியதாலும் அந்த நேரத்தில் தவறுதலாக ஒரு பெண்ணருகில் சென்று கேலி செய்ய முற்பட்டதாலும் ஒரு அதிபருக்குக் கிடைத்திருக்கும் பெயர்கள் 'தண்ணிச்சாமி', 'பொம்பிளைக்கள்ளன்'.

அந்த ஒரு தினத்தில் நடந்து விட்ட தவறுக்காக அவர் நாளெல்லாம் வருந்தி மீண்டும் அப்படி நடவாத வகையில் பண்போடு நடந்துகொள்பவராக அவர் இருக்கலாம். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வருவதற்கு முன்னரே அவரைப் பற்றி ஒரு கொடூரமான பிம்பத்தை - கற்பனைத் தோற்றத்தை (இமேஜ்) - சக ஆசிரியர் ஒருவர் ஏற்படுத்தி விட்டதனால் இங்குள்ள அனைவரும் அவரைப்பற்றி 'ஒரு மாதிரி'யாகவே நினைக்கத் தொடங்கு கிறார்கள். சக ஆசிரியர்களுடன் வாயடிக்கிற ஆசிரியைகள் கூட இவருக்கருகில் போக நேர்ந்தால் சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கூனிக்குறுகியபடி வெறுப்பை உமிழும் கண்களோடு உரையாடி விட்டு ஓடிவிட நேருகிறது. அதிபர் பாவம் என்ன செய்வார்?

இப்படியான சந்தர்ப்பங்கள் ஒருவரை உண்மையிலேயே அத்தகைய இழிநிலைக்குக் கொண்டு வரவும் கூடும்.

அலுவலகத்திற்குப் புதிதாக இடம் மாறி வருகின்றவர்கள் அங்குள்ளவர்களின் பார்வைக் கோணத்தில் மேலதிகாரிகளை அளவிட முற்படுகின்றனர். உண்மையாகவே குற்றம் செய்த சிற்றூழியர் ஒருவருக்கு கடுமையான தண்டனை வழங்கிய ஒரு மேலதிகாரி 'ஒரு மூலக்கொதியன்' என அந்தச் சிற்றூழியரால் அந்தப் புதிய உத்தியோகத்தருக்கு அறிமுகம் செய்து வைக்கப் படலாம். அதைக் கேட்டுக்கொண்டு அப்படியான ஒரு பிம்பத்தை அந்த மேலதிகாரிக்குப் புதிய உத்தியோகத்தரும் கற்பிப்பாராயின் அது எவ்வளவு தவறானது.

திருமணப் பேச்சுவார்த்தைகளின்போது முன்பின் அறிமுக மில்லாத யார் யாரோ சிலரிடமிருந்து கிடைக்கும் அரைகுறைத் தகவல்களை நாம் அப்படியே ஏற்றுக் கொள்வதன்மூலம் எத்தனை இடையூறுகள் நேர்கின்றன.

ஒவ்வொருவருடைய குண நலன்கள் பொது இயல்புகள் செயல்முறைகள் யாவும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்பவும் பழகும் மனிதர்களுக்கேற்பவும் மாறுபட இடமுண்டு. ஒருவர் இப்படித்தான் நடந்து கொள்வார் என்று அச்சடித்த சித்திரம் போல ஒரு 'இமேஜ்' அமைத்துக் கொள்வது முடியாத காரியம்.

நாம் மற்றவர்களோடு எப்படி நடந்து கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே அவர்கள் எங்களுடன் நடந்துகொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளும் அமைகின்றன. பிறரைப்பற்றி நம் காதில் விழும் செய்திகள் சிலவேளைகளில் தவறான செய்திகளாகவும் இருக்கலாம். பல சந்தர்ப்பங்களில் நமக்குப் பயன்தரக் கூடியவையாயும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் அவை யெல்லாவற்றையும் கேட்டுக் கொள்வது நமது கடமை. ஆனால் நாம் சந்திக்கும் ஒவ்வொருவருடனும் நல்ல பண்பாட்டுடனும் மென்மையாகவும் உண்மையாகவும் பழகிக்கொண்டு, அதன் மூலம் அந்த ஒவ்வொருவரைப் பற்றியும் தெளிவான அபிப்பிராயத்தை நாம் எமக்குள் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

மிகவும் முக்கியமான விஷயம் எங்கள் கோணத்திலே நாம் ஒருவரைப் பற்றிக்கொண்டுள்ள அபிப்பிராயத்தை மற்றவர்கள் மீது திணிக்காமலிருப்பதற்கும் நாம் முயற்சி செய்வது நல்லது.

விவேகானந்தர் சொல்கிறார்.

“பிறர் சொன்ன கருத்துக்களை அப்படியே நீ விழுங்கி விடாதே! அவைகளை நீயும் அலசி ஆராய்ந்து பார். உனக்காகப் பிறரை ஆலோசிக்கும்படி ஒருபோதும் அனுமதியாதே!”

- ***வீரகேசரி 24.06.1984***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம்

"கடமையைச்செய், பலனை எதிர்பாராதே" என்று பகவான் கிருஷ்ணன் பகவத்கீதையில் கூறுகின்றான். ஆனால், இது எங்கள் சமூகவாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கு எவ்வளவு தூரம் ஒத்துவரும் என்பது சிந்திக்கவேண்டிய விஷயம். இன்று நாளாந்த வாழ்க்கையில் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் பயன் எவ்வளவு என்பதை எண்ணிப் பார்த்தபடிதான் செயற்படுகிறோம்.

அதுவும், உதவி என்ற ஒன்று இருக்கிறதே அது இருக்கும்வரை பயன்கருதாத கடமை என்ற விஷயத்தை நினைத்தும் பார்க்கமுடியாது. மனிதன் ஒரு சமுதாய விலங்கு. அவன் கூடி வாழும் பிராணி. ஒருவனில் ஒருவன் தங்கி ஒருவனுக்கு ஒருவன் உதவிசெய்து வாழ்வதுதான் அவனுக்கு முடியும்.

நமது அன்றாட வாழ்க்கையில் உதவி என்பது எவ்வளவு தூரம் பயன்படுகிறது? ஒவ்வொருவரும் ஏதாவது ஒவ்வொரு வகையில் பிறரிடம் உதவிகளைப் பெற்றுத்தான் வாழ்கிறோம்.

"உதவி வரைத்தன்று உதவி! உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து"

என்றார் வள்ளுவர். நாம் பிறரிடம் பெறுகின்ற உதவிகள், நாம் பிறருக்குச் செய்கின்ற உதவிகள் என்பனவற்றை மட்டிடுவது எப்படி? அதற்கு ஓர் அளவுகோல் வேண்டுமல்லவா? அந்த அளவு கோலைத்தான் இக்குறளில் வள்ளுவர் கூறுகிறார், உதவியின் அளவை அந்த உதவியின் தன்மையைக்கொண்டு அளப்பது சரியன்று. இது ஒரு சார்பு வகையைச் சார்ந்தது. சார்பு வேகம் என்பதுபோல, உதவியும் செய்யப்பட்டவரைச் சார்ந்தே அளவிடப்பட வேண்டும். ஒரேவிதமான உதவி இருவருக்குச் செய்யப்பட்டாலும் அந்த இருவரின் தன்மைக்கேற்ப அந்த ஒரே உதவி இருவிதமான, அளவீடுகளாகக் கணிக்கப்படும்.

'இது எப்படி நியாயமாகும்?' என்று சிலர் கேட்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் ஓர் ஆலயத்தில் அன்னதானம் செய்கிறார். அப்போது ஒருகைப்பிடி உணவு எல்லாருக்கும் கிடைக்கிறது. பசித்திருந்த ஓர் ஏழைப் பிச்சைக்காரனுக்கு அவ்வுணவு மிக அவசியமானதாக-அமிர்தமென எண்ணத்தக்கதாக இருக்கும். வீட்டில் வயிறாரச் சாப்பிட்டுவிட்டு 'விடுப்பு'ப்பார்க்க வந்திருந்த இன்னொருவரைப் பொறுத்தவரை இந்த ஒருபிடி உணவு மிகச்சாதாரணமான ஒன்று. இவ்விருவரில் முதல் மனிதனாகிய அந்த ஏழைக்குச் செய்த உதவி மிகப் பெரியதல்லவா?

இதேபோல, வள்ளுவர் அக்குறளில் சொல்லாமல் விட்ட இன்னொருவகைச் சார்பு அளவு கோலும் உதவிக்கு உண்டு. உதவி செய்யப்பட்டவர் தன்மை மட்டுமல்லாமல் உதவி செய்தவரின் தன்மையும், உதவியின் அளவைப் பாதிக்கிறது. முதலில் கூறிய அன்னதானத்தை ஒரு லட்சாதிபதி செய்திருந்தால் அவர் தமது வருமானத்தின் ஒரு வீதத்திலும் குறைவான தொகையையே இதற்காகச் செலவிட்டிருப்பார். ஆனால் ஒரு சாதாரண விவசாயி அந்த அன்னதானத்தைச் செய்திருந்தால் அவன் தனது வருமானத்தில் நாற்பத்தைந்து அல்லது ஐம்பது சதவீதமான பொருளைச் செலவிட்டிருப்பான், ஆகவே விவசாயி செய்த உதவி மிகப் பெரியதாகின்றது.

"உதவி வரைத்தன்று!" என்று வள்ளுவர் கூறுவது என்ன கருத்திலென்று மேலே பார்த்தோம். வரைவு என்றால் மட்டுப்படுத்துதல் என்ற கருத்தும் உண்டு. அப்படிப் பார்த்தால் "உதவி வரைத்தன்று!" என்று சொல்லும் போது உதவியானது இன்ன வகைத்து என்று மட்டப்படுத்தப் படாதது என்ற கருத்தும் கொள்ளலாம். அந்தக் கருத்திலேயே இக்கட்டுரைக்குத் தலைப்பிடப்பட்டிருக்கிறது.

"மச்சான் உன்னட்டை ஒரு உதவி கேக்கலாமெண்டு யோசிக்கிறன்........" என்று சொல்லிக்கொண்டு வந்து நிற்கும் நண்பனைக்கண்டால் சிறிது கலக்கம் ஏற்படத்தான் செய்யும். கடன் கேட்பானோ அல்லது வேறு ஏதாவது இரவல் கேட்பானோ அல்லது ஏதாவது வேலையைச் சொல்லி உடனே செய்துதரக் கேட்பானோ என்று மனம் பதறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகங்கள், ஆஸ்பத்திரிகள் முதலிய இடங்களில் பொதுமக்கள் கூடிநின்று தமது அலுவல்களைக் கவனிக்க முற்படும்போது அங்கே உதவிகள் தேடித்திரிவது எமக்கெல்லாம் பழக்கமான ஒன்று.

அங்கு ஏதாவது பத்திரங்களைச் சரியான முறையில் நிரப்பிக் கொள்வதற்கு அல்லது, எந்த இடத்தில் கையெழுத்துப் போடவேண்டுமெனத் தெரிந்து கொள்வதற்கு அயலில் நிற்பவரிடம் உதவி கேட்பவர்கள் அநேகர்.

இன்னும் சிறிது முன்னேறி. அங்கு வேலை செய்பவர்கள் யாராவது தெரிந்தவர்களாக இருக்கின்றார்களா என்று பார்த்து நேரடியாக அவரிடம் போய் அவர் மூலமாகத் தமது அலுவல்களை விரைவில் கச்சிதமாக முடித்து விடுபவர்கள் பலர். அதுவும், வங்கிகள், ஆஸ்பத்திரிகள், தபால் அலுவலகங்கள் முதலிய இடங்களில் இப்படி உதவிகள் இல்லாமல் வேலைகளை முடித்து வருவது என்றால் அவ்வளவு சுலபமானதல்ல.

கவுண்டர்முன்னே பலர் 'கியூ'வில் காத்து நிற்கும்போது உள்ளே நுழைந்து கனகச்சிதமாகத் தமது விஷயத்தை 'ஒப்பேற்றி' விட்டு வெளியேறுபவர்களைக் கண்டு பல பெருமூச்சுக்கள் 'கியூ'விலிருந்து புறப்படும். ஆனால் தெரிந்தவர்கள் உள்ளே இருக்கின்ற காரணத்தால் சின்னஞ்சிறிய தேவைகள் ஒவ்வொன்றுக்கும் அவர்களிடம் ஓடிச்சென்று தொண தொணப்பவர்களும், நான் 'உள்வீட்டுப்பிள்ளை'யாக்கும் என்ற தோரணையில் பெருமையாக முகத்தைத் தூக்கி வெளியே நிற்பவர்களைப் பார்த்துக்கொண்டு அலுவலகத்துக்குள்ளே அங்குமிங்கும் நடமாடுபவர்களும் பலர் உள்ளனர். இவர்கள் வெளியே காத்துநிற்பவரின் நேரத்தைப் பாழாக்கி ஆத்திர மூட்டுவதுடன் உள்ளே வேலை செய்துகொண்டிருக்கும் உத்தியோ கத்தர்களின் நேரத்தையும் மனநிலையையும்கூட பாழ்படுத்தி விடுகின்றார்கள்.

இபடியானவர்களுக்கு உதவி செய்துவிட்டு அதற்காகப் பிரதி உபகாரமாக அவர்களிடமிருந்து உதவிகளை எதிர்பார்க்கின்ற உத்தியோகத்தர்கள் பலர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி என்பது இது மட்டுமா? பலருக்கும் கைமேற் பயன்தரும் உதவியாக இருப்பது சிபார்சு என்னும் அருமருந்து.

"மாஸ்டர், எங்கடை கனகரத்தினத்தின்ரை பொடியன் உங்கடை பள்ளிக்கூடத்திலை சேர 'அப்ளை' பண்ணியிருக்கிறான் கொஞ்சம் உங்கடை அதிபரிட்டைச் சொல்லி..........." என்று இழுக்கும் நண்பருக்கு மாஸ்டரின் உதவிதேவைப்படுகிறது.

இது போல் சிபார்சுக்குச் சிபார்சு தேடி அலைவர் பலர். "தம்பி செல்வரத்தினம், ஆஸ்பத்திரிக்கு ஒருக்காப் போய் வரவேணும், அங்கை உனக்குத் தெரிஞ்சவை ஆரேன் இருக்கினமே" இது ஒரு விண்ணப்பம்.

"எனக்கு பாமசிஸ்ட்டைத் தெரியும் அவரிட்டைக் கதைச்சுவிடுறன். அவர் DMO விட்டைச் சொல்லி உங்கடை விசயத்தைச் செய்து தருவார். வாங்கோ" இது ஒரு உதவி.

இவரை பாமசிஸ்டிடம் செல்வரத்தினம் அறிமுகம் செய்ய, அவர் DMO விடம் இவரை அறிமுகம் செய்ய..... இது சிபார்சிற்கு சிபார்சு, உதவிக்கு உதவி. வைத்தியர் எழுதிய மருந்துகளை வாங்கிக்கொண்டு, 'பாமசிஸ்ட்'நம்ம ஆள்தானே என்ற எண்ணத்துடன் 'தம்பி- விற்றமின் குளிசை, அஸ்பிறின் இதுகளிலையும் ஏதேன் கொஞ்சம் தாங்கோவன்..... என்று கேட்பவர்கள் பலர். கிடைக்கிற இடத்தில் பிடுங்கினது லாபம் என்பது அவர்களது 'பொலிசி'. 'அஸ்பிறின்' முதலிய இலகுவில் மலிவாக எங்கும் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கூட 'ஓசி'யில் கிடைக்குமென்றால் தட்டிவிடும் இவர் போன்றவர்களால் 'உதவி' என்பதற்கே மதிப்பில்லாமல் போய்விடுகிறது. பிறகு ஒரு அவசர தேவைக்கு உதவி கேட்பது எப்படி?

உதவி என்பது இவை மட்டுமா? ஒருவரை இகழ்வது, புகழ்வது, திருத்துவது, உற்சாகப்படுத்துவது இவைகூட அவருக்குச் செய்யும் மகத்தான உதவிகள் தான்

"புகழ்கிறவர்கள் புகழப்படுகிறவர்களுடைய பொறுப்பைப் புகழ்வதன்மூலமே அவர்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நல்ல புகழ் யாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தடைகிறதோ, அப்படி வந்தடைகிறவனுக்கு அவனது பொறுப்பையும் தகுதியையும் அவனே மறக்க முயல்கிறவேளை பார்த்து நினைவூட்டுகிறது" என்கிறார் நாவலாசிரியர் நா. பார்த்தசாரதி

இதற்குமறுதலையாக "மற்றவர்கள் நம்மை நிந்திக்கும் போது நம்மையே நாம் சந்தேகிக்க வேண்டும். நம்மை மற்றவர்கள் புகழும்போது நாம் மற்றவர்களைச் சந்தேகிக்க வேண்டும்" என்று பிறநாட்டு அறிஞர் ஒருவர் கூறுகிறார்.

புகழ்ச்சி, இகழ்ச்சி, கண்டனம் உற்சாகமூட்டல் இவையெல்லாம் ஒருவனுடைய வளர்ச்சியை உயர்த்தவோ தாழ்த்தவோ முடியும். இவை சரியானவகையில் பயன்பட்டால் ஒருவனுக்கு இவை சரியான உதவியாக அமையும்

"உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, உபத்திரவமாவது செய்யாமலிரு" என்பதும் அறிஞர் ஒருவரின் கூற்று. இவ்வுதவி பண்பாட்டின்பாற்பட்டது. ஒரு எழுத்தாளர் ஒரு சிறு கதையில் சொல்கிறார்.

"நன்னயப் பாங்கு அடங்கியிருப்பது மேசையிலுள்ள பச்சடியைத் தட்டிவிடாமலிருப்பதிலல்ல! யாராவது தவறுதலாகத் தட்டிவிடும்போது அதைக் கண்டுகொள்ளாதிருப்பதில்தான் அந்தப் பண்பாடு அடங்கியிருக்கிறது" என்று. தற்செயலாக இப்படியான தவறுகளை ஒருவர் செய்துவிடும் போது அதைக்கண்டு கொள்ளாமலிருப்பதே அவருக்குச்செய்யும் பேருதவியாகும்.

பிரார்த்தனைகள், நேர்த்திக்கடன்கள், முகமன்கள் இவையெல்லாம் கூட ஒருவகையில் உதவிகள் தான்.

புரவலர்கள், கொடை வள்ளல்கள் ஆகியோரிடம் சென்று அவர்களைப் புகழ்ந்து பாடி முகமன்கூறி உதவிகோருவார்கள், புலவர்கள். அடியார்கள் ஆண்டவனிடம் பிரார்த்தனைகள் வழிபாடுகள் செய்து உதவி வேண்டுவார்கள். இவ்வுதவிகளுக்காக நேர்த்திக் கடன்கள் செய்வார்கள்.

இத்தகைய உதவிகள் சாதாரணமட்டத்தில் நெறிதவறிய உதவிகளாக அமையும்போது அன்பளிப்பு என்ற பேரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லஞ்சங்கள் பெறுவதும் கொடுப்பதும் பதிலுதவிகளாக நிகழ்கின்றன.

உதவிசெய்யப் போய் உபத்திரவத்தை வாங்கிக் கொள்பவர்களும் சிலர் உள்ளார்கள். உதவியை எங்கே செய்ய வேண்டும், எந்த அளவுக்குச் செய்யவேண்டும் என்பதை அறியாமல் உதவி செய்பவர்களே இத்தகைய அல்லலில் மாட்டிக் கொள்கிறார்கள். இவர்களைப்பற்றி ஔவைப் பிராட்டியார் பாடியிருக்கிறார்.

"வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல் - பாங்கறியாப்
புல்லறிவாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மே விட்ட கலம்"

நோயுற்றிருந்த புலிக்கு உதவி செய்து அதன் நோயைத் தீர்த்த வைத்தியனை அந்தப் புலி கொன்றுவிடுகிறது. அதுபோலவே ஈனர்களுக்குச் செய்யும் உதவி கல்லிலிட்ட மண்பாத்திரம் போல உடனேயே பயனற்றுப்போகும் என்கிறார் ஔவை.

எனவே உதவி செய்தலிலும் சரி, உதவி பெறுதலிலும் சரி கவனமாக இருக்கவேண்டியது அவசியமாகின்றது.

"எனக்கு யாருடைய உதவியும் வேண்டாம், பிறருக்கு உதவிசெய்தே என் வாழ்நாள் முழுவதையும் கழித்தவன் நான்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

நாமெல்லாம் சாமானிய மனிதர்கள், நம்மால் அப்படி இருக்கமுடியுமா? ஏதோ எம்மால் இயன்ற உதவியைப் பிறருக்குச் செய்வோம். அளவோடு உதவிகளையும் பெறுவோம். இக்கட்டுரையை இந்த அளவில் முடித்துக்கொள்வது வாசகர்களாகிய உங்களுக்குப் பேருதவியாக இருக்குமல்லவா?

- **பேரருவி 1985**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரப்பவர்கள் மட்டுமா இரவலர்கள்

"ஏற்பது இகழ்ச்சி" என்று தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியார் சொல்லியிருக்கிறார். 'இல்லை' என்பது இல்லையாகும் வரைக்கும் ஏற்பது இல்லாமல் போய்விட முடியாது. இரப்பவர் இல்லாத காரணத்தினால் ஒரு நாட்டிலே கொடுப்பவர்களும் இல்லை என்று ஒரு புலவர் ஒரு நாட்டின் வளத்தைக் கூறும்போது பாடுகிறார்.

ஆனால் இல்லை என்பது இல்லையாகுவதும் இரப்பவர் இல்லாமல் போய் விடுவதும் வெறும் இலட்சியக் கனவுகள்தான். இலக்கியக் கனவுகள் என்றும் சொல்லலாம் இலக்கியங்களில் பாடும்போது இத்தகைய சுவையான கற்பனைகளை வடிக்கலாம் அல்லாமல் நடைமுறையில் சாத்தியமாகுவது இவையல்ல. பாலுக்குச் சர்க்கரை இல்லையென்பாரையும் கூழுக்கு உப்பு இல்லையென்பாரையும்தான் நிதர்சன வாழ்க்கையில் காண முடிகிறது.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்"

என்று சாபமிடுகிறார் வள்ளுவர். ஆனால் இரப்பவர்களும் இரந்து கொண்டுதான் இருக்கிறார்கள். உலகியற்றியவனும் தொடர்ந்து இரப்பவர்களை உற்பத்தி செய்து கொண்டுதான் இருக்கிறான்.

இல்லை என்று ஏங்கி மற்றவர்களிடம் ஏற்பவர்களை இரவலர்கள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாட்டை அரசாட்சி செய்த மன்னர்கள் "புரவலர்கள்" என்று அழைக்ககப்படுகிறார்கள். புரவலர்கள், எல்லாம் வல்லவர்களாகவும் எல்லாம் உள்ளவர்களாகவும் இருந்தனர். அதற்கெதிரான நிலையில் - ஒன்றும் இல்லாதவராகவும் அதனால் என்றுமே இயலாதவர்களாகவும் இருப்பவர்களை இரவலர்கள் என்ற சொல்லால் - புரவலர் என்ற சொல்லுடன் ஒத்திசைக்கின்ற சொல்லால் அழைத்தமை கவனிக்கத் தக்கது.

புரவலர்களை நாடிப் புகழ் பாடிப் பொருள் பெற்று வாழ்ந்த புலவர்களும் ஒரு வகையில் இரவலர்களாகவே இருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும்கூட நமது கண்ணுக்கு முன்னே விதவிதமான இரவலர்கள் இருக்கிறார்கள்.

பொது இடங்களிலும் வீதியோரங்களிலும் நின்று இரப்பவர்கள் மட்டும்தானா இரவலர்கள்? இவர்கள் பிச்சைக் காரர்கள் என்ற பரவலான நாமத்தால் கௌரவமாக அழைக்கப்படும் இரவலர்கள். தமது பாடல் திறமை அல்லது வேறு வகையான திறமைகளைக் காட்டி அதற்கான ஊதியம் போலப் பொருள் கேட்பவர்களும் பாம்பாட்டுதல், குரங்காட்டுதல் வித்தை காட்டுதல் போன்றவற்றின் மூலம் பொருள் சேர்ப்பவர்களும் பலர் இருக்கவே செய்கின்றனர். இவர்களும் இரத்தலின் மூலமே பொருள் சேர்ப்பவர்களாக இருந்தாலும் இவர்களை இரவலர்கள் என்று அழைப்பது விரும்பத் தக்கதல்ல! நியாயமான முறையில் தமது பிரயாசை மூலம் பொருள் சேர்க்கும் இவர்கள் பாராட்டத் தக்கவர்கள்.

இல்லாமை என்ற காரணத்தாலும் இயலாமை என்ற காரணத்தாலும் இரப்பவர்களை விட ஒவ்வாமை என்ற காரணத்தால் இரப்பவர்களும் சிலர் இருக்கின்றனர். அதாவது இந்த உலக வாழ்க்கை தமக்கு ஒவ்வாமை காரணமாக வாழ்க்கையைத் துறந்து சந்நியாச வாழ்க்கையை நாடியவர்களும் நம்மிடம் இரவலர்களாக வருகிறார்கள்.

இவர்களை விட ஆலயங்கள் மற்றும் அறப்பணி நிலையங்களின் பெயரால் நம்மிடம் இரப்பவர்கள் சிலர். இவர்கள் மக்களிடம் பொருள் சேகரித்து அறப்பணி செய்வதோடு தமது வாழ்க்கையையும் நகர்த்தும் திறமைசாலிகள்.

இந்த இரு சாராரைப் பொறுத்த வரை இல்லாமை இயலாமை என்பதன்றி இவற்றையே தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் என்றும் சொல்லலாம். இதில் முரண்பட்ட கருத்துக்கள் பல இருப்பினும் கௌரவப் பிச்சைக்காரர்கள் என்று இவர்களைச் சொல்பவர்களும் உள்ளனர்.

ஆலயங்களுக்குச் சென்று நற்பணி புரிய முடியாத நிலையிலிருப்பவர்கள் அல்லது அது பற்றிச் சிந்திப்பதற்கே நேரமில்லாமல் "பிஸி" யாக ஓடித் திரிபவர்கள் ஆகியோரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனிடத்தில் அழைத்துச் செல்லும் தரகர்களாக - அல்லது கௌரவமாகச் சொல்லப் போனால் தூதுவர்களாக இந்த இருவகை இரவலர்களை நினைப்பவர்கள் உள்ளனர். வெறும் வயிற்றுப் பிழைப்புக்கு இதை ஒரு தொழிலாக மேற்கொண்டுள்ள திறமை மிக்க சோம்பேறிகள் என்று நினைப்பவர்களும் உள்ளனர் இது விவாதத்திற்குரிய ஒன்று.

அதே சமயம் வேறு வாழ்க்கை வசதிகள், தொழில்கள் இருந்தாலும் கூட - ஒரே சமயத்தில் ஆயிரம் பேருக்கு அமுது செய்விக்கத் தக்க வல்லமை இருந்தும் கூட ஒருவகைப் பிரார்த்தனையாக - நேர்த்திக்கடனாக - மடிப் பிச்சை எடுத்து அன்னதானம் செய்பவர்கள் இன்றும் இருக்கின்றனர். சில காலங்களுக்கு முன்னர் பெரும் செல்வம் உடைய கௌரவமான குடும்பத்துப் பெண்ணொருத்தி தன் கணவனின் கொடிய நோய் தீர்ந்து சுகமடைய வேண்டுமென்பதற்காக் காஞ்சி முனிவரின் அருட் கட்டளைப்படி வீடு வீடாகச் சென்று மாங்கல்யப் பிச்சை எடுத்த காட்சியைக் கண்கள் கலங்கும்படியாக ஒரு கட்டுரையில் படித்த நினைவு பலருக்கும் வரலாம்.

இப்படியான சில சம்பவங்கள் இரத்தல் பற்றியும் இரவலர் பற்றியும் பொதுவாக நாம் கொண்டிருக்கும் கீழான அபிப்பிராயத்தை மாற்ற உதவலாம். பிச்சை எடுப்பதை அவமானம் தருவதொன்றாகக் கருதி “ஏற்பது இகழ்ச்சி” என்று ஔவை கூறியிருந்தாலும், பிச்சையிடுவது ஒரு இழிவான செயலன்று. மாறாக அது ஒரு மேலான அறச் செயலென்றே கருதப்படுகிறது. அதனால்தான் “ஐயம் இட்டுண்” என்ற வார்த்தையும் உரைக்கப்பட்டது.

ஆனால் இது எப்படி நியாயமாகும்? ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களல்லவா இவை? ஐயம் இடுவதன் மூலம் ஏற்பதனை மறைமுகமாக வளர்த்தவர்களாவோமே என்று ஒரு கேள்வி எழுகிறது. இது விரிவான விவாதத்திற்குரியது.

“பிச்சை புகினும் கற்கை நன்றே” என்பதும் இன்னொரு பழமொழி கற்றலின் மகத்துவத்தை உரைப்பதற்காக எழுந்த ஒரு வார்த்தை இது. நல்ல காரியம் ஒன்றை நல்ல முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுவதற்காக அவமானத்திற்கு அஞ்சாமல் இரத்தலும் தகுமே என்பது இதன் மூலம் பெறப்படுகின்றது.

ஆதிசங்கரர் ஒரு சமயம் பிச்சையெடுத்த கதை வெகு சுவாரசியமானது. பிரம்மச்சரிய வாழ்க்கையில் இருக்கும்போது பிச்சையெடுத்து வாழ்வது அவசியம். அப்படி அவர் பிச்சை யெடுக்கப் போன ஒரு வீட்டில் பரம ஏழையான ஒரு யுவதியை அவர் காண நேர்ந்தது. அவள் தன்னிடம் இருந்த ஒரே ஒரு உணவுப் பொருளான அழுகிய ஒரு நெல்லிக் கனியைத்தவிர வேறு உணவொன்றும் இவருக்குக் கொடுக்க முடியவில்லையே என்ற கவலையுடன் பிச்சையிடுகிறாள். அவளுக்காக இவர் மஹாலக்ஷ்மியைத் துதித்துப் பொன்மழை பொழியச் செய்தாராம்.

இங்கே ஒரு விஷயம் கவனத்தில் படுகிறது பிச்சையிடப்பட்டவர் பெரிய அருளாளராக இருந்ததால்தானே இத்தகைய பேறு அந்த மாதரசிக்குக் கிடைத்தது. கபட சந்நியாசிகளுக்கு வயிறார உணவு கொடுத்தும் என்ன பயன்? இதனால்தானே "பாத்திரம் அறிந்து பிச்சையிடு" என்று சொல்லியிருக்கிறார்கள்.

இரப்பது என்பது அத்தனை இழிவானதல்ல என்பதை நிரூபிக்க வேண்டுமானால் இன்னொரு விஷயத்தைச் சொல்லலாம். சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே பிச்சையேற்கின்றவர்தானே. அவருக்கு பிக்ஷாடனர் என்று ஒரு பெயர் உண்டு.

இது எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். இதுவரையும் நாம் பார்த்த விதவிதமான இரவலர்களெல்லாம் இரப்பதன் மூலம் வயிறு வளர்க்கின்றவர்களாக அல்லது இரப்பதன் மூலம் ஏதாவதொரு நல்ல காரியத்தை நிலைநாட்டுகின்றவர்களாக இருக்கின்றனர். இவர்களுக்கு ஈபவர்கள் எதையாவது இழக்கின்ற போதிலும் நற்காரியம் ஒன்றை நாம் செய்கிறோம் என்ற நம்பிக்கையோடு ஒரு மனத்திருப்தியோடு ஈகையைச் செய்கிறார்கள்.

ஆனால் இக்கட்டுரையின் கதாநாயகர்களாக எடுத்து ஆராயப்பட உள்ள இரவலர்கள் சற்று வித்தியாசமானவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரப்பதனால் இரவலர்களானவர்கள் முன்னவர்கள். நமது கதாநாயகர்கள் 'இரவல்' வாங்குவதால் 'இரவலர்'கள் ஆனவர்கள் இவர்களைப்பற்றி மாபெரும் காவியங்களே படைத்துவிடலாம்.

இவர்களும் ஒருவகையில் இரவலர்கள்தான். மீண்டும் தருவதாகக் கூறி இரவலாகப் பொருட்களை இரப்பவர்கள். இரவல் என்ற சொல்லிற்கு இரத்தல் யாசகம் என்ற பொருள் அகராதியில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இதுவும் ஒரு வகைப் பிச்சைதான் - மீண்டும் திருப்பிக் கொடுக்கும் வரை.

நாம் ஒவ்வொருவரும் ஏதாவதொரு வகையில் இரவலர்களாகவே இருக்க நேர்கிறது. இது தவிர்க்க முடியாத ஒன்று. இன்று முன்னேறிவரும் உலக நாகரிக யுகத்தில் நமது தேவைகளும் மிக மிக அதிகரித்து வருகின்றன. நமது பொருளாதார நிலையோ அத்தனை தூரம் அதிகரித்து விடுவதில்லை. இதனால் பல தேவைகளை நாம் இரவலிலே சமாளிக்க வேண்டியே நேருகிறது.

நாடுகளே மற்ற நாடுகளிடமிருந்து கப்பல்கள், விமானங்கள் முதலியவற்றையும் படைவீரர்கள், ஆயுதங்கள் இவற்றையும் இரவலாக வாடகைக்குப் பெறுகின்றன. அப்படியிருக்கும் போது தனிமனிதன் எம்மாத்திரம்.

தனி மனிதர்களின் இத்தகைய தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே இரவல் கொடுக்கும் பகுதிகள் வாடகைக்குக் கொடுக்கும் நிலையங்கள் என்று பல உருவாக்கப் பட்டுள்ளன. சைக்கிள் வாடகைக்கு இரவல் கொடுக்கும் கடைகள் உள்ளன. 'வீடியோ டெக்'குகள், 'கசற்'கள் இவையெல்லாவற்றையும் இன்று இரவல் கொடுக்கவென்றே நிறுவனங்கள் உள்ளன.

லோன்றிகள் மூலமாக இரகசியமாக உடுப்புகள்கூட சில சந்தர்ப்பங்களில் இரவல் கொடுக்கப்படுவது பகிரங்க ரகசியம். பொது நூலகங்களில் நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. பத்திரிகை, சஞ்சிகைகளையும் புத்தகங்களையும் இரவல் கொடுப்பதன் மூலம் அவற்றின் விற்பனை பாதிக்கப்படுகிறது என்பது உண்மைதான். எனினும் எல்லாரும் தமது எல்லாத் தேவைகளையும் விலைக்கு வாங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயோகிக்க முடியாது. இதனால் இத்தகைய இரவல் கொடுக்கும் பகுதிகள் அவசியம் தான்.

ஆனால் முக்கியமான விஷயம் இரவல் வாங்குவதும் இரவல் கொடுப்பதும் ஒரு எல்லைக்குள் இருப்பது நல்லது. ஒருவர் தனது தேவைகள் எல்லாவற்றையும் இரவல் பெறுவதன் மூலமே சமாளித்து விடலாம் என்று நினைத்து விட்டால் ஒரு கட்டத்தில் மிகுந்த சிரமத்தை அவர் எதிர் நோக்க நேரும்.

இரவல் பெறப்படும் பொருட்களில் முதலிடம் பெறுவது பேனைதான். பொது இடங்களில் தடீரென ஒரு கையெழுத்திற்காக அல்லது ஒரு படிவம் நிரப்புவதற்காக எனப் பேனையை அருகில் நிற்பவர்களிடம் வாங்குவார்கள். கொடுத்தவர் மறந்துபோய் தம்பாட்டில் போய் தமது தேவைக்குப் பேனை இல்லாமல் அங்கலாய்ப்பார்.

பேனைக்கு அடுத்தபடியாக வாகனங்கள் இரவலில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தமக்கென்று ஒரு சைக்கிள்தானும் வைத்திருக்காமல் மற்றவர்களுடைய சைக்கிள், மோட்டார் சைக்கிள் இவற்றை வாங்கிக்கொண்டு மைல் கணக்கில் பயணம் செய்து தமது காரியத்தைச் சாதித்து விடுபவர் பலர்.

"மச்சான் உன்ரை சைக்கிளை ஒருக்கால் தாடா, உதில போட்டு ஒரு பத்து நிமிஷத்திலை வந்திடுவன்" என்று சொல்லி ஒருவர் சைக்கிளை வாங்கிச் சென்றபின் மணிக்கணக்கில் அது வருமென்று காத்திருப்பார் உரிமையாளர். தன்னுடைய அலுவல்களைக் கவனிக்க நேரத்தையும் விரயமாக்கிக் கால் நடையாகவோ அல்லது பணம் செலவழித்து பஸ்ஸிலோ சென்று வந்த பின்னர் நண்பர் தமது காரியமெல்லாம் முடித்து விட்டு சாவதானமாக வருவார். "வெரி சொறி மச்சான் கொஞ்சம் மினைக்கட்டுப் போச்சு" என்று அசடு வழிந்துவிட்டுப் போன பிறகு சைக்கிளைப் பார்த்தால் காற்றுப் போய் விட்டிருக்கும். இப்படிப்பட்ட அனுபவங்களைப் பலர் பெறுவதுண்டு. நண்பருக்குச் சைக்கிள் இரவல் கொடுத்ததால் தாம் அடைந்த கஷ்ட நஷ்டங்களைச் சொல்லப் போனால் நடப்பதென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உவன் சரியான கசவாரம் ஒரு அந்தரம் ஆபத்துக்குச் சைக்கிள் இரவல் தரவும் பிடிக்காது" என்ற புகழாரம் சூட்டப்படும்

பெண்களைப் பொறுத்த வரையில் இரவலில் முதலிடம் பெறுவது நகைகள்தாம். நகைகள் அணியாவிட்டால் பிறர் தம்மைப் பார்த்து நகைப்பார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டு. அதனால், இரவல்நகையாவது அணிந்துகொண்டுதான் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வார்கள். இருக்கிற நகைகளுடன் சமாளிக்க வேண்டுமென்பதற்காகக் கல்யாணவீடு முதலியவற்றுக்குக் காலையில் ஒருவர் போய் வந்தபின் அந்த நகைகளை வாங்கிக் கொண்டு மாலையில் அடுத்தவர் போகநேரும். இரவல் நகைகளால் ஏற்படும் சிக்கல்களை வைத்து எழுந்த கதைகளோ அநேகம். நகைகளுக்கு அடுத்தபடியாக உடுப்புகள் இரவல் வாங்கப்படுகின்றன. "இரவல் புடவையிலை இது நல்ல கொய்யகமாம்" என்ற பழமொழியும் இங்கு கவனிக்கத் தக்கது.

"அம்மா உந்த அரிதட்டை ஒருக்கா வாங்கியரட்டாம்" என்ற குரல் முதல், "தம்பி உங்காலை முன் வீட்டு முருகேசண்ணரிட்டை அந்தக் கோடரியை ஒருக்கா வாங்கியா" என்ற குரல்வரை நாளாந்தம் ஒலிக்கும் குரல்கள் எத்தனை. கோடரி, குப்பைவாரி, அரிதட்டு என்று தினசரிப் பாவனைக்குரிய சாதாரண பொருட்களை வாங்காமலே இரவலில் சமாளித்து விடும் திறமைசாலிகளான "இரவலர்"கள் பலர் நம்மிடையே உள்ளனர்.

ஜப்பான்காரன் பொதுவாக இரவல் கொடுக்க விரும்புவதில்லையாம். அதே நேரத்தில் அவன் இரவல் வாங்குவதையும் முற்றாகத் தவிர்த்து வருகிறான். ஆனால் நாம் நானூறு மீற்றர் தொலைவில் உள்ள கடைக்குப் போவதற்கு நடந்து போக மனமில்லாமல் இரவல் சைக்கிளை நண்பனிடம் நாடுகிறோம். அவன் வந்து கேட்பதையும் கொடுக்கத்தானே வேண்டும்.

ஒரு பொருள் கிடைக்கக் கூடிய நேரத்தில் இரவல் வாங்கியே சீவித்து விட்டு "அவுட் ஒவ் ஸ்ரொக்" ஆன பிறகு அவலப்படுகிறவர்கள் பலர். நமக்கு அடிக்கடி தேவைப்படக்கூடிய பொருட்களை எப்படி கஷ்டப்பட்டாவது சொந்தமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிவிட்டால் ஏன் வீண் சிரமம்.

இரவல் கொடுப்பதில் முக்கிய பங்கு வகிப்பது புத்தகங்கள். புத்தகம் இரவல் போனால் திரும்பி வருவது அபூர்வம். அப்படித் திரும்பி வந்தாலும் அது கிழிந்தபடியோ அழுக்கடைந்து கட்டுக்கள் கழன்று வருவதைக் காணலாம். இது அனுபவ பூர்வமான உண்மை. இதை நகைச்சுவையுடன் கூறுகிறார் 'அண்டோல் டிரான்ஸ்' என்ற அறிஞர். "புத்தகங்களை இரவல் கொடுக்காதீர்கள். யாரும் அவற்றைத் திருப்பிக் கொடுப்பதில்லை. என் நூல் நிலையத்தில் உள்ள புத்தகங்களெல்லாம் பிறரிடமிருந்து இரவல் வாங்கியவைதான்."

இப்படி இரவலர்கள் இரவல் வாங்கிக் கொண்டே இருப்பதனால் உடையவர்கள் அவ்வப்போது தற்காலிகமாக இவற்றை இழந்து கொண்டிருப்பதுடன் ஒரு சமயம் நிரந்தரமாவே இழக்கவும் நேரலாம். அத்தோடு இரவல் போன பொருள் உருப்படியாகத் திரும்பி வருமோ என்னவோ என்ற ஏக்கத்தில் மனநிம்மதி இழந்தவர்களாகவே தினமும் வாழ நேர்கிறது. ஒவ்வொரு இரவலரை அடுத்திருக்கிற ஒவ்வொரு உடையவர்களும் இழப்பவர்களாகவே இருக்கின்றார்கள். 'இரவலர்'கள் இதை உணர்வார்களா?

**- வீரகேசரி 16.09.1984**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருவாய்க்கேற்ப வாழ்க்கையை அமைத்தல்

நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த விருப்பு வெறுப்பு என்ற ஒன்று இல்லாமலே இந்த உலகில் வந்து பிறந்து விட்டோம். இறப்பு என்பது எப்போது வரும் என்பதும் நமக்குத் தெரியாது. இந்த இரு எல்லைகளுக்கிடையில் வரும் நமது வாழ்க்கையை நாம் வாழ்ந்துதான் தீரவேண்டும்.

பிறந்ததும் இறக்கப்போவதும் நம் கையில் இல்லை. என்றாலும்கூட இவ்வுலக வாழ்க்கை என்பது நமது கைகளில்தான் தங்கியிருக்கிறது. 'எப்படியும் வாழலாம்' என்ற விட்டேற்றியான அலட்சிய பாவத்துடன் வாழாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்கிற தீர்க்கமான ஓர் இலட்சிய தாகத்துடன் நமது வாழ்க்கையை நாம் நடத்த வேண்டும்.

"ஆறு கரையில் அடங்கி நடந்திடில் 'காடு' வளம் பெறலாம்."

நாம் நமது வாழ்க்கைக்கும் சில எல்லைகளை வகுத்து சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி சில நெறிமுறைகளுக்கிடையில் வாழும்போதுதான் வளமான வாழ்க்கை அமைகிறது.

வளமான வாழ்க்கைக்கு வேண்டியவை எவை? "மனிதனின் அத்தியாவசிய தேவைகள் உணவு, உடை, உறையுள் ஆகியனவாகும்" என்று ஆரம்ப வகுப்பு மாணவர்களாக இருந்தபோது நாமெல்லோரும் படித்திருக்கிறோம். இம் மூன்று அத்தியாவசிய தேவைகள் மட்டுமல்லாமல் ஏனைய நமது சகல தேவைகளுக்கும்கூட அடிப்படைத் தேவையாக உள்ளது செல்வம் என்பதைச் சற்றுச் சிந்திக்கும் போது நாம் உணர முடியும்.

> 'கல்லானே யானாலும் கைப்பொருள் ஒன்றுண்டாயின்
> எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் - இல்லானை
> இல்லாளும் வேண்டாள் மற் றீன்றெடுத்த தாய் வேண்டாள்
> செல்லாதவன் வாயிற் சொல்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஔவைப் பிராட்டியார் கூற்று. இது மிகைப் படுத்திய ஒரு கூற்றுப்போல் தோன்றினாலும்கூட உண்மையில் பொருள், பண்டம், காணி, பூமி என்பன இல்லாமல் இன்று இவ்வுலகில் வாழ்வது முடியாத காரியமாகும். ஔவைப் பிராட்டியின் இதே கருத்தை இரண்டே அடிகளில் அழகாகக் கூறி விட்டார் வள்ளுவர்.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு"

இப்படிக் கூறியதோடமையாது ஒரு பொருட்டாக மதிக்கத் தக்க சிறப்பெதுவுமில்லாதவர்களைக் கூட மதிப்புடையோராகச் செய்ய வல்லது பொருள் என்கிறார் அவர். பொருள் செயல்வகை என்றொரு அதிகாரத்தையே அமைத்தவரல்லா வள்ளுவர்.

பொருள் காரணமாக நமக்கேற்படும் கஷ்டங்களைப் பாடிச் சென்ற புலவர்களும் அநேகர். அதில் ஒன்று.

அர்த்தானாம் ஆர்ஜனே துஃகம்
ஆர்ஜிதானாம் ச ரக்ஷணே
நாசே துஃகம் வ்யயே துஃகம்
கிமர்த்தம் துஃக பாஜனம்'

என்று வடமொழிப் புலவர் ஒருவர் பாட அதே கருத்தைத் தமிழிலே,

'ஈட்டலும் துன்பம் மற் றீட்டிய ஒண் பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம் - காத்தல்
குறைபடில் துன்பம் கெடில் துன்பம் துன்புக்கு
உறைபதி மற்றப் பொருள்"

என்று நாலடியார் கூறிப்போனதும்.

'இன்னல் தரும் பொருளை ஈட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலும் துன்பமே'

என்றிப்படி வேறொரு புலவர் சொல்லியிருப்பதும் எல்லாம் நமது கவனத்தில் படவே செய்கின்றன. ஆனாலும் இப்படியான துன்பங்களுக்குக் காரணமான பணத்தை நல்ல வழியில் சேர்த்து நல்ல வழியில் சேமித்து நல்ல வழியில் செலவழித்து நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை ஒரு மேலான நிலையில் நடத்திச் செல்லவேண்டும் என்ற இலட்சிய வேகத்தையே இவை ஏற்படுத்து கின்றன.

வள்ளுவர் கூட நமக்கு இப்படியொரு ஆர்வத்தைத் தூண்டும் வகையிலே ஒரு குறளைத் தந்திருக்கிறார்.

'செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃதனிற் கூரிய தில்'

உனது எதிரிகள் பகைவர்களை வென்று அவர்களது செருக்கை அழித்து விடுவதற்கு இரும்பிலும் பார்க்கக் கூரிய ஆயுதமாக இருப்பது பொருள்தான். ஆகவே யாரையும் விட உயர்ந்த உன்னதமான ஒரு நிலைக்கு உன்னை நிலைப்படுத்து வதற்கு நீ பொருளைத் தேடுவாயாக" என்கிறார் திருவள்ளுவர்.

இனி, நமது விஷயத்தை நோக்கி நாம் மெல்ல நகருவோமா? "வருவாய்க்கேற்ப வாழ்க்கையை அமைத்தல்" பற்றிச் சிந்திப்பதே நமது பணி எனினும் வருவாய் என்பதென்ன? அத்தகைய வருவாய் நமக்கு ஏன் அவசியம் என்பதைப் பற்றிய அடிப்படை உணர்வும், அந்த வருவாயைத் தேடுவதற்கு நாம் அடையும் கஷ்ட நஷ்டங்களும் அவற்றின் விளக்கங்களும் நமக்குத் தெளிவாக இருந்தால்தான் நாம் வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கையை அமைப்பது பற்றிச் சிந்திக்க முடியும். இதனால் நமது நோக்கத்திற்கு முன்னீடாக இவை பற்றிச் சிந்தித்தோம்.

ஏதோ ஒரு வகையில் சிரமப்பட்டு எந்த விதத்திலாவது பொருள் தேடிக் கொள்வது அவசியம் என்பதில் எந்தவித கருத்து வேறுபாட்டிற்கும் இடமில்லை. "எந்த விதத்திலாவது" என்று கூறும் பொழுது கொள்ளை, வழிப்பறி போன்ற தீய வழிகளை மனதில் கொண்டு எழுதப்படவில்லை. பழிபாவங்களுக்கு அஞ்சி பிறர்க்கு ஒரு தீங்கு நேராத வகையில் நல்ல வழியிலே பொருளைத் தேடி அதை இல்லாதவரோடு பகிர்ந்து நாமும் அனுபவிக்க வேண்டும் என்பதே முறை. இவ்வகையில் பொருள் தேடும் போது மேலான உத்தியோகங்கள், அரச பதவிகள், நல்ல முயற்சிகள் மூலமாகத்தான் பொருள் தேடவேண்டும் என்பதே கருத்து. "முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்" அது மனத்திற்கும் நிம்மதியைக் கொடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித் தேடிய பொருள் நமது நல்வாழ்க்கைக்கு உதவவேண்டும். நல்ல வகையில் மகிழ்ச்சியுடையதாக பிறர் புகழத் தக்க வகையில் மேன்மையானதாக அந்த வாழ்க்கை அமைய வேண்டும். அதுவும் நமது வருவாய்க்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும் இதுதான் நமக்கு முன்னே இருக்கின்ற பிரச்சினை.

பிரச்சினை என்ற ஒரு கேள்விக் குறியைக் கண்டவுடன் வியப்புக்குறியாக மலங்க மலங்க விழிப்பதில் பயனில்லை. நமக்கு முன்னே வரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு போராடிச் சரியான தீர்வைத் தீர்க்கமாக எடுத்து வெற்றி காண்பதுதானே அழகு.

பலவீனர்களின் பாதையில் தடையாக நிற்கும் கருங்கல் பலசாலியின் பாதையில் அவனது முன்னேற்றத்திற்கான படிக்கல்லாக அமைகிறது என்று ஓர் ஆங்கில அறிஞன் கூறியிருக்கிறான்.

பணம் என்பது வாழ்க்கையின் முக்கிய தேவை என்பதும் அதைத் தேடுவதுதான் பிரச்சினை என்பதும் உண்மைதான். ஆனால் கிடைக்கின்ற பொருளை ஏற்ற வழியில் செலவு செய்து வாழ்வை வளம்படுத்துவதுதான் மிக முக்கியமான விஷயம். எவ்வளவு சம்பாதிக்கிறோம் என்பது கேள்வியில்லை. அதை எவ்வாறு செலவழிக்கிறோம் என்பதே கேள்வி. வருவாய்க்கு ஏற்றபடி வாழ்க்கைத் தரத்தை அமைத்து செலவுகளைச் செய்து வந்தால் நிம்மதியான வாழ்க்கை நிலவும். செலவு வரவை விட அதிகரித்தால்...........?

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மானமிழந்து மதிகெட்டு - போனதிசை
எல்லார்க்கும் பொல்லானாய் எழுபிறப்பும் தீயனாய்....

இப்படியொரு நிலை ஏன் வரவேண்டும்? தனது வரவு செலவைத் தானே அறியாத நிலை இதற்கொரு காரணம். தேவைகள் ஏற்படும் போதெல்லாம் செலவு செய்ய முடியாது. நமது வருவாய் எவ்வளவு என்பதை உணர்ந்து அதற்கேற்பவே நமது தேவைகளை மட்டுப்படுத்த வேண்டும். இதற்கு நமது வரவு செலவு விபரங்கள் கணக்கு வழக்காகப் பதிவில் இருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எழுதி வழங்காதவன் வாழ்க்கை நிதமும்
கழுதை புரண்ட களம்"

என்பது பழமொழி. எமக்குக் கிடைக்கின்ற வருவாய்கள் யாவும் எழுத்திலே பதியப்பட வேண்டும். நாம் செய்கின்ற செலவுகளையும் கிரமமாக எழுதி வரவேண்டும். இரண்டொரு மாதங்களின் பின் மாதாந்த வரவு செலவுக் கணக்கை பார்க்கும் போது நமது வாழ்க்கைத் தரத்தை ஓரளவு கணிப்பிட முடியும். நாம் சம்பாதிக்கும் பணம் யாவும் எங்கே எப்படிப் போகிறது என்று இதுவரை பிரமித்து நின்ற நாம் நமது கணக்குக் கொப்பியைப் பார்த்ததும் எங்கள் வாழ்க்கையை மறுபரிசீலனை மதிப்பீடு செய்ய முடிகிறது.

அடுத்த மாதத்திற்கு எவ்வளவு பணம் தேவை என்பதை முன்கூட்டி உத்தேசிக்க முடிகிறது. வருமானத்திற்கும் உத்தேச செலவுக்கும் இடையில் ஏற்படும் இடைவெளியை நிரப்ப என்ன செய்யலாம் என யோசிக்க முடிகிறது. செலவை எந்தெந்த வகைகளில் கட்டுப்படுத்தலாம் எனத் திட்டமிடமுடிகிறது. இதுதான் வருவாய்க்கேற்ப வாழ்க்கை அமைக்கும் முதற்படி.

உண்மையாக, இன்றைய வாழ்க்கைத் தரத்தில் வருவாய்க்கு ஏற்றபடி செலவைக் கட்டுப்படுத்திவிடுதல் என்பது அவ்வளவு தூரம் இலகுவானதொன்றல்ல. 'ரியூப்' பிலிருந்து வெளியேற்றப்பட்ட பற்பசை மீண்டும் அதற்குள் செலுத்தும் முயற்சிக்கு ஒப்பானதுதான் இது,

ஆனால் நாம் முதலில் செய்ய வேண்டியது, எப்படியாவது சில உபரிவருமானங்களை ஏற்படுத்திக் கொள்வதுதான். ஒவ்வொரு மாதத்திலும் ஒரே மாதிரியான குறிப்பிட்ட சில செலவுகள்தான் வரும் என்று எதிர்பார்க்க முடியாது. எதிர்பாராத விதமாகக் கல்யாண வீடு, கிருகப் பிரவேசம் முதலிய விசேஷங்களுக்கான அன்பளிப்புச் வெலவுகளோ அல்லது திடீர் விருந்தினர்கள் வரவால் ஏற்படும் செலவுகளோ அல்லது குறைந்த பட்சம் மருத்துவச் செலவுகளோ ஏற்பட்டுக் கொண்டிருக்கும்

ஆகவே இவ்வளவுதான் நமது செலவு என்றில்லாமல் திடீர் செலவுகள் அடிக்கடி வருவது போல், இவ்வளவுதான் நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாய் என்றில்லாமல் ஏதாவது மிகச் சிறிய வருமானங்களாவது அவ்வப்போது வந்து கொண்டிருக்கக் கூடியதாக நாம் சில ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்.

நிலையான நமது தொழிலைவிடப் பகுதிநேர வேலையாக ஏதாவது சிறு தொழில்களைச் செய்ய முயற்சிக்கலாம். வீட்டுத்தோட்டம் ஒன்றை அமைக்கலாம். வீட்டுத் தோட்டத்திலே அமையும் காய்கறிச் செடிகள் நமக்கு மேலதிக வருமானம் எதையும் தாராவிட்டாலும்கூட எமது செலவில் ஒரு சிறு பகுதியையேனும் குறைக்க உதவுமல்லவா?

இதைவிடச் சிறு சிறு கைத்தொழில்களை வீட்டில் குடும்பத்தவர் அனைவரும் சேர்ந்து செய்யலாம். அப்பளம், வடகம், ஊறுகாய் முதலியவற்றை வீட்டிலே தயாரித்து அவற்றை உள்ளூர் வியாபாரிகள் மூலமாகவோ, வீட்டில் சொந்தமாகவோ விற்பனை செய்யலாம்.

சிறு சிறு கடதாசிப் பைகள், தபாலுறைகள் போன்ற வற்றைத் தயாரித்து விநியோகிக்கலாம். பனையோலைப் பொருட்கள், தும்பு வேலை, மர வேலை, புற்பாய்கள் பின்னுதல் போன்றவற்றைப் பழகிக் கொள்ளலாம். கச்சான் கடலை வாங்கி உடைத்து வறுத்துப் பைக்கற் பண்ணி விற்றல், கைமுறுக்கு முதலிய சிறு சிறு பலகாரங்கள் செய்து விற்றல் முதலியவற்றைச் செய்யலாம்.

டொபி, பொரி விழாங்காய் போன்ற நீண்ட நாள் வைத்துண்ணக் கூடிய இனிப்புப் பதார்த்தங்கள் செய்து விற்பனை செய்யலாம். வீட்டுப் பெண்கள் தையல், பின்னல் வேலைகளில் ஆர்வமுள்ளவர்கள் அவற்றின் மூலம் கூட சிறு வருமானத்தைத் தேடிக் கொள்ளலாம். தவிர ஓய்வு நேரங்களில் 'ரியூஷன்' கொடுக்க முயலலாம். இதில் வீட்டுப் பெண்களும் படித்தவர்களாக, ஆர்வமுள்ளவர்களாக இருந்தால் அவர்களும் பங்கு பற்றலாம்.

இப்படியாக ஒழுங்கு படுத்தப்பட்ட நமது சராசரி வருமானம் எவ்வளவு என்பதை நாம் மனத்தில் கொண்டு இதற்கேற்ற முறையில் நமது வாழ்க்கைத்தரம் எப்படி அமைய வேண்டும் என்பதையும் அதற்காக நாம் எந்தவழிகளில் செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவேண்டும் என்பதையும் நிச்சயம் செய்துகொள்ள வேண்டும்.

ஒருமாதம் இருபதாயிரம் ரூபாய் வருவாயைக் கொண்ட ஒருவன் கார் வைத்திருப்பதைப் பார்த்து மாதம் ஐயாயிரம் ரூபாய் வருமானம் உடையவனும் காரொன்றை வாங்கினால் என்னாகும்? மாதா மாதம் காரைப் பராமரிப்பதற்கும், எண்ணெய்ச் செலவுக்கும் அவன் வருவாய் போதுமானதாக அமையுமா?

நமது சமூகத்தில் புரையோடிப் போயிருக்கிற முக்கிய பிரச்சனை இதுதான். ஒவ்வொருவனும் தன்னருகே வாழுகின்றவனைப் பார்த்து மிரட்சியடைகிறான். அவனைப் போலத் தானும் வாழவேண்டுமென எண்ணுகிறான். 'ஸ்டேட்டெஸ்' என்று கருதிக்கொண்டு போலிக் கௌரவங்களைக் காப்பதற்காக வீண் செலவுகளைச் செய்கிறான். வீணான ஆடம்பரச் செலவுகளில் ஈடுபடுகிறான்.

நமது தகுதியை அறிந்து நாம் வாழமுற்படுவதோடு எளிமையான வாழ்க்கையையும் மேற்கொள்ளுவது பயன் தரும். வீண்செலவுகளைத் தவிர்த்துக்கொள்வதன் மூலம் எமது உடல் நலத்தையும், மனவளர்ச்சியையும் கூட நாம் நல்ல முறையில் பேணக்கூடியதாக இருக்கும்.

இதில் மதுபானம் முதலிடம் வகிக்கிறது. மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தமது பொருளை வீண்செலவு செய்வதோடு உடல் நலத்திற்கு என்னென்ன வகைகளில் தீங்கு செய்கிறார்கள் என்பதை விஞ்ஞான பூர்வமாக விளக்கிச் சுகாதார நிபுணர்கள் பலர் அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

உடல் நலக்கேடு மட்டுமா? மது அருந்துவது நரம்புகளைத் தளரச்செய்து மூளையையும் பாதிப்பதனால் மனக் கோளாறுகளையும் ஏற்படுத்துகின்றது. அதுமட்டுமல்லாமல் மது அருந்துவதால் குடும்பத்தில் ஒற்றுமையின்மையும் பல பிரச்சனை களும் தோன்றி வாழ்க்கையின் அமைதியினைக் கெடுக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நாம் எடுத்துக் கொண்ட முக்கியமான விஷயம். வருவாயை மீறிய செலவுக்கும் இந்த மதுப் பழக்கம் வழிவகுக்கிறது. எனவே ஒரேயடியாக மதுவை விலக்க முடியாவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாகவேனும் மதுப்பழக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படுத்துவது அவசியம்.

மது அரக்கனைப் போலவே உடல் நலத்தையும் கெடுத்து வாழ்க்கைச் செலவையும் அதிகரிக்கச் செய்யும் இன்னொரு பொருள் சிகரெட். மதுவின் அடிமைகளை விட சிகரெட் முதலியவற்றின் அடிமைகள் மிகமிகப் பலர். சிகரெட் புகைப்பது ஒரு பழக்கமாகிவிட்டது மாத்திரமல்லாமல் அதை ஒரு நாகரிகமாகக் கருதிப் புகைப்பவர்கள் அநேகம். ஆனால், அது நுரையீரலைக் கருக்கிக் காசநோய்க்கு நம்மை அடிமைப் படுத்துவது மாத்திரமல்லாமல் எமது பொருளாதார வளத்தையும் விழுங்கி விடுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

மதுவருந்துதல், புகைத்தல் இவற்றுக்கு அடுத்த படியாக வெற்றிலை போடுதல், பொடி என்பனவும் மனிதனைப் பீடித்திருக்கும் கெட்ட பழக்கங்களாகவும், பொருட் செலவை ஏற்படுத்தும் பழக்கங்களாகவும் இருக்கின்றன.

இப்பழக்கங்கள் குறிப்பிட்ட ஒரு சிலரைப் பீடித்திருக் கின்றன. ஆனால், சராசரியாக எல்லோரையுமே பீடித்துள்ள பழக்கங்களான கோப்பி, தேநீர் அருந்தும் பழக்கங்களும் உடல் நலத்தையும் கெடுத்து வீண் விரயங்களையும் ஏற்படுத்துபவையே. கோப்பி தேநீர் போன்றவற்றிற்குப் பதிலாக சோயா அவரையை கோப்பி போல் பாவிக்கலாம். மல்லி, மோர், தேசிக்காய் போன்ற எளிமையான குளிர்மையான பானங்களை அருந்தப் பழகலாம்.

சிக்கன நடவடிக்கைகளில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒன்று உண்டு. நமது சிறார்களின் மன நிலையை அல்லது உடல்நிலையை அது பாதிக்காதிருப்பது அவசியம். உணவிலே சிக்கனம் செய்கிறோமென்று சொல்லிக் கொண்டு மிகவும் மலிவான சத்தில்லாத உணவுப் பொருட்களையே தொடர்ந்து வாங்கி உண்போமானால் உடல் பலமற்று நோய்களை எதிர்க்கும் சக்தியற்றுப் பலவித நோய்களை ஏற்க நேரும். முக்கியமாகச் சிறுவர்கள் இப்படி நோய்வாய்ப்பட நேரலாம். இதனால் அவர்களது உடல்நிலை பாதிக்கப் படுவதுடன் நோயிற்கான வைத்தியச் செலவுகள் தலையை மிஞ்சிவிடும். இது சாண் ஏற முழம் சறுக்கின கதையாகத்தான் முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது அதிதீவிர சிக்கனம் சிறுவர்களது எதிர்பாப்புக்கள், விருப்பங்களை ஒரேயடியாக மழுங்கடித்து அவர்கள் மனநிலையில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் கவனித்துக் கொள்ள வேண்டும். படிப்படியாக அவர்கள் மனதில் சிக்கனம் பற்றிய சிந்தனையை வளர்த்தெடுக்கலாம்.

மாதச் சம்பளம் பெறுவோர் அது கிடைத்தவுடன் மாதம் முழுவதுக்கும் தேவையான பொருட்களை, சீனி, மா, அரிசி, தேயிலை, பருப்புப் போன்ற பழுதாகாத பொருட்களை ஒரே தடவையில் வாங்கி வைத்துக் கொள்ளலாம். அவ்வப்போது, அரைக்கிலோ ஒருகிலோ என்று வாங்குவதைவிட இது எவ்வளவோ நற்பயனைத் தரும். கூட்டுறவுச்சங்கங்களிலோ அல்லது மொத்த வியாபாரிகளிடமோ இப்படி மொத்தமாக வாங்கினால் சிறிதளவு லாபம் கிடைப்பதுடன் எவ்வளவோ அலைச்சல் குறைந்து நேரத்தையும் மீதப்படுத்த முடிகிறது.

மொத்தமாகப் பொருட்களை வாங்கி வைத்திருந்தால் வீட்டிலுள்ள பெண்கள் பார்த்தும் பாராமலும் ஒரேயடியாகச் செலவு செய்து விடுகிறார்கள் என்ற அங்கலாய்ப்பையும் சில இடங்களில் நாம், கேட்க நேருகிறது. அவர்கள் வாராவாரம் வாங்கிக்கொள்ள முடியும். இவர்கள் இன்னொரு செயலையும் அவசியம் கையாள வேண்டும். சம்பளம் கிடைத்தவுடன் கோயில் செலவு, தான தர்மம் போன்றவற்றிற்காகச் சிறு தொகையையும் (தனக்கு மிஞ்சித்தானே தானமும் தர்மமும்) திடீர் செலவுகள், மருத்துவச் செலவுகளுக்கென்று ஒரு சிறு தொகையையும் ஒதுக்கி விட்டு மீதியை நான்காகப் பிரித்து வைத்துக் கொள்ளலாம். அந்த ஒரு பகுதியை மட்டும்தான் அவ்வாரச் செலவுக்குப் பயன் படுத்துவது என்ற வைராக்கியத்துடன் இருந்து பார்க்கலாமே!

மாதாமாதம் கட்டாயச் சேமிப்பு என்று மிகச்சிறு தொகையாவது வங்கி முதலியவற்றில் வைப்புச் செய்வது முக்கியம். 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பது பழமொழி. ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தில் இந்தச் சேமிப்புப் பெரும் பயனைத் தரும்.

சில வசதிகள் அருகிலேயே கிடைக்கக்கூடியதாக இருந்தும் நமக்கென்றே நாம் பயன்படுத்த வேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரட்டுக் கௌரவம் அல்லது சோம்பல் காரணமாக வீண் செலவுகள் செய்வது பலரின் வழக்கம். அருகிலேயே நூலகம், வாசிகசாலை இருக்கத்தக்கதாக அங்கு போய் வாசிக்கக் கஷ்டப்பட்டு நாலைந்து பத்திரிகைகளை தினமும் அல்லது வாராவாரம் எடுப்பது வீண் விரயமாகும்.

நாளாந்தச் செலவுகளின்போது மீந்து வரும் பணத்தில் ஒரு குறித்த நாணயம் அல்லது தாளினை (உதாரணமாக பத்து ரூபாய்த் தாள் அல்லது ஒரு ரூபாய் நாணயம்) செலவுக்கு எடுக்காமல் கண்டிப்பாக உண்டியலிலேயே போடுவது என்றொரு கட்டுப்பாட்டை வைத்துக் கொள்ளலாம். இந்தச் சேமிப்பு பிறந்தநாள் அல்லது திருமண நினைவுநாள் போன்ற தினங்களை நினைவூட்டக் கூடியதாக வீட்டுக்கு வேண்டிய முக்கிய பொருட்களை வாங்கப் பயன்படுத்தலாம். இதைவிட எப்போதாவது விசேஷ வருமானமாக நமக்கு ஏதாவது வருவாய் கிடைத்தால் அதில் ஒரு பகுதியையாவது ஒரு முக்கிய பொருளை வாங்குவதற்குச் செலவிட வேண்டும்.

மொத்தமாக ஒரு தொகைப் பணம் கிடைக்கும் சந்தர்ப்பம் ஏதாவது கிடைத்தால் அதில் பெரும்பகுதியை நிலத்திலும் (காணி வாங்குதல்) இன்னொரு பகுதியைப் பவுணிலும் முதலிடுவதோடு சிறுதொகையொன்றை வங்கிக் கணக்கில் நிரந்தர வைப்பில் முதலிடுவதும் நல்லது. இவை பெரிய அபாயத்தினின்றும் நம்மைக் காப்பாற்றும்.

வருவாய்க்கேற்ப வாழ்க்கையை அமைப்பது பற்றிய இச் சிந்தனையில் பணத்தின் முக்கியத்துவமும் அதைப்பயன் படுத்துவதையும், செலவு செய்யும் வழிகளும் சேமிக்கும் முறைகளும் ஓரளவு எடுத்து ஆராயப்பட்டன இவை எல்லாம் எல்லோருக்குமே பொருந்துவன அல்ல. ஆனால் ஒவ்வொருவரும் தத்தமக்கு உகந்த சுய வழிகளைப் பின்பற்றி வாழ்க்கையைத் தமது வருவாய்க் கேற்ற விதத்தில் உகந்த நிலையில் நடத்த வழிகோலும் என்று நம்புவோமாக.

'அருவி' - 1985 (நீர்ப்பாசனத் திணைக்களத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகச் சஞ்சிகை நடத்திய போட்டியில் முதற் பரிசு பெற்ற கட்டுரை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களின் எதிர்பார்ப்புக்கள்

அடுத்த நிமிடம் என்ன நிகழும் என்பதை அறியும் ஆற்றலை மனிதனுக்கு இந்த நிமிடம் வரையில் ஆண்டவன் அளிக்கவில்லை. ஆனால், அடுத்த ஒவ்வொரு நிமிடத்திலும் என்ன நிகழலாம் என்று கற்பனை செய்யும் ஆற்றலையும், என்னவெல்லாம் நிகழ வேண்டும் என ஆசைப்பட்டு எதிர் பார்க்கின்ற திறமையையும் மட்டும் ஏராளமாக அளித்துள்ளான்.

நிகழப்போவதைப்பற்றி எதிர்பார்ப்பதில்தான் மனிதனின் வாழ்வும் தங்கியுள்ளது, அழிவும் தங்கியுள்ளது. ஒவ்வொரு மனிதனும் ஏதாவது எதிர்பார்க்கிறான். அவற்றில் நிறைவேறு பவையும் உண்டு. ஏமாற்றந் தருபவையும் உண்டு. ஏமாந்தவர்கள் தேறுதல் பெறுவதுமுண்டு. தம் வாழ்வையே முடித்துக் கொள்வதுமுண்டு.

எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்தான் இளைஞர்களின் விரக்திகளுக்கும் தற்கொலைகளுக்கும் காரணங்களாகும்.

இக்கட்டுரையின் மகுடத்திலே உள்ள எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள் என்ற சொற்களிலும் பார்க்க, அடுத்துவரும் சொல்லே மிக முக்கியமானதாகும். சில சந்தர்ப்பங்களில் 'தேறுதல்கள்' என்ற அந்தச் சொல்லிற்குப் பதிலாக 'விரக்தி' என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

உளவியல் அறிஞர்கள் 'மடைமாற்றம்' என்ற ஒரு பதத்தை இங்கு பிரயோகிப்பர். அதாவது மனிதன் ஒருவனின் உளச்சார்புகளும் ஆற்றல்களும் அவனது ஆர்வங்கள் சுட்டிக் காட்டும் திசையில் அதிவேகமாகச் சென்று கொண்டிருக்கும்போது திடீரென ஒரு தடை ஏற்பட்டால், அவனது எதிர்பார்புகள் ஏமாற்றம் அடைய நேர்ந்தால் அவனது உள்ளம் ஒரு கணத்தாக்கத்தைப் பெறுகிறது. அதன் பிறகு அதன் பயணம் ஏதாவதிரண்டு திசைகளில் செல்லலாம்.

ஒன்று அந்த ஏமாற்றங்களுக்குத் தேறுதல்கள் கூறி அதை விடுத்து வேறொரு உயர்ந்த நல்ல வழியிலே முன்னேறுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது விரக்தியடைந்து தாழ்நிலையை அடைகிறான். இதில் முன்னதை உயர்மடைமாற்றம் என்பர்.

எது எப்படி இருப்பினும், எதிர்பார்ப்புக்களின்றி மனிதன் இல்லை. ஏமாற்றமடையாத மனிதனும் இல்லை. ஆனால் ஒவ்வொருவரது எதிர்பார்ப்புக்களும் ஒவ்வொரு துறையிலிருக்கும்.

"அதிகம் உயர்வாக எண்ணாதவன் தனக்கு மிகத் தாழ்ந்தவை கிடைக்குமென்று எதிர்பார்ப்பதில்லை. தற்செயலாக அவ்வாறு ஒரு தாழ்ந்த நிலை கிடைக்கும்போது அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை" என்பது ஒரு எழுத்தாளரின் கருத்து. இதை நாம் நினைக்கின்ற அதே வேளையில் ஷேக்ஸ்பியரின் கருத்தொன்றையும் நினைக்க வேண்டும். "எவன் தன்னைப்பற்றி மிதமிஞ்சி நினைக்கிறானோ அந்த நினைப்பே அவனது அழிவிற்குக் காரணம்" என்று சொல்லியிருக்கிறார் அவர்.

உண்மையாகவே நம்மால் எதிர்பார்ப்புகளில்லாமல் இருக்க முடியாது. ஆனால் ஷேக்ஸ்பியர் கூறியதைப்போல நாம் நமது தகைமையை உணர்ந்து அதற்கேற்ப எதிர்பார்க்கலாம். இதனால் ஏமாற்றங்களிலிருந்து நம்மை ஓரளவாவது தவிர்த்துக் கொள்ளலாம்.

அப்படித்தான் நாம் சற்று அதிகமாக எதிர்பார்த்து அதில் ஏமாற்றமடைந்தாலும் நம்மைத் தேற்றிக்கொள்ளவேண்டும். "நம்மை நாமே வெறுக்காமலிருப்பது நமது முதற்கடமை" என்கிறார் விபுலானந்தர்.

"வாழ்க்கையின் ஒரு கதவு மூடிக்கொண்டால் இன்னொரு கதவு திறந்து கொள்வது இயல்பு. ஆனால் நாம் திறந்த அந்தப் புதிய கதவைப் பாராது மூடிய கதவு திறக்குமென்று காத்திருப்பது தான் துன்பங்கள் ஏற்படுவதற்குக் காரணம்" என்பது ஓர் அறிஞரின் கருத்து.

இவையெல்லாம் கொள்கையளவில் மிகவும் நன்றாக இருந்தாலும் வாழ்க்கையில் கடைப்பிடிப்பது சற்றுச் சிரமம்தான்.

நமது வாழ்க்கையின் அத்திவாரத்தைப் போட்டுக் கொள்வது கல்லூரிகளிலேதான். கல்லூரி வாழ்க்கையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிதான் எமது உலகியல் வாழ்க்கையின் ஆரம்பமாக அமைகிறது.

இந்தக் கல்லூரி வாழ்க்கையிலேதான் நமது எண்ணங்கள், உணர்வுகள், சிந்தனைகள், செயல்கள், ஆர்வங்கள், உளச்சார்புகள், எதிர்பார்ப்புகள் யாவுமே ஒரு ஒழுங்கான உருவைப் பெறுகின்றன. ஆனால் இவை உருவமைக்கப் படுவதில் நம்மை விட நமது நண்பர்களும், ஆசிரியர்களும்தான் கூடுதலான பங்கெடுத்துக் கொள்கின்றனர். அவர்களது கருத்துக்களே எமது வாழ்க்கையின் அத்திவாரத்தை இடுகின்ற பணியில் கூடுதலாகச் செயற்படுகின்றன.

அதிலும் ஆசிரியர்கள் நமது அறிவுத்துறையில் வழி காட்டிகளாக அமைகின்றனரென்றால், நண்பர்களோ நமது வாழ்க்கைத் துறையை அமைப்பதிலேயே பெரும்பங்கு வகிக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத ஒரு பேருண்மை. நமது நண்பர்களைப் பொறுத்தே நம் சிந்தனைகள் நலம் பெறுகின்றன, அல்லது நாசமடைகின்றன.

ஓர் அறிஞன் இறைவனை வேண்டுகிறான் "ஓ! இறைவா! என்னை எனது பகைவர்களிடமிருந்து நான் காப்பாற்றிக் கொள்கிறேன். ஆனால் என் நண்பர்களிடமிருந்து நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று.

குமரப் பருவத்தின் இறுதிக்கட்டத்திலேதான் (அதாவது 'டீன்ஏஜ்' என்று குறிப்பிடப்படும் 13 தொடங்கிப் 19 வயது வரையுள்ள பகுதியின் இறுதி) உண்மையான நட்பு மலர்வதாகக் கருதப்படுகிறது. சாதாரணமாக 9-ம் 10-ம் வகுப்புகளில் (அதாவது பதினான்கு, பதினைந்து வயதுகளில்) நட்பு மலர்கின்றபோது அவை வெறும் முகநக நட்கின்ற நட்பாகவே இருக்கும். ஆனால் பதினெட்டு, பத்தொன்பது வயதுகளில் ஏற்படும் நட்பு சொந்த உள்ளக் குமுறல்கள், பிரச்சனைகளை மனம்விட்டுக்கூறி, அலசி ஆராய்ந்து தீர்வுகண்டு எதிர்கால வாழ்க்கைக்கு வழியமைக்கும் வகையில் அமையும்.

இந்த நட்பைப்பற்றி ஏன் இங்கே குறிப்பிடகிறேனென்றால், 'எதிர்பார்ப்புகள்' என்ற பதத்திற்கும் இந்த நட்பிற்கும் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிய தொடர்பு உண்டு. நட்பு என்பதே ஒரு எதிர்பார்ப்பாக அமைவதோடு பல எதிர்பார்ப்புகளை ஏற்படுத்த நண்பர்கள் ஏதுவாக இருக்கிறார்கள்.

குமரப்பருவத்தின் ஆரம்பத்திலேயே மனித உள்ளம் நெகிழ்ச்சியுற ஆரம்பிக்கிறது. அன்பு வசப்படுகிறது. தனது அன்பைச் செலுத்த ஒரு வடிகாலைத் தேடி அலைகிறது. பாசத்தைப் படரவிட ஒரு பற்றுக்கோலை நாடுகிறது. தன்மீது யாராவது அன்பு செலுத்தவேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. இந்த எதிர்பார்த்தலின் விளைவே நட்பாக மலர்கிறது. இது இருபாலார்க்கும் பொருந்தும்.

இந்த நட்பு - இரு தூய அன்புள்ளங்களின் பாசப் பிணைப்பு - ஒரே பாலாரிலும் நிகழலாம், எதிர்ப்பாலாரிடமும் நிகழலாம். உண்மையில் இப்பருவத்தில் முகிழ்க்கின்ற பாலியலுணர்வு காரணமாக இனக்கவர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு - எதிரெதிர்ப்பாலைச் சேர்ந்தவர்கள் மிக நெருக்கமாக அன்பு வைக்கிறார்கள். உளவியல் ரீதியில், மறைமனத்தில் இதன் அடிப்படை எதுவாக இருப்பினும் பொதுவான மனத்தைப் பொறுத்த மட்டில் இந்த அன்பு ஒரு தூய பாசப்பிணைப்பு - ஒரு எதிர்பார்த்தலின் இனிய விளைவு என்பதே உண்மை.

ஆனால் இந்த அன்பு, குமரப்பருவத்தின் இறுதிக் கட்டத்தைக் கடந்து கல்லூரி வாழ்க்கையின் எல்லைக்கோட்டை அடையும் போது சில வேளைகளில் தம்மையறியாமலே வேறுவிதமாக மாறியிருக்கும். பெரும்பாலும் நண்பர்களால் மாற்றப்பட்டிருக்கும். அன்புச் சுமையை இறக்கி வைக்கமட்டும் தேவையென்று கருதப்பட்ட இந்நட்பு வாழ்க்கைச் சுமையிலும் பங்கு கொள்ள எதிர்ப்பார்க்கிறது. சில வேளைகளில் இங்குதான் நண்பர்கள் என்று கூறப்படுபவர்கள் தமது பொறுப்பை உணர்ந்து நடக்க மறக்கிறார்கள்.

"ஓர் ஆணும் ஒரு பெண்ணும் நெருங்கிப் பழக முடியுமானால் ஒன்று அவர்கள் கூடப் பிறந்தவர்களாக அல்லது கணவன் மனைவியாக இருக்க வேண்டும். இந்த இரண்டைத் தவிர வேறு எந்தத் தொடர்பையும் நமது மனிதர்கள் ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளமாட்டார்கள். ஒரு ஆணையும் பெண்ணையும் அன்பினால் பிணைப்பதற்கு நட்பு என்ற பாலம் தோன்றமுடியாதா?" என்று எழுத்தாளர் அகிலன் அவர்கள் தமது நாவலொன்றில் (சிநேகிதி) எழுதிய வசனங்களை இந்த இடத்தில் நினைவு கூரலாம்.

ஓர் இளைஞன் ஒரு யுவதியுடன் நெருங்கிப் பழகுவதைப் பார்த்தால் அவதூறு சொல்வதற்கு ஒரு கூட்டம் இருக்கும். இன்னொரு கூட்டம் உண்டு, அதற்கு இவர்களது தூய நட்புப் பிடிப்பதில்லை. அதைக் 'காதல் ஆக்குவதற்கு அது முயற்சிக்கும். இது இளைஞர் உலகில் சர்வ சாதாரணமாக நிகழும் ஒரு நிகழ்ச்சி. அந்த இருவரைப் பற்றி இணைத்துப் பேசுவதும், ஒருவரைப் பற்றி மற்றவரிடம் கேலி பேசுவதுமாக இவர்கள் நடந்து கொள்வார்கள்.

எதற்கும் ஓர் எல்லை உண்டுதானே. எனவே, இவர்களுடைய இந்தக் கேலிகள் பற்றித் தமக்குள் தொடர்ந்து சிந்திக்கும் அந்த ஆணும், பெண்ணும் தம்மையறியாமலே மாறி விடுவார்கள். தூய அன்பு மட்டுமே அவர்களது எதிர்பார்ப்பாக இருந்த நிலை மாறி அரவணைப்பையும் எதிர்பார்க்கிறார்கள்.

நட்பு எத்தனை கொடியது? இந்த உலகம் தான் எத்தனை கொடியது? "இந்த உலகம் வாழத் தெரியாதவனுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும். வாழத் துடிப்பவன் வழியிற் குறுக்கே போய் நிற்கும்" என்று நா. பார்த்தசாரதி கூறியது மிகவும் பொருத்தமான வசனம்.

உலகம் என்ன சொல்லும் என்று கவலைப்பட்டால் நாம் வாழமுடியாது. நமது வாழ்க்கைக்கு நாமே அதிபதி என்பதை மறந்து விடக்கூடாது.

"வாழ்க்கையில் எல்லாவற்றிற்கும் எப்போதும் இரண்டாவது வாய்ப்புக் கிடைத்து விடுவதில்லை" எனவே நமக்குக்கிடைத்துள்ள இந்த வாலிபப் பருவத்தை வளம் நிறைந்த எதிர்காலத்தை அமைக்க உதவும் விரிவுள்ள அத்திவாரமாகச் செய்ய வேண்டும்.

- **புதுவை 1973**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது கல்விப் பாரம்பரியத்தின் இன்றைய நிலை

இலங்கையில் இலவசக் கல்வியை அறிமுகம் செய்த மகானுடைய நினைவாக இன்றைய பேருரை அமைகிறது. மருந்தோடு அநுபானமும் சேர்த்துக் கொடுக்கின்ற மாண்புமிக்க சில சித்தவைத்தியப் பெருந்தகைகள்போல, ஆன்மாவின் பசிபோக்க ஆலயம் தந்து அருள்மிக்க அன்பு வாழ்வை அமைக்கவும் அறிவின் பசி போக்க இலவசக் கல்வியூட்டும் கலாசாலை தந்து பண்பான வாழ்வை அமைக்கவும் வகைசெய்த வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள் வயிற்றுப்பசி போக்கும் பணியையும் இவற்றோடு இணைத்துச் செய்தவர். வேதாந்தச் சிங்கம் சுவாமி விவேகானந்தர், சித்தாந்தப் புலி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இருவருமே காட்டிய நல்வழி அது.

அந்தவகையில் 10 - 09 - 1887 இல் பிறந்து 15 - 05 - 1936 இல் அமரத்துவம் அடைந்த மழவராயர் கந்தையா அவர்கள் தமது அரை நூற்றாண்டு கால வாழ்க்கையில் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

அந்நியர் ஆடசியின் கீழ் அடிமைப்பட்டு மதசுதந்திரம், கல்விச் சுதந்திரம் என்பன இல்லாத நிலையில் நாவலர் போன்றோர் ஆரம்பித்த நற்பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துத் தமிழும் சைவமும் இணைந்த கல்விப் பணியையே தமது வாழ்வாகக் கொண்ட பெருந்தகை நமது நிறுவுநர் அவர்கள்.

எனவே இந்த நினைவுப் பேருரையின் மகுடமாக " நமது கல்விப் பாரம்பரியத்தின் இன்றைய நிலை" என்பது அமைகிறது.

மழவராயர் கந்தையா அவர்கள் கல்விப் பணியையே தமது மூச்சாகக் கொண்டிருந்தார். இந்தக் கல்விப் பணியானது இரண்டு ஸ்திரமான எல்லைகளைக் கொண்டதாக அமைந்திருந்ததை அவதானிக்க முடிகிறது. சமயம், மொழி என்பனவே அவ்விரு எல்லைகளும். மாணவர்கள் கல்வி பயிலும்போது சின்னஞ்சிறு வயதிலிருந்தே சமய உணர்வோடும் மொழிவளத்தோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கப்படவேண்டும் என்பது மழவராயர் கந்தையா அவர்களின் எண்ணமாக இருந்திருக்கிறது. அவர் மாத்திரமல்லாமல் மரபுவழிப்பட்ட நமது முன்னோர்கள் பலரும் இத்தகைய கொள்கையையே கொண்டிருந்தனர் என்பது வெளிப்படை.

நீண்டகாலமாகப் பாரத சமுதாயத்தில் நிலவிவந்த குருகுலக் கல்விமுறையும் அதன் எச்சசொச்சமாகக் கடந்த நூற்றாண்டின் ஆரம்பம்வரை நிலவிய திண்ணைப்பள்ளிக்கூடக் கல்விமுறையும் இன்று இல்லாதொழிந்தன. இவை இல்லாமல் போவதற்கு கிறிஸ்தவ மிஷனரிகளின் நவீன கல்விக் கொள்கைகளே காரணமாக இருந்தன.

காலத்தோடொட்டிய நவீன போக்குகளையும் வளர்ச்சிக்குரிய செயற்பாடுகளையும் உள்வாங்கிக்கொள்ளும் சமூகம்தான் வளமும் பலமும் கொண்டதாக நிலைபெறும் என்ற சமூகவியற்கோட்பாடு எம்மாற் புறந்தள்ளப்படக் கூடியதன்று. தமிழினம் அவ்வாறு புறந்தள்ளி வாழ்ந்ததாக வரலாறும் இல்லை. ஆனால் நவீனம் என்பது புராதனத்தின்மீது கட்டி எழுப்பப்பட வேண்டும். பழைமையை அகழ்ந்து தள்ளிவிட்டுப் புதுமையை முழுமையாக்குவது ஒருபோதும் பூரணமான விளைவைத் தரப்போவதில்லை என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

சமயம் சார்ந்த கல்வி என்பது ஒழுக்கமான வாழ்வை நெறிப்படுத்தித் தருகிறது. நவீன கல்விக்கொள்கையை நம்மிடையே புகுத்திய கிறீஸ்தவ மிஷனரிமாரின் கல்விமுறையும் முற்றுமுழுதாகச் சமயத்தை அடிப்படையாகக் கொண்டதே. எனவே கல்வியின் ஒருகண் சமயம் எனலாம். சமயக்கல்வியின் முக்கியத்துவம் மறக்கப்பட்டதாலேயே இன்று சமூகத்தில் ஒழுக்க நெறிமுறை, பண்பாடு ஆகியவற்றின் குறைபாடும் வன்முறை, சுயநலம் ஆகியவற்றின் அதிகரிப்பும் காணப்படுகின்றன.

கல்வியின் மறுகண்ணாக விளங்குவது மொழி. மொழி என்பது ஊடகம். உணர்வு வெளிப்பாட்டுக் கருவி. எந்த ஒரு விடயம் சார்பாகவேனும் தெளிவான ஒரு கருத்தை முன்வைப்பதற்கு ஒழுங்கான மொழியறிவு அவசியமாகிறது. இதனால்தான் புராதன கல்விமுறையில் இலக்கணம், இலக்கியம் ஆகிய மொழியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதுறை அம்சங்களும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தன.

மொழி ஓர் ஊடகம் என்றவகையில் எந்தஒரு மனிதனுக்கும் அடிப்படைத் தேவையாக நல்ல மொழியாற்றல் அவசியமாகிறது. ஊடகவியலாளர்கள் என அழைக்கப்படுகின்ற இன்றைய பத்திரிகையாளர்களிற் பலர் மொழியாற்றலில் பலவீனமாயிருப்பதை நாளாந்தம் பத்திரிகைகளிலும் வானொலி, தொலைக்காட்சி முதலியவைகளிலும் நாம் அவதானிக்கமுடிகிறது. தமிழ்மொழியில் ஆற்றல் வாய்ந்த புலவர்களுக்கும் பண்டிதர்களுக்கும் இன்றைய பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் செய்திகளை வழங்குவதோடு நல்ல நகைச்சுவை விருந்தையும் வழங்குகின்றன. தமிழ்ப் பிழைகள் காரணமாக எழுகின்ற இந்த நகைச்சுவை சிலவேளைகளில் தார்மீகக் கோபத்தையும் ஏற்படுத்துகின்றது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக இருப்பது இன்று சமூகத்தின் முன்னணியில் விளங்கும் பலர் மொழியாற்றலற்றவர்களாக இருப்பதுதான்.

இங்கு இரு விடயங்கள் அவதானித்தோம். கல்வி என்பது சமயம் சார்ந்ததாக இருக்கவேண்டும். எத்துறை சார்ந்து, எத்தகைய கல்வியைப் பெறுவோருக்கும் ஆழமான ஆன்மீக உணர்வை வளர்க்கக் கூடிய சமயக்கல்வியும் இணைக்கப்பட வேண்டும் என்பது ஒன்று. மற்றது, எத்தகைய கல்வியாளர்களும் மொழி ஊடகத்தை நன்கு கையாளத்தக்க வகையில் இலக்கண இலக்கியத் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்பது.

இன்றைய கல்விநிலையில் இவையிரண்டும் குறைவடையக் காரணங்கள் உண்டு. பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், மனையியல், நுண்கலை போன்ற பாடங்களுக்கு அவ்வத்துறையில் பயிற்சியும் பாண்டித்தியமும் உடைய ஆசிரியர்களே நியமிக்கப்படுகின்றனர். ஆனால் சமயம் தமிழ் இணைண்டையும் கற்பிப்பதற்கு அத்துறைகளில் பயிற்சியும் பாண்டித்தியமும் உடையோர் குறைவு. பொதுவாகப் பல பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான நேரசூசிகள் தயாரிக்கப்படும்போது அவர்களுக்குரிய பாடங்கள் வழங்கப்பட்டபின் எஞ்சுகின்ற நேரத்தை நிரப்புவதற்கு உதவுகின்ற பாடங்களாகத் தமிழும் சமயமும் கைகொடுக்கின்றன. அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு பாடங்களிலும் ஆர்வமோ ஆற்றலோ இல்லாதவர்களாக ' கடனே' என்று கற்பித்தலை நடத்துகிறார்கள். மாணவர்களுக்கும் ஈடுபாடு குறைந்துவிடுகிறது.

மேலும், மாணவர்களிடையே தாம் டாக்டர்களாக அல்லது எஞ்சினியர்களாக வரப்போகின்ற கற்பனை அதிகமாக இருக்கின்றபோது இவ்விரு பாடங்களும் இடைஞ்சலாகவும் தேவையற்றவைகளாகவும் அமைந்துவிடுகின்றன. இந்நிலை மாறுவதற்கு மாணவர், பெற்றோர், ஆசிரியர் ஆகிய முத் தரப்பினரிடையேயும் சமயம், தமிழ் ஆகிய இவ்விரு பாடங்கள் பற்றிய எண்ணக் கருவிலே ஓர் உயர்மடைமாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்.

இனி, உயர்கல்வியில் சமயம், தமிழ் இரண்டு பாடங்களையும் முக்கியமாகக் கற்கின்ற மாணவர்களிடையே பொதுவாக ஆர்வமும் மதிப்பும் இருந்தாலும் ஆசிரியர்களிடமிருந்து அவர்களுக்குப் போதிய வழிகாட்டல்கள் கிடைப்பதில்லை. உயர்தர வகுப்புக்களுக்குப் பட்டதாரிகளே கற்பிக்கவேண்டும் என்ற கல்விக்கொள்கை காரணமாக மரபுவழிக் கல்விமான்களாகிய பண்டிதர்களும் புலவர்களும் புறக்கணிக்கப்பட்டபோது நமது மொழிவளமும் சமய அறிவும் திடீரெனப் பாரிய ஒரு வீழ்ச்சியை அடைந்தமை அவதானிக்கப்பட்டது. அறுபதுகளின் கடைசிப்பகுதியில் இந்நிலையைக் காணலாம்.

பொதுவாகக் கலைத்துறைப்பட்டதாரிகள் Readymate தயாரிப்புக்களாக - வெறும் புத்தகப் பூச்சிகளாக - கிணற்றுத்தவளைகளாக இருக்கும் துன்பநிலைமையைப் பல்வேறு பட்டதாரிகள் நிறைந்திருக்கின்ற இந்தச் சபையிலே ஒரு பட்டதாரியாகிய நானே மிகவும் வேதனையோடு தெரிவிக்கவேண்டியுள்ளது. இதுதான் படிக்கவேண்டிய பாடத்திட்டம் என்று ஒரு வட்டம். அதில் படித்தவற்றில் மட்டுமே பரீட்சை என்று ஒரு குறுகிய வட்டம். அதற்குள் இம்முறை கேள்வி எதில் வரக்கூடும் என எதிர்பார்த்துப் படிக்கின்ற Choice என்னும் மிகக் குறுகிய வட்டம். இதற்கு அப்பால் எதுவும் தெரியாதவர்களாக அவர்கள் இருக்கின்றனர். அவர்கள் கற்பிப்பதற்குப் பயன்படுத்துகின்ற புத்தகங்களோ துன்பத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் துன்பம் தருபவை. பக்கத்துக்குப் பக்கம் எழுத்துப் பிழைகளும் தவறான தகவல்களையும் தருகின்ற அவற்றைக் கவனித்துத் திருத்துவதற்கும் கண்டிப்பதற்கும் நாவலர் போன்றவர்கள் இன்று நம்மிடையே இல்லை.


தனியார் கல்வி நிறுவனங்களில் ஒருசில காரணங்களால் பிரபலமடைந்துவிட்ட சில ஆசிரியர்களிடமே மந்தைகள் போலச் செல்லுகின்ற மாணவர்கள்பலர் கருத்துத் தெளிவில்லாமலே கேள்விகளையும் விடைகளையும் பாடமாக்கிவிட்டுப் பரீட்சைக்குச் செல்கின்ற பரிதாபநிலை இன்று அதிகம்.

கணிதம், விஞ்ஞானம் கற்பதற்குத் தமிழறிவு ஏன் என்று கேட்கின்ற சில மாணவர்கள்போல சமயம் கற்பதற்குத் தமிழ் மொழி அறிவு ஏன் என்று கேட்கின்ற மாணவர்களும் உள்ளனர்.

இவற்றைவிட குழந்தைகளுக்கு வைக்கும் பெயர்கள், ஸ்தாபனங்களுக்கு வைக்கின்ற பெயர்கள் என்பனவும் சினிமாப் படங்களின் பெயர்களும் தமிழ் மொழியை மட்டுமல்லாமல் சம்ஸ்கிருத மொழியையும் சிதைப்பனவாகவும் நமது பண்பாட்டையே கேலி செய்வனவாகவும் அமைவதைக் காணமுடிகிறது. சரியான மொழியறிவும் சமய உணர்வும் ஊட்டப்பட்டு வளர்ந்தவர்கள் இச்செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்பது தெளிவு.

**புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி நிறுவுநர் நினைவுப் பேருரை**

**10-09-2002**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது இவர்களுக்குத் தெரியாததேன்?

பொது மக்களுக்கான சேவைகளை வழங்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பல இருக்கின்றன. இந்நிறுவனங்களில் பணி புரிபவர்கள் பல சந்தர்ப்பங்களில் தங்களைச் சர்வ வல்லமை பொருந்திய, சர்வாதிகாரம் மிக்க மன்னர்களாக நினைத்துக் கொள்வதுண்டு. "எங்கள் தயவை நம்பித்தானே இவர்கள் இருக்கிறார்கள்" என்ற தவறான மனப்பான்மை ஒருவகை மனநோயாக இவர்களைப் பீடித்துவிடுவதும் உண்டு. தாம் பல சந்தர்ப்பங்களில் பலரால் விரட்டி விரட்டி வேலை வாங்கப்பட்டதும் தங்களைத் தங்கள் மேலதிகாரிகள் அதிகாரம் செலுத்தி வருவதும் இவர்கள் மனத்தில் ஒரு தாழ்வுச்சிக்கலை ஏற்படுத்தி இப்போது தம் கையில் அதிகாரம் கிடைக்கும்போது தாம் பிறரை அடக்கி ஆளுகிறோம் என்ற பரம திருப்தியை ஏற்படுத்தும் ஒருவகை உயர்வுச் சிக்கல் மனநோய்தான் இது. (உண்மையில் இதுவும் தாழ்வுச் சிக்கலின் இன்னொரு வடிவம்தான்)

இந்த மனநோய்பற்றி எமக்குக் கவலை இல்லை. ஆனால், சாதாரண பொது மக்களுக்கு விளங்கும் சில சாதாரணமான உண்மைகள் பொது சேவைகளில் ஈடுபடும் பல உயரதிகாரிகளுக்குக் கூட விளங்காமல் போவது ஏன் என்பதுதான் எமக்குப் புதிராக இருக்கிறது.

இரண்டொரு உதாரணங்களைப் பார்ப்போம்.

ஒரு அரச வங்கியில் பலர் கியூவில் நிற்கிறார்கள். ஒருவர் தமது ஓய்வூதியத்தை எடுப்பதற்கு வவுச்சரைக் கொடுத்துப் பணத்தைப் பெறுகின்றார். அடுத்து அவர் தமது மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்கான சீட்டையும் கொடுக்கின்றார். "ஏன்காணும், இரண்டையும் ஒண்டாய்த் தந்திருக்கலாமே. ஒவ்வொண்டாய் மினைக்கடுத்திறியள்..... " என்று சீறி விழுந்தார். இதை அவதானித்துக்கொண்டு கியூவில் நின்ற இன்னொருவர் தமது முறை வந்தபோது அதேபோன்ற நிலைமையில் தாமும் இருந்ததனால் ஓய்வூதியச் சீட்டு, மின்கட்டணச் சீட்டு இரண்டையும் ஒன்றாகவே கொடுத்தார். அந்த அதிகாரி இப்போது "ஒவ்வொண்டாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாருங்கோவன். ஏன் ஆட்டுக்கை மாட்டை விடுகிறியள்?" என்று துள்ளினார். இவர்களுக்குப் பின்னால் இரண்டையும் பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு தலையைச் சுற்றியது. அவருக்கு என்ன வியாதி?

இப்போது சங்கக்கடைகளில் கியூக்கள் வளரும் காலம். நிலைமையைச் சமாளிப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்குரிய குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையை மட்டுப் படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டன. இந்த நிலையில் "மக்கள் கியூவில் நின்று தொல்லைப்படாமல் குடும்ப அட்டைகளைச் சமர்ப்பித்துப் பொருட்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் தனியான கடைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன" என்று பத்திரிகைச் செய்திகள் வந்தன. அதன்பின் மொத்த விற்பனை நிலையங்கள் சில, சில்லறைக் கடைகளாகி அங்கு ஒரே கடையில் பல கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களும் பொருட்களை வாங்கும்படி அறிவிக்கப்பட்டது. சங்கக் கடைகளின்முன் ஐம்பது பேர் கியூவில் நின்ற நிலை மாறி இப்போது புதிய கடைகளின் முன் முந்நூறுபேர் கியூவில் நின்றனர். "எங்கடை சங்கக் கடையிலேயே சாமான்களைத் தந்திருக்கலாமே" என்று பொது மக்கள் முணுமுணுத்தனர்.

கடைக்குமுன் கூடும் இந்த முந்நூறு பேரைச் சமாளிப்பதற்குப் புதிய வழியொன்றைக் கண்டுபிடித்தனர் சிலர். தத்தமது குடும்ப அட்டையைக் கடையில் அடுக்கிவிட்டுப் போனால் கியூவில் நில்லாமல் தத்தமது முறை வரும்போது பொருட்களை வாங்கலாம் என்பது புதிய கண்டுபிடிப்பு. அடுத்த நாள் குடும்ப அட்டையை அடுக்குவதற்காக அதிகாலையிலிருந்தே மிகப்பெரிய கியூ. அதுமட்டுமல்லாமல் அடுக்கி முடிந்தபின் தமது பெயர் அழைக்கப்படும் நேரத்தை எதிர்பாரத்துக்கொண்டு ஒன்பதுமணி முதல் மறுபடி (கியூவில் நில்லாமல்) கடைமுன் காதைத் தீட்டிக்கொண்டு காத்திருக்கத் தொடங்கினர். பெயர் கூப்பிடும்போது உடனே போகாவிட்டால் மனேச்சரின் கடும் கோபத்துக்கு உள்ளாக நேரும் அல்லவா?.

இதேபோலக் கியூ வளரும் இடங்களிலெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கத்துண்டுகளை (டோக்கன்) வைத்து அதனை எடுத்துச் செல்பவர்களுக்கு அவர்களது இலக்கத்திற்கேற்ப, கிட்டத்தட்ட எப்போது அவர்களது முறை வரும் என்பதையும் தெரிவித்து அனுப்பினால் ஒரேசமயத்தில் பலர் கூடிநிற்கும் தொந்தரவை இல்லாமல் செய்து சிலர்மட்டும் காத்திருக்கும் நிலையை ஏற்படுத்தலாமே!

இங்கே ஒரு முக்கிய விடயம் உண்டு. முதல் வரும் சிலருக்கு மட்டுமல்லாமல் எல்லாருக்கும் அந்த இடத்தில் வாய்ப்புண்டு என்ற உறுதிப்பாடு இருக்கவேண்டும். அதேநேரம் "நான் முதலிலேயே போகவேண்டும்" என்ற நினைவு இன்றித் தனக்குரிய இலக்கத்தை எடுப்பதன்மூலம் ஒரு நேரத்தைத் தனக்கென ஏற்படுத்தி அந்த நேரம் சென்று தனது சேவையைப் பூர்த்திசெய்துகொளவதற்குத் தயாராகவேண்டும் நம்மவர்கள். அந்த மனநிலை வந்தால்தான் இலக்கத்துண்டு எடுப்பதற்கும் கியூ என்ற நிலை மாறும்.

அடுத்த உதாரணத்தைப் பார்ப்போம். நேர்மையானவர்கள் நேர்வழியில் செல்வார்கள். பகிரங்கமாகச் செல்வார்கள். தம்மைப் பரிசோதிக்க முற்படுபவர்களைப்பற்றி அவர்கள் அஞ்ச மாட்டார்கள். தப்புச் செய்ய முற்படுவோர்கள் குறுக்கு வழிகளில் செல்வார்கள். பரிசோதிக்க முற்படும் இடங்களைத் தவிர்த்து வேறு இடங்களை நாடுவார்கள். அப்படியிருக்க நேர்வழியாகவும் பகிரங்கமாகவும் செல்பவர்களையே நாளாந்தம் பரிசோதித்துக்கொண்டிருப்பதில் என்ன பயன் ஊண்டு?

திடீர் திடீர் என்று புதிய புதிய இடங்களில் பரிசோதனை நிகழுமானால் தேடப்படும் நபர்கள் கிடைப்பதற்கு வாய்ப்பு அதிகம் என்பதோடு சாதாரணமானவர்கள் நாளும் பொழுதும் சோதிக்கப்படும் தொந்தரவுக்கு ஆளாகத் தேவையில்லையல்லவா?

**- வெள்ளிமலை 2ம் இதழ் 2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோரை நோக்காத வியாபாரங்கள்

வியாபாரம் என்பது நுகர்வோரை நோக்கமாகக் கொண்டதே. ஒருவர் தமது வாழ்க்கைத் தொழிலாக பொருள் தேடும் முயற்சியாகச் செய்யப்படுவதுதான் வியாபாரம் என்றாலும் தமது பொருளுக்குப் போதுமான கேள்வி இல்லாதவிடத்து அந்த வியாபாரத்தால் பயனில்லை. மேலும் அது வெறுமனே சுயலாபம் கருதிய தொழிலாக மட்டும் இல்லாமல், மக்களுக்கு வேண்டியதைத் தருவித்து அல்லது உற்பத்தி செய்து கொடுப்பது என்ற வகையில் ஒரு சேவையாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

தரமான பொருளை நியாயமான விலையில் இலகுவாகக் கிடைக்கச்செய்வதே நல்ல ஒரு வர்த்தகரின் நோக்கமாக இருக்க வேண்டும். அதுவே மக்களுக்குத் திருப்தி தருவதாகவும் வர்த்தகருக்கு நல்ல பெயரைத் தருவதாகவும் அவருக்கு நல்ல வருவாயைத் தருவதாகவும் இருக்கும். **தரமான பொருள், நியாயமான விலை** என்ற இரண்டும் இன்று நமது சிந்தனைக்கு அப்பாற்பட்டவை. நாட்டின் நெருக்கடியான சூழ்நிலை, போக்குவரத்தில் காணப்படும் தடைகள் இவற்றால் உண்மையில் இதுபற்றி அதிகம் பேசமுடியாது. எனினும் விநியோகத்திலும் சந்தைப்படுத்தலிலும் இன்று காணப்படும் குழப்பநிலையைச் சாதகமாக வைத்து தமது வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வோர் பலராக இருக்கின்றனர்.

"நாலு இடங்களில் விலையை விசாரித்து வாங்கு" என்று பெரியவர்கள் சொல்வதைக் கேட்கலாம். கடைக்குக் கடை சிறிய அளவில் விலை வித்தியாசம் இருப்பதுண்டு. ஆனால், ஒரே பொருள் மிக அருகிலுள்ள இரு இடங்களில் மிக அதிக வேறுபாடான விலைகளில் விற்பனை செய்யப்படுகின்ற நிலைமை இன்று அவதானிக்கப்படுகின்றது. அதனால் நுகர்வோர் தமது வாடிக்கையான வர்த்தகர்கள் என்ற நிலைமையை விடுத்து, தமது நேரம் என்னும் பொன்னான பொருளின் செலவையும் மறந்து பல இடங்களுக்கு அலைகின்ற நிலைமை காணப்படுகிறது.

இந்த நிலைமையிலும் பொருட்கள் கிடைக்காத காலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் புதிது புதிதாகக் கடைகள் திறக்கப்படுவதுதான் வியப்பாக உள்ளது. இருக்கின்ற கடைகளிலேயே பொருள்களை வாங்கமுடியாத நிலை இருக்கும்போது இன்னும் இன்னும் புதிதாகக் கடைகள் ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி திறக்கப்படுவதைக் காண்கிறோம். நமது ஆலயங்களைப்போலவே இதுவும் ஆகிவிட்டது. இருக்கின்ற ஆலயங்களை நல்லமுறையில் பரிபாலிப்பதே சிரமமாக இருக்கும்போது புதிது புதிதாக ஆலயங்களை அமைத்து அழகுபார்க்கின்ற நமது அபரிமிதமான பண்பாட்டு வளர்ச்சி போல, இதுவும் ஆகிவிட்டது இன்று.

நாட்டில் பணவீக்கம் அதிகமாகிட்டதுபோல பலருடைய வீட்டில் தேவைக்கு மேலாகப் பணம் சேர்ந்து அதற்குரிய சேவை உரியமுறையில் நிர்ணயிக்கப்படாததால்தான் இவை நிகழ்கின்றன. வெளிநாட்டுப் பொருளாதார வளம், அல்லது முறையற்ற வகையில் சேர்ந்த அதிக பணம் ஒரு தேவையை நாடுகிறது. “அப்போது உத்தியோகம் புருஷலட்சணம்” என்ற வகையில் ஒரு தொழில் வாய்ப்பும் தேவைப்படுகிறது. அதனால் இலகுவாகக் கிடைக்கும் முதலை இட்டு வியாபாரம் ஆரம்பமாகின்றது. தெழிலுக்குத் தொழில், முதல் சும்மா கிடக்காமல் ஏதோ ஒரு வகையில் முடக்கம். இதனால் எல்லா இடங்களிலும் கடைகள். ஆனால் எந்த இடத்திலும் சேவை நோக்கைக் காணமுடியாது. எந்த ஒரு இடத்திலும் முழுமையாகப் பொருட்களை வாங்கமுடியாது. எந்த இடத்திலும் சீரான விலை நிர்ணயம் இருக்காது. எல்லாவற்றுக்கும் மேலாக வருகின்ற நுகர்வோரை அன்பாக வரவேற்றுப் பொருட்களைப் பண்பாக வழங்கி அனுப்புகின்ற நாகரிகத்தையும் இன்று காண்பது அரிதாகிவிட்டது.

“நமது கடை, நமது தொழில் நிறுவனம் இது என்ற ஈடுபாடு, அதில் ஒரு தெய்வீகத்தைக் காணும் புனிதமான இயல்பு, நமது வாடிக்கையாளர் என்றும் நெருக்கமான உறவு, அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற உணர்வு, கடைக்கு வருவோர் நன்றியுடனும் திருப்தியுடனும் மலர்ச்சியுடனும் செல்வதைப் பார்த்து மகிழ்கின்ற ஆத்ம திருப்தி இவை எல்லாம் இன்று எங்கே போய்விட்டன? எதிலும் ஒட்டிக்கொள்ளாத ஏனோதானோ மனப்பான்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக நிலையத்தைத் தொடங்கமுன்னரே எந்த இடத்தில் என்ன பொருளுக்கான தேவை இருக்கிறது என்பதை ஆராய்ந்து தேவையற்ற போட்டிகளைத் தவிர்த்து இல்லாத இடத்தில் இல்லாத பொருட்களை விநியோகிக்கும் மனப்பான்மை வளரமாட்டாதா?

ஒரு சிறு உதாரணத்தோடு இந்தச் சிந்தனையை முடிக்கலாம். யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியை நோக்கலாம். இணுவில் என்ற மத்தியஸ்தானத்திலிருந்து மல்லாகம் வரை செல்லும் சுமார் எட்டு கிலோமீற்றர் தூரத்துக்கிடையில் ஐந்து பெற்றோல் நிலையங்கள் உள்ளன. சுன்னாகத்தில் மட்டும் மூன்று. ஆனால், அதே இணுவிலிலிருந்து யாழ்ப்பாணம் வரை செல்லும் ஏறத்தாழ அதே தூரத்தில் எந்தவொரு பெற்றோல் நிலையமும் இல்லை.

ஒரு பகுதியில் ஒரு பொருள் குவிந்துள்ளது. இன்னொரு பகுதியில் அப்பொருள் கிடையவே கிடையாது. யார் செய்த தவறு?

**- வெள்ளிமலை 4ம் இதழ் 2008**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மனநோயாளர்கள்

நமது நடைமுறை வாழ்க்கை இயந்திர மயமாக மாறிவருவதுபற்றிப் பலரும் பல தடவைகளில் கூறிவருகிறார்கள். இயந்திரப் பாங்கானது எனும்போது அது இருவகை இயல்புகளைச் சுட்டிநிற்கிறது ஒன்று சுற்றம் - சூழலோடு ஒட்டி நில்லாமல், தானும் தன்பாடுமாக வாழுகின்ற நிலைமை. இயந்திரம் ஒழுங்காகத் தனது கடமையைச் செய்யுமல்லாமல் அதற்கு விருப்பு வெறுப்பு இல்லையல்லவா? அந்தக்கருத்தில் கூறப்படுவது இந்த முதலாவது இயல்புநிலை.

இரண்டாவது, வேகத்தோடு தொடர்பானது. இயந்திர வேகத்தில் இயங்கினால்தான் இன்றைய நவீன வாழ்க்கைப் போக்குகளுடன் நாமும் ஒத்து இயங்க முடியும் என்பது இந்த இரண்டாவது இயல்பு. **வல்லது வாழும், அல்லது மாளும்** என்ற உயிரியல் கோட்பாட்டிற்கு அமைவாகப் போட்டிபோட்டு முன்னேறுபவர்கள்தான் வாழமுடியும் என்ற நிலை இன்றைய நிலை.

இத்தகைய இயந்திர வாழ்க்கையில் நாம் விரும்பியோ விரும்பாமலோ ஓடிக்கொண் டிருக்கின்றபோது பல தடைக்கற்கள் குறுக்கே வருகின்றன. **மின்சாரத் தடை, பாதைத் தடை, ஊரடங்கு, இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் விபரீத விளைவுகள்** என்று இன்னோரன்ன தடைகளையெல்லாம் நாம் எதிர்கொண்டு வேகநடை போடுகிறோம்.

இப்படிப் போகும் நமது பாதையில் சில வினோதமான மனநோயாளர்களின் தடைகளையும் நாம் எதிர்கொள்ள வேண்டியவர்களாவதுதான் வேதனைக்குரிய விடயம்.

அவசரமாகப் போய்க்கொண்டிருக்கும் நாம் ஒரு சந்தியில் குழுமி நிற்கும் கூட்டத்தை விலக்கிச் செல்லமுடியாமல் வாகனத்தை நிறுத்தி அவதானிக்கின்றோம். காவடி எடுக்கும் பக்தர்களின் குழுவொன்று நடுச்சந்தியில் நின்று நர்த்தனமாடுகிறது. சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் அதைப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசித்துக்கொண்டிருக்கிறது இன்னொரு கூட்டம். "ஆஹா, என்னே பக்தி! இந்தக் கொளுத்தும் வெயிலில் பாவங்கள் பட்டினியோடு காவடி எடுத்துக்கொண்டு போகுதுகள்" என்று பக்தி பரவசத்துடனும் வியப்புடனும் அதனைப் போற்றி நிற்கும் அப்பாவித்தனமான பொறுமைசாலிக் கூட்டமொன்றும் அங்கே நிற்கிறது.

அரச அதிபர் அழைத்த அவசர கூட்டமொன்றில் கலந்துகொள்ள அவசரமாகப் போய்க்கொண்டிருக்கும் அதிகாரிகள்,

வயிற்றுக்குத்தில் துடிக்கும் பெண்ணை ஏற்றிக்கொண்டு வைத்திய சாலைக்கு விரையும் வாகனத்தில் பயணிக்கும் சிலர்,

குறித்த நேரத்தில் அடுத்த காலப் பூஜையை நிறைவேற்ற அவசரமாகச் செல்கின்ற மதகுரு ஒருவர்,

பாதை அடைக்கப்படமுன்னர் தமது கடமைகளை முடிக்கவேண்டுமெனத் துடிப்போடு ஓடிவந்த புலர்,

இத்தகையயோரைக் கொண்டிருக்கும் இன்னுமொரு வகையாரும் அங்கே நிற்கவேண்டியிருக்கிறது. இப்போது இன்னுமொரு அரிய காட்சியும் அரங்கேறுகிறது. "எல்லாரும் தள்ளி நில்லுங்கோ. இப்பென்ன அவசரம்? இன்னொரு பாட்டுக்கு ஆடுங்கோ" என்ற குரலுடன் சனம் விலக்கிப் 'பொலிசு' வேலை செய்கின்ற ஒருசிலர் அங்கு சமூகத் தலைவர்களாக முன்னியில் விளங்குகிறார்கள். அவர்களுக்கு அங்குள்ள யாவரும் பக்தகோடிகளாகவும் ரசிகர்களாகவும் தென்படுகிறார்களே யல்லாமல் அவசர யுகத்தில் வாழும் 'இயந்திர' மனிதர்கள் என்ற உண்மை புலப்படவில்லை.

தாம் இறைவனின் பக்தர்கள் என்பதால் தம்மைச் சூழவுள்ள யாவரும் அவ்வேளையில் தமக்கு மதிப்பளித்து ஒதுங்கி நிற்கவேண்டும் என்கின்ற மமதை மனப்பான்மை அங்கு கொப்பளித்து நிற்கிறது. நாம் அன்றாடம் காணக்கூடிய ஓர் இயல்பான காட்சியாக இது அமைகிறது. மத உணர்வென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதங்கொண்டதாக மாறக்கூடாது. ஆன்மீகவாதிகள் அடுத்தவருக்கு ஆதரவு தருபவர்களாக இருக்கவேண்டுமேயல்லாமல் இடைஞ்சல் தருபவர்களாக இருகக் கூடாது. இத்தகையதொரு போக்கை எந்தச் சமயமும் அனுமதிக்காது என்பதை நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

வல்லமையோடு கடும் வார்த்தை பேசி அவர்களைப் பலாத்காரமாக அகற்றிவிட்டு மேலே செல்ல முடியாதவர்களல்லர் அங்கே நிற்பவர்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அங்கு நிகழ்வது ஒரு புனிதமான ஆன்மீக நிகழ்வு என்பதற்காக மதிப்பளித்துப் பொறுமையோடு ஒதுங்கிநிற்கும் மற்றவர்களின் உயர்ந்த பண்பைப் பலவீனமாக மதிப்பிட்டுக்கொண்டு தம்மை உயர்ந்தவர்களாகக் காட்டிக்கொள்வதில் குரூரமான ஒரு மனத்திருப்தி காண்கின்ற ஒருவகை மனநோய்தான் இது. தாழ்வுமனப்பான்மையின் ஒரு மாறுபட்ட வடிவம்.

இதேபோன்ற சந்தர்ப்பத்தை நாம் இன்னொரு நிலையிலும் காணலாம். மரண ஊர்வலங்கள் பொது வீதிகளில் வருகின்ற வேளைகளிலும் இதே நிலைமையை நாம் காண்கிறோம். அங்கு இன்னுமொரு படி மேலே போய் 'பறை' வாசிக்கும் கலைஞர்களை உசார்படுத்தி 'சமா' நடத்தி ரசிப்போரும் சீனவெடிகளைக் கொளுத்திப் பாதையில் போவோர் வருவோரைக் கவனிக்காமல் எறிவோரும் என இங்கு அதிக நோயாளர்களைக் காணலாம். இவர்களில் பலர் 'தம்மை மறந்த நிலையில்' அங்கு நிற்பது பகிரங்க இரகசியம். போதாக் குறைக்கு நமது பண்பாட்டு மரபுகளுக்கு ஒவ்வாத புது வரவுகளான 'பாண்ட்' கச்சேரிகள் வேறு. துன்பமான மனநிலையும் புனிதமான செயற்பாடுகளும் இணைந்த நமது சடங்குகளின் இன்றைய இந்த நிலைபற்றி நாம் கண்டுகொள்ளாமலே இருப்பது ஆரோக்கியமானதல்ல.

- வெள்ளிமலை 5ம் இதழ் 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு மின்வெட்டு என்பது உடன்பிறந்த வியாதியாக ஆகிவிட்டது. "மூக்குள்ள வரைக்கும் சளி போகாது" என்பதுபோல மின்வெட்டு தொடர்கதையாகிவிட்டது. இந்நிலையில் அந்தநேர இருளைப் போக்குவதற்கான முயற்சியைத் தத்தமது சக்திக்கேற்றவாறு பலவிதமாகச் சமாளிக்கப்பழகிவிட்டார்கள் மக்கள். 'சார்ச்சபிள் லைற்', மண்ணெண்ணெய் விளக்கு, மெழுகுதிரி, தேங்காயெண்ணெய் விளக்கு எனப் பலவிதமான வழிமுறைகள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான சிரமங்கள் உண்டு. 'சார்ச்சபிள் லைற்' சிக்கனமானது அல்ல. வசதி உள்ளவர்கள்தான் அதனைப் பயன்படுத்தலாம். அதனைப் பயன்படுத்துவோரும் கொஞ்ச நாள் போனதும் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரும். அரை மணி நேரத்திற்குள்ளாக அந்த 'லைற்'றும் தானாகவே மின் வெட்டு நடத்தும்.

மண்ணெண்ணெய், தேங்காயெண்ணெய் இரண்டுமே உச்ச விலை. அதுவும் மண்ணெண்ணெய் சிலவேளைகளில் தட்டுப்பாடான பொருளாகிவிடும். இந்நிலையில் பலருக்குக் கைகொடுக்கும் சாதனமாக இருப்பது மெழுகுதிரி. பெரிய அளவில் தயாரிக்கப்பட்ட மெழுகுதிரி சுமார் ஒன்றரைமணி நேரத்திற்குமேல் எரியக்கூடியது. விலையும் எண்ணெய் வகைகளுடன் ஒப்பிடும்போது மலிவு.

இத்தகைய மெழுகுதிரித் தயாரிப்பில் நமது குடா நாட்டிலேயே பல கைத்தொழில் நிறுவனங்கள் ஈடுபட்டிருப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், அவர்களில் சிலர் மக்களின் துன்பத்தைத் தமது வாழ்வாதாரமாகக் கொள்கின்ற ஏமாற்று வேலையில் ஈடுபடுவதுதான் வேதனைக்குரியது.

உள்ளூர் உற்பத்தியான ஒரு மெழுகுதிரியை ஒருவர் வழமையாகப் பயன்படுத்துவதுண்டு. பத்து மெழுகுதிரி கொண்ட அந்தப் பொதி ஒன்றின் விலை நூற்றைம்பது ரூபா. ஒரு நாளிற்கு ஒரு மெழுகுதிரி போதுமானது. பதினைந்து ரூபாய் போதும்.

ஒருதடவை புதிய கடை ஒன்றில் அவர் மெழுகுதிரி வாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பட்டபோது ஒரு 'பக்கற்' இருநூறு ரூபா சொல்லப்பட்டது. இது வேறு ஒரு கம்பனி தயாரித்தது. மிகத்தரமானது என்று கடைக்காரர் கொடுத்த வாக்குறுதியினால் 'ஒருவேளை இது கூடிய நேரம் எரியக் கூடுமோ' எனும் நப்பாசையுடன் அதனை வாங்கினார் அந்த வாடிக்கையாளர். அவருக்குச் சலுகை செய்வதாக ஒரு இருபது ரூபாயைக் குறைத்தார் கடைக்காரர்.

வீட்டிற்கு வந்து அதனைப் பிரித்துப் பார்த்தபோது வாடிக்கையாளருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. எட்டு மெழுகுதிரிகள்தான் அதற்குள் அடக்கம். அதில் பல வளைந்தும் நெளிந்தும் 'கோறை'யாகவும் சிலவற்றுக்குத் திரியில்லாமலும் இருந்தன. தனது சொந்த ஊரில் செய்யப்படுவதைவிட யாழ்ப்பாணப் பட்டணத்தில் தயாரிக்கப்பட்டது சிறந்ததாக இருக்கும் என்ற நப்பாசையில் ஒரு முப்பது ரூபாதானே அதிகம் கொடுக்கிறேன் என எண்ணிக்கொண்டு வாங்கிய அந்த வாடிக்கையாளர் ஏமாற்றப்பட்டுவிட்டார். எண்ணிக்கை குறைவு. தரமோ மிகக் குறைவு. ஆனால் விலையோ அதிகம். எப்படி இருக்கிறது நமது மக்களின் தொழில் பண்பாடு. மற்றவர்களோடு போட்டிபோட்டுத் தரமான பொருளை வழங்கி வாடிக்கையாளர்களை அதிகரிக்கச்செய்யும் ஆற்றல் அற்றவர்களாக ஏமாற்று நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் நமது கண்ணுக்கு முன்னாலேயே இருக்கிறார்கள். இவர்களை என்ன செய்யலாம்?

*                *                *                *

மனிதரை ஏமாற்றும் மனிதர்கள் இவர்கள். தெய்வத்தையே ஏமாற்றுபவர்களை உங்களுக்குத் தெரியுமா?

முதலில் ஒரு கதை. ஒருவர் மீன்பிடிக்கச் சென்றார். தூண்டிலைப் போடும்போது தமக்குள் சொன்னார். முதலாவது மீன் கடவுளுக்கு. (அதாவது அதன் விற்பனைப் பணத்தைக் கோயிலுக்குக் கொடுத்துவிடலாம்) சற்று நேரத்தில் ஒரு கொழுத்த மீன் அகப்பட்டது. அதைக் கடவுளுக்குக் கொடுக்க அவருக்கு மனம் வரவில்லை. அவர் அப்போது 'அடுத்த மீன்தான் கடவுளுக்கு' என எண்ணிக்கொண்டார். அப்போது திடீரென அந்த மீன் நழுவிக்கொண்டு கடலில் பாய்ந்து மறைந்துவிட்டது. இவருக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றமும் கோபமும். "கடவுளுக்குப் பகிடியும் வெற்றியும் தெரியாது. நான் பகிடிக்குத்தானே சொன்னேன்" என்று உரக்கவே கத்தினார்.

இப்படிப்பட்டவர்கள் எங்களிடையே நிறையவே உள்ளனர். நேரில் வந்து சண்டையிடும் மனிதர்களையே ஏமாற்றுபவர்களுக்கு, கல்லாகவும் செம்பாகவும் காட்சிதரும் கடவுளை ஏமாற்றுவது கஷ்டமா என்ன?

கடைகளில் சிலபொருட்களை வாங்கச்சென்றால் கோயிலுக்கா என்று கேட்கும் வியாபாரிகள் பலர் உள்ளனர். கோயில் என்றவுடன் புனிதமாக, பெறுமதியாக, சிறந்ததாகத் தரப்போகிறார்களாக்கும் என நினைத்துக்கொள்ளும் அப்பாவிகள் ஏமாளிகள்தான். தேன், நெய், வெற்றிலை போன்ற இப்பொருட்களில் இரண்டாம் தரமான பொருட்களைக் கோவிலுக்கு எனக் கொடுக்கிறார்கள். வாங்குபவர்களின் மனநிலைதான் அவர்களை அவ்வாறு செய்விக்கிறது. ''கோயிலுக்குத்தானே, இது மலிவாய்த்தாறன் கொண்டுபோங்கோவன்" என்று வியாபாரி கூறியதும் குறைந்தபட்சம் அவரைக் கோபமாகப் பார்த்துவிட்டு, ''கோயிலுக்குத்தான் விலைகூடிய தரமான பொருளைக் கொடுக்கவேண்டும்'' என அறிவுறுத்த எவராவது உள்ளனரா? இல்லையே.

தேன், நெய் முதலியவை சிறு போத்தல்களில் அடைத்து விற்பனைக்கு வருகின்றபோது 'இது கோவில் தேவைகளுக்கு உகந்தது" என்ற 'லேபளு'டன் காணப்படுகின்றது. 'இது தரமானது அல்ல' என்பதே அதன் பொருள் என்பது அத்துறையில் ஈடுபட்டோர் யாவருக்கும் தெரியும்.

கடவுளை ஏமாற்றுகிறார்கள். வாடிக்கையாளர்களை ஏமாற்றுகிறார்கள். ஏமாறும் ஏமாளிகள் தெரிந்தோ தெரியாமலோ ஏமாற்றுபவர்களுக்கு உதவுகிறார்கள். இவர்கள் யாவரையும் பார்த்து இறைவன் சிரிக்கிறான். 'இவர்கள் இன்றைக்கு மட்டுமே வாழ்பவர்கள். நாளைக்கும் வாழவோ அல்லது என்றுமே வாழவோ தம்மைத் தயார் செய்யாத இவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றுகிறார்கள்'

**- வெள்ளிமலை 6ம் இதழ் 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமலனும் விமலனும்

(பெற்றோர்களுக்கு: சிறுவர்களை ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைக்காமல் அவர்களை அவர்களாகவும் வளர விடவேண்டும் என்ற உளவியலை அவர்களது கோணத்தில் பார்த்து சிறிது வித்தியாசமாக எழுதிய இந்த ஆக்கத்தின் தன்மையை உணர்ந்துகொண்டு அவர்கள் இதை வாசித்தபின் அவர்களிடம் ஏற்படும் உளவியல் பரிணாமத்தை அவதானியுங்கள். நீங்களும் ஒத்துழையுங்கள்)

என்ன விமலன், முகம் கறுத்துப் போயிருக்குது? வழக்கம்போலை வீட்டிலை அப்பா அம்மாவேடை ஏதோ வில்லங்கம் போலை இருக்குது?

எந்த நாளும் வில்லங்கம் தானே கமலன்? இப்ப உன்னட்டை ஒருக்காப் போட்டுவாறன் எண்ட உடனையே தொடங்கீட்டினம். அதுகளோடை ஒரே துன்பமாய்ப் போச்சுது.

அதையேன் துன்பமெண்டு சொல்லிறாய்? இப்ப அது உனக்குப் பழகிப் போட்டுதெண்டால் இனி அது துன்பமாயிராது தானே. நீ முதலிலை உதுக்கெல்லாம் அலட்டிக்கொள்ளாமலிக்கப் பழகவேணும்.

எந்த நேரமும் படிப்பு, படிப்பு எண்டு ஒரே அறுவை. கொஞ்ச நேரம் விளையாடினால் என்ன?

கொஞ்சம் பொறு. இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே? நீ இண்டைக்குக் காலமை எத்தினை மணிக்கு எழும்பினனி?

ஏழரை மணி.

காலமை கொஞ்ச நேரம் ஏதாவது படிச்சனியோ?

உனக்கென்ன கமலன் விசரே? விடிய எழும்பின உடனை புத்தகத்தைத் தூக்க ஒரே அலுப்பாயிருக்குது.

சரி. காலமை உன்ரை விளையாட்டுச்சாமானோடை பொழுது போட்டுது. அதுக்குப்பிறகு ரியூஷன். பிறகு என்ன செய்தனி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரி. வி. யிலை நல்ல படமொண்டு அதைப் பாத்துக் கொண்டிருக்கேக்கையே இரண்டாம் உலகமகா யுத்தம் தொடங்கீட்டுது.

அப்ப முதலாம் உலக மகாயுத்தம் படுக்கையாலை எழும்பேக்கை தொடங்கீட்டுது போலை?

உனக்குத் தெரிஞ்சது தானே!

பிறகு...?

பின்னை உந்தத் தசாவதாரம் சீ. டீ. எடுத்தரப்போறன் எண்டன். சீ. டீ. பிளேயரையே எடுத்து வைச்சிட்டார் அப்பா.

நான் ஒண்டு சொல்லட்டே. அவை சொல்லிறதிலையும் செய்யிறதிலையும் பிழையில்லைத் தானே. நீ......

கொஞ்சம் பொறு. எனக்கும் ஆசையள் இருக்கும் எண்டு ஏன் நினைக்கினமில்லை. எந்த நேரமும் படி படி எண்டு ஒரே கரைச்சல். வீட்டை விட்டு ஒரு இடமும் வெளிக்கிடக் கூடாது. சிநேகிதரோடை சேரக் கூடாது........

இஞ்சை பார் விமலன். இதைத்தான் தலைமுறை இடைவெளி எண்டு சொல்லிறது. அவை முந்தின தலைமுறை ஆக்கள். அவை வளர்ந்த முறை வேறை. அதேபோலைதான் நாங்களும் நடக்கவேணுமெண்டுதான் அவை நினைப்பினம். அது சரி எண்டு நான் சொல்லேல்லை. ஆனால் நாங்கள் கொஞ்சம் அட்ஜெஸ்ட் பண்ணிக்கொண்டு போனால் எல்லாம் சரிவரும்.

உன்ரை கொப்பர் கொம்மாவோடை உது சரிவரும். ஆனால் எங்கடை அப்பா அம்மாவுக்குச் சரிவராது. உனக்கெல்லாம் எவ்வளவு சுதந்திரம்.

நீ நினைக்கிறமாதிரியில்லை விமலன். எங்கடை வீட்டையும் உந்தப் பிரச்சினை இருக்குது. ஆனால் என்ரை அப்பா அம்மா நல்லாய்ப் படிச்சிருக்கினம். அதோடை நவீன பழக்க வழக்கங்களையும் கொஞ்சம் அனுசரிச்சுப் போற தன்மை வீட்டிலை இருக்கிறதாலை என்ரை விருப்பங்களுக்குத் தடை குறைவு. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைவிட முக்கியமான ஒரு விசயத்தை நீ தெரிஞ்சுகொள்ளவேணும்.

என்ன அது?

அனுசரிச்சுப் போறதெண்டது இரண்டு பக்கமும் இருக்க வேணும். அதை ஆர் முதலிலை தொடங்கிறதெண்டதுதான் பிரச்சினை. நான் அப்பா அம்மாவின்ரை விருப்பத்துக்கு ஓரளவு நடக்கிறதாலை அவை என்ரை விருப்பத்துக்கும் கொஞ்சம் இடம் தருகினம். நீ பிடிவாதமாய் அவை சொல்லிற எல்லாத்துக்கும் மறுத்தான் போடுறதாலை அவைக்கு உன்னிலை வெறுப்புக்கூட வந்திடும். பழைய தலைமுறை ஆக்கள் எங்களைத் தங்கடை கட்டுப்பாட்டுக்குள்ளை வைச்சிருக்கத்தான் விரும்புவினம். அதுமட்டு மல்லாமல் தங்களுக்கு நிறைய அனுபவம் இருக்கிறதாலை எல்லாம் தங்களுக்குத்தான் தெரியும் எண்டு நினைப்பினம். நாங்கள் சின்னப்பிள்ளையள் எண்டதாலை எங்களுக்கு ஒண்டும் தெரியாது எண்டும் எங்களை மற்றாக்கள் ஏமாத்திப் போடுவினம் எண்டும் அவை நினைச்சுக்கொண்டிருப்பினம். எந்த நேரமும் கங்காரு தன்ரை வயித்துப் பையிலை குட்டியை வச்சிருக்கிறமாதிரி எங்களைத் தங்கடை கையிலை வச்சிருக்கோணுமெண்டு நினைப்பினம்.

உதுதானே துன்பமாயிருக்குது.

அவை அப்பிடி ஏன் நினைக்கினமெண்டு விளங்கிக் கொண்டமெண்டால் அது துன்பமில்லை. பெரிய இன்பம். எங்களை அளவுக்குமிஞ்சி நேசிக்கிறதினாலைதான் அவை உப்பிடி நடக்கினம். தங்கடை அன்பை நாங்கள் வேறை நண்பர்களோடை பங்குபோடிறதைக்கூட அவையாலை சிலநேரம் தாங்கமுடியுதில்லை. அதுதான் கண்டபடி சிநேகிதரோடை சேராதை எண்டு சொல்லுகினம். நாங்கள் அவையைப் புரிஞ்சுகொள்ளவேணும். அவைக்குத் தெரியாத கன விசயங்களை நாங்கள் இயல்பாகவே தெரிஞ்சு கொள்ளுவம் எண்டதையும் எங்களாலையும் பல விசயங்களைச் செய்ய முடியும் எண்டும் அவை விளங்கத்தக்கதாக நாங்கள் நடந்துகொள்ளவேணும். அதோடை நவீன கால விசயங்கள் அவைக்கு ஒண்டுமே தெரியாது எண்டு நாங்கள் அவையைக் குறைச்சு எடைபோடவும் கூடாது. அவைக்குக் குடுக்கவேண்டிய மரியாதையைக் குறைக்கவும் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ என்ன பெரிய லெக்சரெல்லாம் அடிக்கிறாய்?

நான் சொல்லிறபடி நீ நடந்துபார். விளங்கும். அவையின்ரை ஆசையளை முதலிலை நாங்கள் பூர்த்திசெய்யவேணும். பிறகு எங்கடை ஆசையை விண்ணப்பிக்கவேணும். அதிலை பிழை இல்லை எண்டதை விளக்கமாய்ச் சொல்லவேணும். படம் பாக்கிறது, ரி.வி. பாக்கிறது, விளையாடுறது எல்லாம் தேவையான அளவுக்கு மட்டும் எண்ட நிலையிலை வீட்டிலை கொஞ்ச நேரம் ஆறுதலாயிருந்து படிக்கிறதுக்கும் அப்பா அம்மாவின்ரை வேலையளிலையும் நாங்கள் கொஞ்சம் பங்கெடுக்கவேணும். அப்பதான் இடைவெளி குறையும். அவை சொல்லிறதையும் நாங்கள் கேப்பம். நாங்கள் சொல்லிறதையும் அவை கேட்க வைப்பம். இப்ப நேரமாச்சுது. உடனை வீட்டை போ. பழைய காலத்துப் பழக்கம் எண்டு பகிடி பண்ணாமல் கை கால் முகம் கழுவிச் சாமி கும்பிட்டுட்டு ஒரு மணித்தியாலமாவது படி. அப்பா அம்மாவுக்கு எங்கடை பாடங்கள் தெரியாது எண்டு நினைக்காமல் அவையிட்டைக் கொஞ்சம் கேட்டுப்படி. அதுக்குப் பிறகு "வாற சனிக்கிழமை தசாவதாரம் சீ. டீ. எடுத்துத் தாறீங்களோ" எண்டு கேட்டுப் பார். எல்லாம் புதுமாதிரி மாறியிருக்கும்.

ஓ. கே. நான் போட்டு வாறன்.

## கமலனும் விமலனும் – 2

*"கமலன்......... கமலன்..."*

*"ஆர் விமலனே? ... வா, வா.. என்ன இப்ப விடியக்காலமை திடீரெண்டு வந்திருக்கிறாய்?"*

*"சும்மாதான்... பொழுது போகேல்லை... ரி.வி. க்குக் கிட்டவும் போகேலாமல் கிடக்குது. பின்னைத்தான் கொஞ்சநேரம் ஏதேன் விளையாடிப்போட்டுப் போவமெண்டு வந்தனான்......"*

*"உனக்கென்ன விசரே? இப்ப என்ன நேரம் விமலன்? காலமை ஏழரை மணிக்கு விளையாட எண்டு வந்திருக்கிறாய். அப்பா கண்டால்........"*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுக்கேன் அங்கையும் இஞ்சையும் பாத்துப் பயப்பிடுறாய்? அப்பாவுக்கு இவ்வளவு பயமே?"

"பயமில்லையடா. இது மரியாதை. அவருக்கு விருப்பமில்லாததை நாங்களாயே செய்யாமல் விட்டிட்டால் கோபமும் பயமும் இல்லாமல் போகிடும்."

"விளையாட்டு ஏன் கூடாததெண்டு அவர் சொல்லவேணும் கமலன்?"

"ஐயோ விமலன், உனக்கு எப்பத்தான் இயல்பான திசையிலை சிந்தனையள் போகுமோ தெரியாது. முதல் கேக்கிறாய் அப்பாவுக்கு ஏன் பயப்படவேணுமெண்டு. இப்ப கேக்கிறாய் விளையாட்டு கூடாததோ எண்டு....... உதெல்லாம் விதண்டா வாதங்கள்."

"ஏன் அப்பிடிச் சொல்லிறாய்?"

"எங்கடை அப்பா எங்களைக் கோபிக்கிறார் எண்டால் நாங்கள் செய்யிறது பிழை எண்டு அர்த்தம். பிழையான ஒண்டை நாங்கள் செய்யப் பயப்பிடத்தானே வேணும். அப்பாவுக்குப் பயப்பிடவேண்டாம். எங்கட மனச்சாட்சிக்குப் பயப்பிடவேணும். காலமை நேரம் படிப்புக்குரியது. பின்னேரம் விளையாட்டுக்குரியது. இண்டைக்கு விடுதலை நாளெண்டதாலை விடிஞ்ச உடனை விளையாட்டு எண்டும் ரி. வி. எண்டும் பொழுது போக்கிறது சரியோ விமலன்?

அது அதுக்கெண்டு நேரம் ஒதுக்கி அந்தந்த நேரத்திலை செய்துபழகவேணும். அதைத்தான் 'பங்சுவாலிற்றி' எண்டு ஆங்கிலத்திலை சொல்லுவினம். இயற்கையிலை எல்லாம் ஒரு காலச்சக்கர ஒழுங்கிலை சுழன்றுகொண்டிருக்கிறதுபோலை நாங்களும் கால நேர ஒழுங்குகளைக் கடைப்பிடிச்சால் அந்த ஒத்திசைவு எங்களுக்கு எவ்வளவோ நன்மையைத்தரும்"

"சரி, சரி பிரசங்கம் முடியட்டும். நீ இப்ப என்ன செய்யிறாய்? அப்பா உங்கை இல்லைப்போலை கிடக்கு...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா இஞ்சை இல்லைத்தான். ஆனால் என்ரை மனச்சாட்சி என்னடைடை இருக்குது. அதோடை அப்பா எனக்குச் சொல்லித்தந்த கட்டுப்பாடு என்னோடை ஒட்டியிருக்குது. அதைவிட அவர் எங்கையிருந்தாலும் என்னைப்பற்றி அவர் வைச்சிருக்கிற நம்பிக்கை எனக்குப் பக்கத்திலை இருக்கும். அதினாலை அவர் என்னை 'அதைச்செய், இதைச் செய்யாதை' எண்டு ஆக்கினைப்பண்ணத் தேவையில்லை.

இப்ப கொஞ்ச நேரம் படிக்கிறது. பாடமாக்க வேண்டியதுகளைப் பாடமாக்கிறது. இது இப்ப முடிஞ்சிட்டால் இரவு சாமி கும்பிட்ட உடனை இருந்து வீட்டுவேலையை முடிச்சிடலாம். அதுக்குப் பிறகு நேரமிருந்தால் எல்லாப் புத்தகத்தையும் எடுத்துப் படிச்ச பாடம் எல்லாத்தையும் ஒருக்கால் திருப்பிப் பாப்பன். அதுக்குப் பிறகு சாப்பிட்டிட்டு கொம்பியூட்டரிலை இருப்பன்.

இப்ப படிச்சு முடிச்சிட்டு எட்டு மணிக்குமேலை ரி. வி. ஒருக்கால் பாத்திட்டு பூக்கண்டுகளுக்குத் தண்ணி ஊத்தி வீடு வளவு துப்புரவாக்கிப்போட்டுத் தங்கைச்சியோடை கொஞ்சநேரம் விளையாடுவன். பள்ளிக்கூடத்திலை மட்டுமில்லாமல் வீட்டிலையும் ஒரு 'ரைம்ரேபிள்' இருக்குது பாத்தியே. இதுக்குமேலை அப்பா என்ரை அலுவலிலை தலையிடவும் தேவையில்லை. நான் அவருக்குப் பயப்படவும் தேவையில்லை. விளங்கிச்சுதே"

" ஏதோ விளங்கிற மாதிரியும் கிடக்குது. கேக்க நல்லாயிருக்குது. எனக்கு உது சரிவருகுதில்லையே"

"எல்லாம் மனத்தைப் பொறுத்ததுதான். பழகினால் சரிவரும் ........ அதுசரி கனக்க வீட்டுவேலை ஆங்கிலத்திலை தந்தவையல்லே செய்தாச்சே?"

"ராத்திரிக் கொப்பியைத் தேடினன் காணேல்லை. லைற்றும் நிண்டிட்டுதல்லோ. எல்லாரோடையும் சண்டை போட்டிட்டுப் படுத்திட்டன். இப்பதான் நீ சொல்ல நினைவு வருகுது. போய் ஆங்கிலக் கொப்பியைத் தேடவேணும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உதுதானே பிழை எண்டுறது. தேடிறது எண்டது அறிவுத் தேடலாய் மட்டும்தான் இருக்கவேணும். உதுகளைத் தேடிற வேலை வைச்சிருக்கக் கூடாது. எங்களுக்கெண்டு ஒரு இடத்தை வைச்சிருக்கவேணும். அதிலை எல்லாத்தையும் அழகாய் ஒழுங்காய் அடுக்கி வைச்சிருக்கவேணும். பொழுதுபோகேல்ல எண்டு இப்ப சொன்னியே. இந்தமாதிரி நேரத்திலை அதுகளைத் திரும்பத் திரும்ப ஒழுங்காய் அடுக்கி வைச்சிருந்தால் ஒண்டையும் தேடத் தேவையில்லையே. கண்ணை மூடிக்கொண்டு எதையும் எடுக்கலாம்.

'மேஜர் சந்த்ரகாந்த்' எண்டு ஒரு படம் வந்ததாம். அதிலை வாற கதாநாயகனுக்குக் கண் தெரியாது. ஆனால் வீட்டிலை எல்லாம் அந்தந்த இடத்திலை ஒழுங்காய் வைச்சபடி இருக்கிறதாலை அவர் தன்ரைபாட்டுக்கு எல்லா அலுவலும் செய்வராம்.

நேரக் கட்டுப்பாடு மாதிரி இடக்கட்டுப்பாட்டையும் நாங்கள் வைச்சிருக்கோணும். அந்தந்த இடத்திலை அந்தந்தப் பொருள் இருக்கிறதைப்போலை அழகும் வசதியும் வேறொண்டிலையும் இல்லை. அங்கை பார், உன்ரை கால் செருப்பு ரண்டும் எங்கை கிடக்குதெண்டு. நீ வந்து வாசலுக்கை உள்ளடேக்கையே ஒவ்வொரு செருப்பு ஒவ்வொரு பக்கமாய்ப் பறந்ததை நான் பாத்தனான். இனிப் போகேக்கை தேடவேணுமாக்கும்.

"அப்ப செருப்பை எடுத்துக்கொண்டு போட்டு வா எண்டு சொல்லிறாய் போலை ..... சரி நான் போட்டு வாறன் கமலன்"

"உண்மைதான். நீ இப்ப வீட்டை போய் எல்லாத்தையும் அடுக்கிவைச்சு ஆங்கிலக் கொப்பியை எடுத்து வீட்டு வேலையைச் செய். நான் பத்துமணிக்குமேலை உன்ரை வீட்டை வாறன். கொஞ்ச நேரம் விளையாடுவம். எதையும் தொடர்ந்து செய்தால் கூடாது. எல்லாத்துக்கும் அளவு கணக்கு இருக்குது. ஒழுங்கான இடம், சரியான நேரம், உரிய காலப்பிரமாணம் இதுகளை நாங்கள் கைக்கொண்டால் ஒரு பிரச்சினையும் எங்களுக்கு இல்லை. போட்டு வா விமலன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமலனும் விமலனும் – 3

"ட்ரிங்ங்........."

"ஹலோ"

"ஹலோ ஆர் பேசிறது?"

"நீங்கள் ஆர் எண்டு ........."

"நீங்கள் ஆர்?"

"டேய் விமலன், நீயல்லோ போன் எடுத்தனி? ஆர் பேசிறதெண்டு நீதான் சொல்லவேணும். எனக்கு உன்ரை குரலிலை விளங்கீட்டுது. வேணுமெண்டுதான் நீ ஆரெண்டு கேட்டனான்"

"பிறகேன் உந்த விளையாட்டு?"

"ஒரு விளையாட்டுமில்லை விமலன். தொலைபேசியிலை கதைக்கிறதுக்கெண்டு சில மனேர்ஸ் இருக்குதடா. அது தெரியாமல் அதைக் கையாளுறது வடிவில்லை"

"கமலன், ரெலிபோன் பற்றி உனக்குத் தெரியாத கன விசயம் நானல்லே சொல்லித் தந்தனான்........."

"பொறு, பொறு.... அதை ஆரோ மறுத்ததே? நீ அதிலை வலு கெட்டிக்காரன்தான். ஆனால் இண்டைக்கு இப்ப ரெலிபோன் எடுத்தது ஆர்? நீதானே. அப்ப ரிங் பண்ணின உடனை எடுத்து 'ஹலோ' சொல்லிறது மட்டும்தான் என்ரை வேலை. உடனை நீதான் நீ ஆரெண்டும் உனக்கு ஆர் தேவை எண்டும் சொல்லவேணும்"

"ஏன் இப்ப நான் கேட்டதிலை என்ன பிழை?"

"என்னை நீ கேட்டதிலை ஒண்டும் பிழை இல்லை. ஆனால் இப்ப என்ரை அப்பா இருந்து அவர் ரெலிபோன் எடுத்திருந்தால் நீயும் நானும் ஏச்சு வாங்கியிருப்பம். இதெல்லாம் ஒரு பண்பாட்டுப் பழக்க வழக்கம். நான் சொல்லிறதைக் கொஞ்சம் வடிவாய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள். இஞ்சை கன பெரியாக்களுக்கும் ரெலிபோனிலை கதைக்கிறது எப்பிடி எண்டு தெரியாது. ஒருவிதத்திலை பாத்தா இப்ப நான் உனக்கு இந்தப் பிரசங்கத்தை ரெலிபோனிலை பண்ணிறதே தப்பு."

"பிரசங்கம் பண்ணிறது உன்ரை வழக்கம்தானே. சொல்லு நான் சிவனே எண்டு கேக்கிறன்."

"நான் இப்ப செய்யிறது இரண்டு பிழை. ஒண்டு, நேரிலை கதைக்கக் கூடிய நீண்ட உரையாடல்களையெல்லாம் ரெலிபோனிலை வைச்சுக்கொள்ளிறது பெரிய பிழை. எங்கடை நாட்டைப் பொறுத்தவரை தொலைத் தொடர்பு வசதியள் வலு குறைவெண்டதாலை ஒரு சில லைன்கள் தொடர்பிலை இருந்தால் வேறை சில லைன்கள் தொடர்பு கிடைக்காது. வலு அவசரமாய்க் கதைக்க வேண்டிய சிலபேற்றை வாய்ப்புக்களை நாங்கள் தடை செய்யிறம். இதைக் கனபேர் விளங்கிக் கொள்ளிறதில்லை. எங்கடை ரெலிபோனிலை நாங்கள் கதைக்கிறம். எவ்வளவு நேரமும் நாங்கள் கதைக்கலாம்தானே எண்டு கண்ட கதையெல்லாம் கதைப்பினம்."

"சரி சரி. அப்ப கெதியாய் அந்த ரண்டாவது பிழையையும் ஒப்புவியன் கேப்பம்"

"இப்ப நீதான் ரெலிபோன் எடுத்தனி. என்ன அலுவல் எண்டு நான் இன்னும் கேட்கேல்லை. நானே கனக்கக் கதைச்சுக் கொண்டிருக்கிறன். உன்ரை தேவை என்ன எண்டு கேட்டு அதுக்குப்பிறகுதான் நான் என்ரை கதையைச் சொல்லிறதுதான் முறை."

"நான் சும்மாதான் எடுத்தனான்........ இண்டைக்கு ஒரு அதிசயமெல்லே நடந்திருக்குது!"

"என்ன அப்பாவோடை ஏதும் வழக்கமான பிரச்சினையோ?"

"இல்லை. ஒரு புது சீடீ வாங்கிக்கொண்டுவந்து தந்தவர் அப்பா. அதோடை விருப்பமெண்டால் விமலனையும் கூப்பிடன் எண்டும் சொன்னவர்......"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடி சக்கையெண்டானாம். இதெல்லாம் ஏன் எண்டு தெரியும் தானே?"

"ஓம். இப்ப விடுதலை விட்டுட்டுது தானே. அதோடை இந்தமுறை நான் வகுப்பிலை நாலாம் பிள்ளையாய் வந்தது அப்பாவுக்கு வலு சந்தோசம். நானும் நீ சொன்னமாதிரிக் கொஞ்சம் அனுசரிச்சுப் போனன்.....

"பாத்தியோ. இதுதான் சரியான வழி. நான் இண்டைக்குப் பின்னேரம் வாறன்"

"டக்"

* * * *

"விமலன்!"

"வா கமலன் உன்னைத்தான் பாத்துக்கொண்டிருக்கிறன். ஏன் இவ்வளவு லேட். சாப்பிட்ட உடனை வந்திருக்கலாமே?

"இப்ப என்ன லேட்? இப்பதானே மூண்டு மணி. நான் காலமை செய்த பிரசங்கத்தை இன்னும் தொடரவேணும்போலை கிடக்கு...."

"இதென்ன தொந்தரவாய்ப் போச்சுது. ஒரே பிரசங்கப் பைத்தியமாய் இருக்கிறாய்...."

"இல்லை விமலன். தானாய்த் தெரியாதவைக்கு நாங்கள் இயண்டதைச் சொல்லித் திருத்த முயற்சிக்கிறதிலை என்ன பிழை? எங்களைக் கண்ட உடனையே சிலபேர் போரடிக்கிற ஆள் வருகுது எண்டு சொல்லி ஒளிப்பினம். அதைப்பற்றிப் பரவாயில்லை. கால மாற்றத்திலை நாங்கள் எங்கடை அடிப்படைப் பண்பாடுகளை மாற்றக்கூடாது. அதுக்காக....."

"சரி கமலன், இப்ப என்ன புதுப் பிரசங்கம்?"

"சாப்பிட்ட உடனை வாறதிலை ஒண்டுமில்லை. நீயும் நானும் பொடித்தரவளியள். நாங்கள் பகல் நேரத்திலை படுத்திருக்கிறதும் ஓய்வெடுக்கிறம் எண்டு சோம்பியிருக்கிறதும் பிழை. ஆனால் எங்கடை பெற்றோரைப் பொறுத்தமட்டிலை, அவையின்ரை வயது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையள் இதுகளுக்குத் தக்கபடி கட்டாயம் பகல்நேர ஓய்வு தேவை. கொஞ்சநேரம் பகல் நித்திரை கொள்ளிறதுகூட நல்லது எண்டு இப்ப ஆய்வாளர்கள் சொல்லுகினம். அப்ப, அவை சாப்பிட்டிட்டு ஓய்வெடுக்கிற நேரத்திலை நாங்கள் எங்கடை கும்மாளத்திலை நிக்கிறது பிழையல்லோ?"

"உதையெல்லாம் நான் யோசிக்கிறதில்லை......"

"நீ மட்டுமில்லை பெரியாக்கள்கூட அயலவையைப்பற்றி நினைக்கிறேல்லைத்தானே. 'மை கார், மை பெற்றோல், மை ரோட்....' எண்ட கொள்கைதான்...... காலமை ரெலிபோன் பேசிறதைப்பற்றிக் கொஞ்சம் சொன்னனானல்லே? சிலபேர் நினைச்ச நேரமெல்லாம் ரெலிபோன் எடுப்பினம். கதைக்கவேண்டிய விசயத்தின்ரை முக்கியத்துவத்துக்கு ஏற்ற மாதிரித்தான் எடுக்கிற நேரத்தையும் தீர்மானிக்கவேணும். கதைக்கவேண்டிய ஆக்கள் இப்ப என் செய்வினம், ஓய்வாயிருக்கிற நேரமோ, எண்டதையும் யோசிச்சு எடுக்கிறது நல்லதல்லே. 'பீக் அவர்' பார்த்து எடுத்தால் ரண்டுபேருக்குமே செலவு மிச்சமாயிருக்கும்"

"பீக் அவரிலை அவை நித்திரையெண்டால்...."

"நீ விதண்டாவாதம் பேசிறாய். நான்தான் சொன்னனே விசயம் என்ன, கேக்கிறவையின் நிலைமை என்ன எண்டு யோசிச்சுக் கதைக்கவேணுமெண்டு.... அதோடை எடுத்த உடனையே 'நீங்கள் ஆர்?' எண்டு கேக்கிறதை விட்டிட்டு, 'நான் இன்னார் பேசிறன் எனக்கு இன்னாரோடை பேசவேணும்' எண்டு சொல்லவேணும். அதுக்குப்பிறகு அவர் வந்து எடுத்த உடனை நீ இப்ப ஃப்ரீயா இருக்கிறியா? இப்ப கதைக்கலாமா எண்டு கேட்டு ஆரம்பிக்கிறது எப்பவும் பண்பான விசயம். வேறை ஆக்கள் எங்களுக்கு எடுக்கேக்கை 'நீங்கள் ஆர்?' எண்டு முதல்லை கேக்கலாம். ஆனால் அவர் சொல்லிற விசயத்தைக் கேட்டிட்டுத்தான் நாங்கள் எங்கடை அலுவல் ஏதும் இருந்தால் கதைக்கோணும். அதைவிட்டிட்டு அவர் கதைக்கத் தொடங்கமுன்னம் நாங்கள் 'நான் எடுக்கவேணுமெண்டு நினைச்சனான்' எண்டு தொடங்கி எங்கடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையை அவிட்டுவிடத் தொடங்கிறது சரியோ?"

"அப்பா வாறார் கமலன்"

"தம்பி வாரும் கமலன். நான் ஒரு குட்டித் தூக்கம் போட்டாச்சு. நீங்கள் இனி சீடீ பாருங்கோவன். பிறகு கொஞ்ச நேரம் விளையாடிட்டுப் போகலாம்."

"ஓம் மாமா, தாங்க்ஸ்"

## கமலனும் விமலனும் 4

"ட்ரிங்ங்......"

"ஹலோ"

"ஹலோ, நான் விமலன் பேசிறன். கமலன்தானே?"

"ஓமோம். குட்மோர்ணிங். என்ன விசேஷம்."

"நீ ஒருக்கால் உன்ரை வேலையள் முடிய இஞ்சை வாறியே?"

"அதுக்கென்ன. பின்னேரம் வாறன்"

"ஓ.கே."

** ** ** ** ** ** ** ** **

"விமலன்!"

"ஓ, கமலன் வா, வா. உன்னைத்தான் காத்துக்கொண்டிருக்கிறன்."

"என்ன, ஏதும் பிரச்சினையோ?.......... இதென்ன வீடே மாறியிருக்குது? கேற்றடியிலை புதுப்புதுப் பூக்கன்றுகள்......."

"என்ரை வேலைதான்...."

"ஓகோ, அதுதான் ரண்டுமூண்டு நாளாய் ஒரே பிசி எண்டு சொல்லி என்னோடை கதைக்கேல்லையோ?"

"சரி, வா உள்ளுக்குப் போவம்"

"இந்தப் பூச்சாடி, பூக்கள் எல்லாம் புதுசா இருக்கே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான்தான் செய்தனான்"

"அதென்ன, பள்ளிக்கூடத்திலை கைவேலைக்குச் செய்யச் சரிவருகுதில்லை எண்டு குழம்பிக்கொண்டு நிண்டனி. இப்ப என்னணெ்டு சரிவந்தது?"

"என்னவோ சரிவந்திட்டுது"

"விமலன், எங்கடை மனத்துக்கேற்றபடிதான் கைகால்களும் இயங்குது எண்டது சரிதான். விருப்பத்தோடையும் அக்கறையாயும் செய்தால் எல்லாம் சரிவரும்"

"என்ரை அறைக்குப் போவம் வா"

"அட! எல்லாம் நீற்றாய் அடுக்கி வைச்சிருக்குது. அழகாய் இருக்குது. அதுசரி உந்தக் கபேட் புதிசு போலை இருக்குது"

"ஓம். இப்ப ரண்டு நாளாய் நான் எல்லாத்தையும் ஒழுங்காய் அடுக்கி வைச்சிருக்கிறதைப் பாத்திட்டு நேற்று அப்பா திடீரெண்டு வாங்கிக்கொண்டு வந்து இறக்கிவிட்டார். எனக்கு வலு சந்தோஷம்"

"சந்தோஷம் உனக்கு மட்டுமல்ல. அப்பாவும் சந்தோஷத்திலைதான் வாங்கித் தந்திருக்கிறார். இப்ப இதுகளைப் பாக்க எனக்கும் சந்தோஷமாய்த்தான் இருக்குது"

"இதைப் பாத்தியே கமலன்"

"அட! உது என்ன ரைம்ரேபிள்?"

"நீ சொன்ன மாதிரி எல்லாப் பாடங்கள் படிக்கிறதுக்கும் இடையிடையிலை வீட்டு வேலை செய்யிறதுக்கும், விளையாடிறதுக்கும் நேரங்கள் ஒதுக்கியிருக்கிறன்"

"மெத்த நல்லது. ஆனால் இன்னொண்டும் இப்பவே பழகிக்கொள்ள வேணும்"

"என்ன?"

"ஒரு குறிப்பிட்ட ரைம்ரேபிள் சிஸ்டத்துக்கு அப்பிடியே மாற்றமில்லாமல் இறுக்கமாய்ப் பழகிறவை அதிலை ஒரு சின்ன மாற்றம் வந்தாலும் குழம்பிப் போவினம். அப்பிடியில்லாமல் இடைக்கிடை மாறுதல்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேணும்"

"ஓ, எங்கடை அப்பாவிலை உந்த வீக்னெஸ் இருக்குது. நான் அவதானிச்சிருக்கிறன். ஒரு இடத்திலை இருக்கிற பொருள் இன்னொரு இடத்திலை மாறினாலே கத்தத் தொடங்கிவிடுவார்"

"ஒழுங்கமைப்புக்களும் கட்டுப்பாடுகளும் சரிவர இருக்கவும் வேணும். இடைக்கிடை அதுகளிலை சின்னச்சின்ன மாற்றங்களையும் உண்டாக்கோணும். தற்செயலாய் வாற திடீர் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளவும் தயாராய் இருக்கவேணும். அதுசரி நான் போரடிக்கிறனாக்கும்......"

"இல்லை. இப்ப இப்பிடியான விசயங்களைக் கதைக்க விருப்பமாய் இருக்குது. நான் கொஞ்ச நாளை வீணாக்கிப்போட்டன் எண்டு நினைக்கிறன். அது இருக்கட்டும். நீ 'பொயம்' பாடமாக்கிப்போட்டியே?

"இல்லை விமலன். இன்னும் கொஞ்சம் கிடக்குது. நீ......?"

"நான் பாடமாக்கிப்போட்டன், சொல்லட்டே,

Be careful little eyes what you see.
There is God watching you, He is always watching you.
Be careful little eyes what you see.

Be careful little ears what you hear.
There is God watching you, He is always watching you.
Be careful little ears what you hear.

Be careful little mouth what you speak.
There is God watching you, He is always watching you.
Be careful little mouth what you speak.

Be careful little hands what you do.
There is God watching you, He is always watching you.
Be careful little hands what you do.

Be careful little feet where you go.
There is God watching you, He is always watching you.
Be careful little feet where you go.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Be careful little mind what you think.
There is God watching you, He is always watching you.
Be careful little mind what you think.

Be careful little heart what you feel.
There is God watching you, He is always watching you.
Be careful little heart what you feel.

Be careful little children what you do.
There is God watching you, He is always watching you.
Be careful little children what you do.

**இக்கவிதையின் பொருள்:**

**உனது கண்கள் எதனைப் பார்க்கின்றன என்பதில் கவனமாக இரு! கடவுள் எப்போதும் உன்னை அவதானித்துக் கொண்டிருக்கிறார்.**

**அதுபோலவே உனது காதுகள் எவற்றைக் கேட்கின்றன என்பது பற்றியும் உனது வாய் எவற்றைப் பேசுகின்றது என்பது பற்றியும் உனது கைகள் எவற்றைச் செய்கின்றன என்பது பற்றியும்**

**உனது இதயம் எவற்றை உணர்கிறது என்பது பற்றியும் உனது மனம் எவற்றைச் சிந்திக்கின்றது என்பது பற்றியும் அவதானமாக இரு. இறைவன் எந்த நேரமும் உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.**

*"அட, நீ இப்ப என்னையே ஓவர்டேக் பண்ணீட்டாய். எனக்குப் பொறாமையாய் இல்லை. சந்தோஷமாய் இருக்குது. ஊக்கமும், அக்கறையும் இருந்தால் நாங்கள் உலகையே வெல்லலாம். இந்த அழகான ஆங்கிலக் கவிதையிலை சொன்ன கருத்து எங்கடை கவனத்திலை எப்பவும் இருக்கவேணும். நாங்கள் கடவுளுடன் இருந்தால் அவர் எப்பவும் எங்களோடை இருப்பார்."*

- வெள்ளிமலை
4,5,6,7ஆம் இதழ்கள்
2008, 2009.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருப் பயண ஞானம்

நமது தெருக்களில் போகின்றபோது இடையில் சந்திக்கின்ற குறுக்கு வீதிகளின் பெயர்ப் பலகைகளைக் காண்கின்றபோதெல்லாம் கவிஞர் திக்வல்லை கமால்' அவர்களின் அழகிய கவிதை ஒன்றின் பொருள் நினைவுக்கு வரும். அந்தக் கவிதை வரிகளை மறந்துவிட்டபோதிலும் மனிதப் பண்பு பற்றிய அருமையான கவிதை மனத்தை நெருடும்.

சைக்கிளை நிறுத்திப் பூட்டுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தாம் அதனைப் பூட்டுவதற்காக மட்டும் தலைகுனியவில்லையாம். மனிதர்களிடமிருந்து அந்த வாகனத்தைப் பாதுகாக்கவேண்டி மனிதர்களே அதனைப் பூட்டிவைக்கவேண்டியிருக்கிறதே என்ற அந்த அவமான உணர்வுதான் அவரைத் தலைகுனிய வைக்கிறதாம்.

வீதிகளில் அவற்றின் பெயர்ப்பலகைகள் கம்பி வலைகளால் சிறைப்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கின்றபோது சிறையிடப்பட்டிருக்கும் குற்றவாளிகள் நாம்தான் என்ற எண்ணம் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது.

அந்தக் கம்பிவலைகள் ஏன் போடப்படுகின்றன?

நம்மவர்கள் அந்தப் பெயர்ப்பலகைகளின்மேல் விளம்பரங்களை ஒட்டுவார்கள்.

நகங்களால் கீறிக் கிழித்துப் பார்ப்பார்கள்.

நாம் இந்த நாகரிகமற்ற செயல்களைச் செய்யாமலிருப்பதற்காக நமது வரிப்பணத்தில் நாம் இதனைச் செய்யவேண்டியிருக்கிறது. சிரிப்பாக இருக்கிறதா, தலையைச் சுற்றுகிறதா?

** ** ** ** ** ** ** ** **

வீதியில் போகும்போது கவனத்தையீர்க்கும் இன்னொரு விடயம், வீதியோரங்களில் பறிக்கப்பட்டிருக்கும் கல்லும் மணலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருக்கரைக் குடியிருப்பாளர்கள் பலரின் தேசபக்தி வியப்பை ஏற்படுத்தும். நமது நாட்டை நமது வீடுபோல எண்ணி நாம் நடந்துகொள்ளவேண்டும் என் நமது முன்னோர்கள் சிலர் சொன்ன புத்திமதியை அவர்கள் சிரமேற்கொண்டு வீதி முழுவதும் தமது வீடே எனக்கருதிப் பயன்படுத்துவார்கள் அவர்கள். தமது வீட்டிற்கு முன்னுள்ள வீதிப்பரப்பு தமக்கே உரியது என எல்லை வகுத்து உரிமை கொண்டாடுவார்கள் பலர்.

தமது வீட்டிற்குத் தேவையான கல், மணல் என்பவற்றைப் பறிப்பதற்கு இடம் இல்லாததால் அங்கே பறித்துவிட்டு அவசரமாக அதனைப் பயன்படுத்தி முடிப்பவர்கள் சிலர். இவர்கள் மன்னிப்புக்குரியவர்கள். ஆனால் பறித்த பொருட்கள் அரைவாசி வீதியை மூடியபடி அப்படியே இருக்க தமது அலுவல்களைப் பார்க்கப்போய்விடுவோர் அநேகர். தார்போட்ட வீதி சீமெந்து குழைக்க வசதி என அங்கு தாராளமாக அதனைச் செய்வோர் அங்கு சிரமத்துடன் வாகனமோட்டுவோரைக் கண்டு மன்னிப்புக் கேட்கும் சிந்தனையோ, குற்ற உணர்வோ இல்லாமல் “ஏன்காணும் எனது பாதையில் வந்தீர்?” என்ற பாவனையில் முறைத்துப் பார்ப்பவர்கள் சிலரும் உள்ளனர்.

** ** ** ** ** ** ** ** **

இத்தகைய வீதிகளில் வாகனங்களை லாகவமாக ஓட்டிக்கொண்டு பயணம் செய்வதற்குத் தனியான திறமை வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் லைசென்ஸ் வழங்கவேண்டும். ‘எட்டு’ப் போடுவதில் அப்படி என்னதான் திறமை இருக்கிறதோ தெரியாது. எட்டுப் போட்டுப் பழகிய இளைஞர்கள் பலர் லைசென்சை எடுத்துக்கொண்டு வாகனங்கள் நிறைந்த தெருவிலே எங்கே சிறிது இடைவெளி கிடைக்கிறதோ அதற்குள் நுழைந்து முடியுமானால் 90 பாகையில் தன்னும் ஹாண்டிலை வளைத்து நிமிர்த்தி வாகனத்தை ஓட்டிக்கொண்டு (இடப்புறம், வலப்புறம் என்ற விதிமுறைகளோ, வேக நியதிகளோ இவர்களிடம் பேசக் கூடாத விடயங்கள்) தமது தறமையைத் தாமே மெச்சியபடி ஓடித் தப்பிவிடுகிறார்கள். இவர்களுடைய அபார திறமையைத் தாங்க முடியாமல் குறுக்கே வரும் பலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுமாறி விழுந்துவிடுவதும் நெஞ்சு வலி வந்து தவிப்பதும் வேறு விடயம். ஆனால், கொஞ்சம் 'அரைப் பழசா'கிவிட்ட பலர் பரீட்சைகளில் சித்திபெற்று வீதி ஒழுங்குகளை நன்கு தெரிந்துகொண்டு மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்ற மனிதப் பண்பாட்டுணர்வுடனும் தமது வயதுக்குரிய அவதானத்துடனும் வாகனம் செலுத்தும் பலர் எட்டுப் போடும் சர்க்கஸ் வித்தை ஒன்றை மட்டும் தெரியாத காரணத்தால் லைசென்சைப் பெறமுடியாதவர்களாகப் பெருமூச்சு விடுகிறார்கள். :உரிய அதிகாரிகள் மனம் வைத்து, சிறிது அறிவுரீதியாகச் சிந்தித்து இந்த 'எட்டு'ப் போடுகிற மாயவித்தையை மாற்றக்கூடாதா? எட்டு என்பது பொல்லாத இலக்கமல்லவா?

** ** ** ** ** ** ** ** **

சைக்கிளோட்டும் வாண்டுப்பயல்கள் பலரை வீதியில் காணும்போது வயிற்றைக் கலக்குகிறது. ஐந்து வயதுக் குழந்தையை கரியரில் ஏற்றிக்கொண்டு ஏழு வயதுச் சிறுமி சைக்கிளோட்டுவது சர்க்கஸ் வேடிக்கை காட்டவா அல்லது கின்னஸ் புத்தக சாதனைக்கா என்பது புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம். நம் நாட்டில் நியைப் பேர் பல லட்சம் ரூபாய்களைச் செலவிட்டு உடலும் மனமும் மிகவும் நொந்து வருந்தி அந்நிய தேசம் சென்று நவீன சிகிச்சைகள் மூலம் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு வரும் செய்தி இந்தத் தெருச்சாதனை புரியும் பிள்ளைகளின் பெற்றோருக்குத் தெரியாத ஒன்று.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது பேசாமல் இவர்களுக்கெல்லாம் லைசென்ஸ் கொடுப்பதை நிறுத்திவிட்டுப் பாதசாரிகளுக்குப் பயிற்சிகள் வழங்கி லைசென்ஸ் வழங்கும் முறையைக் கொண்டுவரலாம்போலிருக்கிறது.

**- வெள்ளிமலை இதழ் 8 - 2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயராகங்கள்

## பலவீனங்கள்

*ஓ! சமுதாயமே!*

*நீ புன்னகை பூக்கின்ற போதெல்லாம் நான் உன் அழகான முக மலர்ச்சியைக் கண்டு உன்னை அப்படியே நம்பி விடுகிறேன்.*

*ஆனால்*

*என்னுடைய புன்னகையை மட்டும் நீ ஏன் சந்தேகப் படுகிறாய்? உன்னை நான் அப்படியே நம்பிவிடுகிற எனது பலவீனத்தை மட்டும் ஏற்றுக்கொள்கிற நீ உண்மையான என்னுடைய புன்னகையை கண்டவுடன் என்னை எட்டத்தில் நிறுத்தி வைக்கிறாயே.... அது ஏன்?*

*ஏ! மானுடமே!*

*உன் அழுகுரல் கேட்ட மாத்திரத்தில் ஓடி வந்து உன் கண்ணீரைத் துடைத்து விடுகிறேன் நான். ஆனால், உன்னுடைய வார்த்தைகளின் சுமைகளையே தாங்கமாட்டாமல் நான் ஓலமிட்டு அழுகின்றபோது அதைப் பார்த்து வெறுமனே இரசித்துக் கொண்டிருக்கிறாயே..... அது ஏன்?*

*நீ காதலித்த வேளையில் உன் காதலியிடம் தூதுபோய் உன்னை அவளுக்கு அறிமுகப்படுத்தி உன் கல்யானத்தையே நடத்தி வைத்தேனே... இப்போது நான் ஒரு புனிதவதியைக் காதலிக்கிறேன் என்றவுடன் முகத்தைச் சுழிக்கிறாயே... அது ஏன்?*

*உன்னுடைய பாடல்களையெல்லாம் ஒவ்வொன்றாக இரசித்து இரசித்துக் கேட்டு முடித்த பிறகு என்னுடைய சின்னஞ் சிறு கவிதையை நான் எடுத்து வாசிக்கத் தொடங்கும்போது நீ தூங்கி விடுகிறாயே... அது ஏன்?*

*உன்னுடைய பலவீனங்களை ஜீரணித்து உன்னை நான் ஏற்றுக் கொள்கிறேனே... அது போலவே என்னுடைய பலவீனங் களுடன் என்னை நீ ஏற்றுக் கொள்ளவேண்டுமென நான் எதிர் பார்க்கிறேன். அது உன்னால் முடியவில்லையே! உனது அந்தப்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனத்தை மட்டும் மற்றெல்லாவற்றையும் விட மிகப் பெரிய பலவீனத்தை மட்டும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லையே!

அது தான் என்னுடைய பெரிய பலவீனமோ?

ஆனால், இத்தகைய பலவீனங்களையெல்லாம் மீறிய ஏதோ ஒரு பலத்துடன் எதையோ நோக்கி என் வாழ்க்கை நகர்த்தப்படுகிறதே.... முடிவு?.....

## தேடல்கள்

"ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு" என்றார் யேசுநாதர். என்னுடைய இரண்டு கன்னங்களிலும் அடிக்குமேல் அடிவாங்கி நான் அழுது கொண்டிருக்கிறேன்.

ஆனால் அந்தப் புனிதனுடைய சிலுவையை நான் இன்னமும் முத்தமிட ஆசைப்படுகிறேன்.

"நெஞ்சம் நெக்குருக அழுகின்ற கண்களில்தான் கடவுள் தன்மை பூரணமாகப் பரிணமிக்கிறது" என்றான் கெர்ச்சிக்காட் என்ற அறிஞன்.

என்னுடைய கண்களில் கண்ணீர் வழிகின்ற போதெல்லாம் அதைப் பார்த்துக் கேலி செய்தவர்களைத்தான் நான் தினமும் கண்டுகொண்டிருக்கிறேன். என்றாலும் என் கண்களில் என்றும் நீர் வழிந்து கொண்டேயிருக்கிறது.

"உன் பாதையில் முள் விதைப்பவனுக்கு நீ பூவை விதை" என்று கபீர்தாசர் சொன்னார்.

நான் இன்னமும் முட்பாதையில்தான் நடந்து கொண்டிருக் கிறேன். ஆனால் என் கரங்கள் பூக்களைச் சொரிந்து கொண்டே யிருக்கின்றன.

"ஒவ்வொரு புனிதமான ஆசையும் கடவுள் பிரார்த்தனையே ஆகும்" என்றான் ஹ*க்கன் என்பான்.

தேவாலயங்களில் தினமும் எரிந்து முடிகின்ற ஆயிரக் கணக்கான மெழுகு திரிகளைப் போல என்னுடைய ஒவ்வொரு ஆசைகளும் எரிந்து முடிந்து கொண்டே இருக்கின்றன. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உள்ளத்தில் புதிய ஆசைகள் முளைவிட்டுக் கொண்டே இருக்கின்றன.

"உனக்கு எவரும் தீங்கிழைக்கக் கூடாதென்று நீ கருதுவாயானால் பிறருக்குத் தீங்கு செய்வதிலிருந்து உன்னைப் பாதுகாத்துக் கொள்" என்றார் ஷாதுலி நாயகம் (ஸல்) அவர்கள்.

நான் பிறருக்குத் தீமை செய்வதிலிருந்து என்னைக் காத்துக் கொண்டாலும் பிறர் செய்யும் தீமைகள் என்னைச் சிறையிட்டு வாட்டுகின்றன. இன்னமும் அந்தத் துன்பச் சிறையிலிருந்து கொண்டு நான் அந்தப் புனிதரை விசுவாசித்துக் கொண்டே ஆண்டவரை நோக்கிக் குரல் கொடுக்கிறேன்.

"அன்பே உருவான ஆண்டவரே எந்தச் சுமைகளை எங்களால் தாங்க முடியாதோ அத்தகைய சுமைகளை எங்களுக்குத் தராதேயும்."

## சந்தர்ப்பங்கள்

ஒரு நாள் -

கூரையிலிருந்து ஒரு அணிற்பிள்ளை நிலத்தில் விழுந்தது. அதை எடுத்து அன்போடு தடவி ஆசுவாசப்படுத்தினேன். சிறிது நீர் பருக்கி அதன் களையை ஆற்றினேன். அதன் சப்தம் கேட்டு ஓடிவந்த பூனை அந்த அணிற்பிள்ளையைக் கபளீகரம் செய்ய முனைந்தது. அணிலை மார்போடு அணைத்தபடி பூனையை விரட்டினேன். அதற்கு இரண்டு அறையும் கிடைத்தது.

கொஞ்சம் பொறுத்து என் தம்பி யாருக்கோ சொல்வது கேட்டது.

"அண்ணைக்கு அணிலெண்டால் நல்ல விருப்பம்"

எனது அன்பின் மகிமைக்கு ஒரு புகழாரம். உள்ளமும் குளிர்ந்தது. அடுத்த வசனமும் அவனிடமிருந்து பிறந்தது.

"ஆனால் அவருக்குப் பூனையெண்டால் கொஞ்சமும் பிடிக்காது..."

நான் சிரித்துக் கொண்டேன்.

இன்னொரு நாள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்தோ பாய்ந்தோடி வந்த பூனை என் கால்களுக்குள் ஒட்டிக் கொண்டு மிரள மிரள விழித்தது. அதன் வால் மயிர்கள் 'பிரஷ்' போல சிலிர்த்திருந்தன. என்ன விஷயமென்று எட்டிப் பார்த்தேன் நாய் ஒன்று பூனையை விரட்டிவந்தது தெரிந்தது.

பூனையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு நாயை விரட்டினேன். அதற்கு ஒரு கல்லெறியும் கிடைத்தது.

கொஞ்சம் பொறுத்து என் தங்கை யாருக்கோ சொல்வது கேட்டது.

"அண்ணைக்குப் பூனையிலை வலு விருப்பம்"

நான் காதைத் தீட்டிக் கொண்டேன். அடுத்த வசனம் வந்தது.

"ஆனால் அவருக்கு நாயைக் கண்டாலே பிடிக்காது"

நான் மறுபடியும் சிரித்துக் கொண்டேன்.

மற்றொரு நாள் -

நாய் குரைத்த சப்தம் கேட்டு வெளியே பார்த்தேன்.

ஏதோ கோபத்தினாலோ அல்லது விளையாட்டாகவோ என்னவோ என் தம்பி நாயைத் தடியினால் அடித்துக் கொண்டிருந்தான். நாய் பயத்துடன் அவலமாகக் கத்தியது.

"டேய், நாயை அடிக்காதையடா" அதே தடியை வாங்கி அவனுக்கு இரண்டு 'சாத்துச்' சாத்தினேன். அவன் அழுது கொண்டு போனபோது யாரோ சொல்லிக் கேட்டது,

"அவனுக்குத் தன்ரை தம்பியைவிட நாயிலைதான் வலு விருப்பம்"

இப்போதும் கூட மௌனமாகச் சிரிக்க முடிந்தது என்னால்

சில நிமிடங்களுக்குப் பிறகு,

"அம்மா இந்தக் கணக்குச் சரிவருகுதில்லை" - இது தம்பி

"அண்ணையைக் கேள் சொல்லித்தருவர்" - இது அம்மா

"அவருக்கு என்னைப்பிடிக்காது, நாயைத்தான் பிடிக்கும்"

இப்போது நான் சிரிக்கவில்லை. சிந்திக்கத் தொடங்கினேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி

யாழ்ப்பாணத்திலே -

"சாத்திரியார், எங்கடை மோன் கோபாலன்ரை குறிப்பை ஒருக்காப் பாருங்கோ இந்த முறை சோதனையும் எடுக்கப் போறான் எப்பிடிப் பலனெண்டு பார்ப்பம்"

தாய்மை கேட்கிறது.

நவக்கிரகங்களும், இலக்கங்களும் கடதாசியில் கிளித்தட்டு மறிக்கின்றன. சாத்திரியார் தீர்ப்பு வழங்குகிறார்.

"தம்பிக்கு இப்ப சோக்கான காலம் பாருங்கோ. ஆனால் இந்தப் புதன் இருக்கிற இடம் கொஞ்சம் எக்கச்சக்கம். அதுக்கு முருக வழிபாடு நல்லது. செல்லச் சந்நிதி முருகனுக்கு ஒரு அபிஷேகம் செய்யுங்கோவன். எல்லாம் சரிவரும்"

தேவவாக்கு ஒலித்து ஓய்ந்தது.

கோபாலனின் பாடப் புத்தகம் மூடிவைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து கோபாலன் செல்வச் சந்நிதிக்குப் புறப்படுகிறான். சந்நிதியானைப் பேட்டி கண்டு ஏதாவது 'சரிக்கட்ட'லாம் என்று!

பருத்தித்துறையிலே -

"டேய் கணேசு, உனக்கு இப்ப ஏழரைச் சனியாம் சாத்திரியார் சொன்னவர், யாழ்ப்பாணம் பெருமாள் கோயில்லை ஒரு அர்ச்சனை செய்தால் நல்லதெண்டு. இந்த முறை நீ சோதனையும் எடுக்கிறாயல்லே போட்டு வாறியே!"

- தாய்மை சொல்கிறது.

கணேசனின் பாடப் புத்தகம் மூடிவைக்கப்படுகிறது.

கணேசன் யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலை நோக்கிப் புறப்படுகிறான்.

"யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை சென்று கொண்டிருந்த ஒரு பஸ்ஸும் பருத்தித்துறையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த ஒரு பஸ்ஸும் கோப்பாயில் ஒன்றோடொன்று மோதியதால் பலர் கடுமையான காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்" என்ற செய்தி மறுநாள் தினசரியில் வெளிவருகிறது.

ஆஸ்பத்திரி 'வாட்'டில் அடுத்தடுத்த கட்டில்களில் படுத்திருந்த கோபாலனும், கணேசனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். உடம்பெல்லாம் ஒரே கட்டுக்கள்.

"எனக்கு வாற கிழமை ஓ. எல். சோதனை தொடக்கம் ஆனால் நான் இன்னும் பதினைஞ்சு நாளைக்கு ஆஸ்பத்திரியிலை இருக்க வேணுமாம்." - கோபாலன்

"நானும் சோதனை எடுக்க வேண்டிய ஆள்தான்" - கணேசன்.

கோப்பாயில் பஸ் அடிபட்ட இடத்துக்குப் பக்கத்தில் இரண்டு தொழிலாளர்கள் பேசிக்கொண்டனர்.

"டேய் பெருமாள், இதிலை ரண்டு தேங்காய்கள் கிடக்கடா! நேற்றைக்கு அடிபட்ட பஸ்ஸிலை போனாக்கள் ஆரோ வைச்சிருந்தது உருண்டு வந்து இந்தப் பத்தைக்குள்ளை மறைஞ்சு கிடந்திருக்குது ஒருத்தரும் கவனிக்கேல்லை."

"பாத்தியா, முருகா! குருவிச் சாத்திரம் பாத்தமே இண்டைக்கொரு 'லக்' இருக்கண்டெல்லோ சொன்னவன். சரியாய்ப் போச்சு. உனக்கொண்டு, எனக்கொண்டு."

அங்கே பெருமாள் முருகனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

## அஞ்ஞானம்

கொதிக்கும் பாலை நக்கிய பூனை பாலைக் கண்டாலே விலகி ஓடுகிறது. அது நினைக்கிறது.... பால் சுடும் என்று!

கையில் கிடைக்கும் பொருட்களை எல்லாம் வாய்க்குள் கொண்டுபோகிறது குழந்தை. அதற்குத் தெரியாது... எதைச் சாப்பிடலாம். எதைச் சாப்பிடக் கூடாது என்று!

சித்திரத்தில் எழுதிய பழங்களைக் கண்டுவிட்டு அவற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்திப் பார்க்கிறது காகம்!

இவை எல்லாம் அறியாமைகள் என்று என்னால் உணரமுடிகிறது.

எனனோடு இனிமையாகச் சிரித்துப் பேசுகின்ற பல பெண்கள் என்னைக் காதலிக்கிறார்கள் என்று எண்ணி நான் இறுமாந்திருக்கின்ற வேளையில் - அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் காதலர்களை அறிமுகப்படுத்தும்போது நான் எனது அஞ்ஞானத்தை எண்ணி வெட்கப்படுகிறேன்.

ஆண்டவனுக்காக என்று அலங்கார சிகரங்கள் கட்டி ஆயிரக் கணக்கில் செலவு செய்த ஆடம்பர மாளிகைக்குள் நுழைந்து 10 ரூபாய்க்கு அர்ச்சனை செய்துவிட்டு வெளியே வருகின்ற வேளையிலே பசித்த விழிகள் சில என்னை மொய்க்கின்றபோது எனது அஞ்ஞானம் எனக்குச் சிறிது புலப்படுகிறது.

இப்படி நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு அது இப்படித்தான் நடக்கும் என்று நிச்சயித்து நான் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்ற வேளையில் நானே சதுரங்கக் காய்களாக நகர்த்தப்பட்டு, எனது நிச்சயங்கள் தவறாகிவிடுகின்ற போது எனது அஞ்ஞானத்தை நான் நன்றாகப் புரிந்து கொள்கிறேன்.

என்னை ஏதோ ஒரு சக்தி இயக்குகிறது என்பது எனக்குப் புரிகின்றபோது எனது அஞ்ஞானம் எனக்குத் தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் நான் அஞ்ஞானத்தில் மூழ்கியிருப்பதை நானே புரிந்து கொண்டுவிட்டதாக நினைப்பதுகூட எனது அஞ்ஞானம் தான் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் எனது வாழ்க்கை நிதானமாக நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதன் முடிவு?

## ஞானம்

வாழ்க்கையில் எப்போதும் நிறைய எதிர்பார்ப்புக்களே எழுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்புக்களின் விளைவுகள் பெரும்பாலும் ஏமாற்றங் களாகவே அமைகின்றபோது -

ஏதோ ஒன்று புரிவது போன்ற உணர்வு!

தேடுதல்களே வாழ்க்கையின் நோக்கமாக உலகம் உருண்டு கொண்டிருக்கிறது. அதற்கிடையில்தான் எத்தனை பலவீனங்கள்.

ஒன்றுமே இல்லாத எதையோ தேடி ஓடுகின்ற அந்தப் பலவீனம்....!

பலவீனங்களையே புரிந்து கொண்டதாக - அவற்றை அனுசரித்துப் போகின்றதான பாவனைகள்....

அந்தப் பாவனைகள் இயலாமையின் விளிம்பில் வந்து நிற்கும் போது -

எதிர்பார்ப்புக்களும், அதன் முடிவில் வரும் ஏமாற்றங்களும் அதனால் விளைகின்ற பலவீனங்களும், இதற்கெல்லாம் காரணமான தேடல்களும்....

இந்தத் தேடல்களுக்கெல்லாம் காரணம் வெறும் அஞ்ஞானம்தான் என்று புரிகின்றபோது....

ஓ! இந்த மாயா உலகத்திலே போலி மயமான அஞ்ஞானத்திலே வீழ்ந்து கிடக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்கின்றபோது -

அப்படி எதையோ புரிந்து கொண்டு விட்டதாக நினைப்பதே நமது அஞ்ஞானம்தான் என்று சிந்தனை கிளற...

மறுபடியும் ஏமாற்றங்களை மீறிய எதிர்பார்ப்புக்களும் பலவீனங்களை மீறிய தேடல்களும் ஒன்றுமே இல்லாத எதையோ தேடி ஓடுகின்ற ஓட்டங்களும்....

எல்லாவற்றையும் மீறி இந்த இதய வெளியிலே ஏதோ ஒரு பேரொளி மின்னலிடுகிறது.

ஓ, அதுதான் ஞானம்!

**தினகரன் - மார்ச், ஏப்ரல், மே 1980**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமை இலக்கிய நினைவுகள் – 1

**1969** ஆம் ஆண்டின் நடுப்பகுதி. ஒரு தினசரிப் பத்திரிகை தனது ஆண்டு நிறைவையொட்டிக் கவிதைப்போட்டியொன்றைத் தொடர்ச்சியாக நடத்தியது. இலக்கிய உலகில் அப்போதுதான் தவழத்தொடங்கிய எனக்கும் எனது சகோதரிக்கும் ஒவ்வொரு பரிசு கிடைத்தன. அளவில்லாத மகிழ்ச்சி.

சில நாட்களில் ஒரு பிரபல எழுத்தாளரிடமிருந்து கடிதமொன்று எங்களிருவருக்கும் வந்தது. மாதமொரு நூல் வெளியீடு செய்யும் பதிப்பகம் ஆரம்பித்திருப்பதாகவும் இரு நூல்கள் அச்சாகி வருவதாகவும் அடுத்ததாகப் போட்டியில் பரிசு பெற்ற கவிதைகளைத் தொகுத்து ஒரு நூல் வெளியிட உள்ளதாகவும் எமது கவிதையும் அதில் இடம்பெறும் எனவும் அறிவித்திருந்தார்.

எமக்குத் தலைகால் புரியாத மகிழ்ச்சி இவ்வளவு ஆரம்ப காலத்திலேயே எமது ஆக்கங்களும் நூல் வடிவில் வெளியாகின்றனவே எனப்பெருமை கொண்டோம். அவரது கடிதத்தில் வருடசந்தாவாக ரூ 15/- அனுப்பவேண்டுமெனவும் குறைந்தது பத்துப்பேரையாவது சந்தாசேர்த்து அனுப்பும்படியும் கேட்க்கப்பட்டிருந்தது. பத்துப்பேரைச் சேர்த்து அனுப்ப முடியா விட்டாலும் எமது சந்தாவை உடனேயே அனுப்பிவைத்துவிட்டுக் காத்திருந்தோம்.

அரச மரத்தைச் சுற்றிவிட்டு அடி வயிற்றைத் தொட்டுப் பார்த்த கதை போல அடுத்த நாளிலிருந்தே எமது கவிதைத் தொகுதியை எதிர்பார்த்துத் தபால்காரன் வரவைக் காத்திருந்த எனக்கு சுமார் இரண்டு மாதங்களுக்குமேல் பொறுக்க முடியவில்லை. கொழும்பிலுள்ள அந்த எழுத்தாளருக்கு ஒரு கடிதம் போட்டேன். பதிலில்லை. மேலும் சில மாதங்கள் கழித்து எமது புத்தகம் வெளிவராதா எனக் கேட்டு மறுபடியும் கடிதம் எழுதினேன். பதில் இல்லை. சந்தேகம் முளை கொண்டது. ஏமாற்றம் சொல்லி முடியாது. கோபம் தலை தூக்கியது இள ரத்தமல்லவா? கொதித்தது. நாலைந்து கடிதங்கள் படிப்படியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபத்தொனி அதிகரிக்க எழுதினேன். ஏமாற்றம் தான் மீதம்.

பணம் அனுப்பி எட்டு மாதங்களின்பின் எனது இறுதிக் கடிதத்தை எனது முழுக்கோபத்தையும் கொட்டி - திட்டி "விரைவில் உங்கள் இலக்கியத் திருட்டை அம்பலப்படுத்துவேன்" என்ற வெருட்டும் சேர்த்து எழுதிப் பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தேன்.

இறுதியாக எழுபதாம் ஆண்டு ஜூலை மாதத்தில் அந்த 'மகராஜன்' ஆன எழுத்தாளரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. "தங்களின் கடிதங்களை அதிஷ்டவசமாக இன்றுதான் பார்க்கக் கிடைத்தது" என ஆரம்பித்த கடிதத்தில், எனது கடிதங்களை மிகுந்த அக்கறையுடன் காத்து வரப்போவதாகக் குறிப்பிட்டு, ஈழத்தில் பேனா பிடித்தவன் தலையெழுத்து பற்றிச் சிறிது கவலைப்பட்டு இறுதியில் எனது சந்தாப்பணத்தை அந்தமாதம் இருபதாம் திகதிக்குமுன் அனுப்பி வைப்பதாக முடித்திருந்தது அந்த இருபதாம் திகதி இன்னமும் வரவில்லை.

கடிதத்தின் பி. கு. பகுதியில் "என்னைப்பற்றி இன்னமும் பத்திரிகையில் அம்பலப்படுத்தவில்லை என்றே நம்புகிறேன்" என்ற வசனமும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## இளமை இலக்கிய நினைவுகள் – 2

தமிழ் நாட்டிலிருந்து 1968 ஆம் ஆண்டு முதல் குழந்தைகள் சஞ்சிகை ஒன்று வந்து கொண்டிருந்தது. அதன் சில இதழ்கள் பார்க்கக் கிடைத்தன. 1970 ஜனவரியிலிருந்து இலங்கைப் பக்கம் என்று எட்டுப் பக்கங்கள் ஒதுக்கப்பட்டு அதற்குப் பொறுப்பாக இலங்கையின் புதுமை எழுத்தாளர் ஒருவர் இருப்பார் என்றும் ஈழத்துத் தம்பி தங்கைகள் தமது ஆக்கங்கள் சந்தா முதலியவற்றை அவருக்கு அனுப்பி வைக்கும் படியும் குறிப்பிட்டு அவரது முகவரியும் வெளியிடப்பட்டிருந்தது.

இதைக்கவனிக்காமல் நேரே நான் இந்தியாவிற்கு அனுப்பிய ஒரு கவிதை இந்தியப் பக்கங்களிலேயே பிரசுரமாகியிருந்தது வேறு விஷயம். ஆனால், இலங்கையர்களின் விஷயங்கள் இங்குள்ள பொறுப்பாளர்களால் தொகுக்கப்பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாக அந்த எட்டுப்பக்கமும் சஞ்சிகையுடன் இணைக்கப் பட்டிருக்கும். இதில் முக்கிய விஷயம் என்னவென்றால் இதற்குத் தனியாகப் பக்கங்கள் இடப்பட்டிருக்கும். இதன் நோக்கம் என்ன என்பதை அறிந்தோர் அறிவர்.

வெளிநாட்டவர்களுக்காக 'குமுதம்' வெளியிட்டுவந்த நான்கு பக்கக் கடுகுச்செய்திகளும் இலங்கையர்க்காக முன்பு 'கல்கி' வெளியிட்ட சில பக்கங்களும் போல இங்கு வரும் பிரதிகளுக்கு மட்டுமே இணைக்கப்படுவதன் மூலம் இங்குள்ள வாசகர்களுக்கு ஒரு கிளுகிளுப்பை ஊட்டி ஆதரவு தேடுவது இவர்களது வியாபார தந்திரம்.

இந்த விஷயத்தை ஊகித்தறிந்த நான் இங்குள்ள பொறுப்பாளருக்கு இது பற்றிக் காரசாரமான கடிதமொன்றை எழுதினேன். பத்திரிகை ஆசிரியருக்கும் ஒரு கடிதத்தை எழுதிப் பொறுப்பாளரூடாகவே அனுப்பி வைத்தேன்.

1970 பெப்ரவரி இதழில் அக்கடிதம் முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதுவும் இலங்கைப் பக்கத்திலேதான்.

தவிர எந்தவிதமான மாற்றமும் நடைபெறவில்லை "இத்தகைய இலக்கிய வியாபாரத்துக்கு நீங்கள் ஏன் துணை போகிறீர்கள்" என்று கேட்டு இலங்கைப் பொறுப்பாளருக்கு நான் எழுதிய கடிதத்தின் விளைவு, அவர் எனது தந்தையாரைச் சந்தித்தபோது "மகன் சற்றுக் கடுமையாக எழுதுகிறார். சற்றுக் கவனியுங்கள்" என்று கூறியிருக்கிறார். இதன் பிறகு சிலகாலம் நான் எழுதும் கடிதங்கள் எனது தந்தையாரால் தணிக்கை செய்யப்பட்டன.

## இளமை இலக்கிய நினைவுகள்– 3

தமிழகத்தின் 'இதயம் பேசுகிறது', 'குமுதம்' பாணியில் ஒரு நியூவேவ் மாத சஞ்சிகை முன்பு இங்கே வெளி வந்தது கொஞ்சக்காலம். ஒரு புத்தக வெளியீட்டின் மூலம் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற வியாபார ஆசை ஒரு தடவை இச் சஞ்சிகையாளர்களுக்கு ஏற்பட்டது. ஒரு விளம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டார்கள்.

வெளியீட்டு வசதியற்ற கவிஞர்களின் நிலை பற்றி மிகவும் கவலையோடு குறிப்பிட்டு (ஆடு நனையுதென்று ஓநாய் அழுதது போல்) அவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு கவிதைத் தொகுதியைத் தாம் வெளியிடவிருப்பதாக அதில் அறிவித்திருந்தனர். அதற்கான விபரங்களை எழுதிப் பெற்றுக் கொள்ளும் படியும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் கவிஞர்களுக்கு அனுப்பப்பட்ட விபரம் எழுபத்தைந்து கவிஞர்களின் கவிதைகளைக் கொண்டு தொகுக்கப்படவுள்ள அத்தொகுதியின் விலை ரூ 4/50. ஒவ்வொரு கவிஞரும் ஐம்பது பிரதிகளை விற்பனை செய்து கொடுக்க வேண்டும் அது மட்டுமல்லாமல் முற்பணமாக ரூ 200/- அனுப்பவும் வேண்டும்.

எனவே ஒரு கவிஞர் ரூ 225/- செலவு செய்தால் அவரது கவிதையொன்றும் புகைப் படத்தோடு கூடிய வாழ்க்கைக் குறிப்பும் அந்தத் தொகுதியில் இடம் பெறும் வாய்ப்பைப் பெறுவார்.

இது ஒரு புறமிருக்க இப் பிரசுரத்தின் மூலம் பிரசுரத்தினருக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பார்க்க வேண்டாமா? ஒரு கவிஞரிடம் ரூ 225/- என்ற ரீதியில் எழுபத்தைந்து கவிஞர்களிடமும் பெறும் தொகை ரூ 16, 875/- அந்த நேரத்துக் கணக்குப்படி அத்தகையதொரு புத்தகம் வெளியிட சுமார் பத்தாயிரம் ரூபா போதும். மீதி ஆறாயிரத்திச் சொச்ச ரூபாய்கள் மிகச் சுலபமான முறையில் நிகர லாபம். எப்படி இருக்கிறது வியாபார தந்திரம்?

## இளமை இலக்கிய நினைவுகள் – 4

கல்லூரி வாழ்க்கையின் இறுதிக் கட்டம். உயர்தர வகுப்பு இறுதிப் பரீட்சைக்குத் தயார்செய்து கொண்டிருக்கும் காலம். அரும்பத் தொடங்கியிருந்த இலக்கிய ஆர்வம் எழுத்தாற்றல் என்பவற்றின் உந்துதலால் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்மன்றம், தமிழ் மன்றம் என்றெல்லாம் சக்கைபோடு போட்ட நேரம் அது. படிப்பும் பரீட்சையும் இரண்டாம் பட்சந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி பட்டிமன்றங்கள் கருத்தரங்குகள் என்றெல்லாம் ஒரே இலக்கிய மயமான வாழ்க்கை. தமிழ் மன்றத் தயாரிப்பாக றோனியோ சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டது. இரண்டாவது இதழை அச்சில் போட்டால் என்ன? நாலு விளம்பரங்களும் எடுத்து விஷயங்களையும் தொகுத்து அச்சகத்தில் கொடுத்தால் சஞ்சிகை வந்துவிடும் என்ற இளவயதின் ஆவல் மிகுந்த எண்ணம்.

தமிழ் மன்ற உறுப்பினர்களாயிருந்த சில ஆர்வமுள்ள மாணவர்கள் ஓடித்திரிந்து களைத்த பின்னர் நாங்கள் மூன்றுபேர் முனைந்து நின்றோம் விளம்பரம் சேகரிப்பதில் ஏனைய இருவரும் ஓடித்திரிய விஷயம் சேகரித்து அச்சகத்தில் பதிப்பிக்கும் வேலை எனக்கு.

ஆயிற்று. அச்சக வேலைகள் முடிந்தன. வெளியீட்டிற்கு நாள் குறித்தாயிற்று. அச்சகத்திற்குக் கொடுக்கப் பணம் வேண்டுமே. விளம்பரகாரர்கள் பலர் குறித்த தொகையை விட அரைப்பங்கு காற்பங்கு பணத்தை வேண்டா வெறுப்பாக வீசினர். பலர் நாளை நாளை என்றனர். கடைசியில் என் தாயாரின் சங்கிலியை அடகு வைத்துச் சஞ்சிகைகளை அச்சகத்திலிருந்து மீட்டெடுத்துக் கல்லூரிக்குக் கொண்டு போனோம்.

எல்லாம் சிறப்பாக நடந்தன. வெளியீட்டு விழாவிற்கு வந்த இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள் தாலிக்கொடி விற்றுப் புத்தகம் போட்ட பெரிய எழுத்தாளர்களைப் பற்றியெல்லாம் மேடையில் பேசியபோது ஷேட் கொலரைத் தூக்கிவிட்டுப் பெருமைப்பட்டுக் கொண்டேன்.

நீண்ட காலத்திற்குப் பிறகு ஏதோ ஒரு வழியாகத் தாயாரின் சங்கிலி அடகிலிருந்து மீண்டதாக ஞாபகம்.

## இளமை இலக்கிய நினைவுகள் - 5

1974 ஆம் ஆண்டளவில் ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைத் துறையிலே ஏற்பட்ட சில மாற்றங்கள் காரணமாகப் புற்றீசல் போலப் புதுச் சஞ்சிகைகள் பல வெளிவரத் தொடங்கின "இதயம் பேசுகிறது" பாணியில் ஒரு நியூவேவ் மாதசஞ்சிகையும் தலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரிலிருந்து வெளிவரத் தொடங்கியது.

அக் காலகட்டத்தில் "ஈழத்தில் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகள்" என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரையொன்று இன்னொரு சஞ்சிகையில் வெளிவந்தது. ஈழத்தின் முதலாவது தமிழ்ப் பத்திரிகை உதயதாரகையிலிருந்து அன்று வெளிவந்து கொண்டிருந்த சஞ்சிகைகள் வரை விமர்சனக் குறிப்பகளுடன் கூடிய ஓர் ஆய்வுக் கட்டுரையாக அது அமைந்தது.

குறிப்பிட்ட அந்த சஞ்சிகை பற்றி எனது கட்டுரையில் இடம் பெற்ற வசனங்கள் இவை "நியூவேவ்' என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு 'ஜெயராஜ்' பாணிப் படங்களுடனும் அப்பட்டமான அசிங்கத் தொடர்கதைகளுடனும் வெளிவருகிறது. '--------------' என்ற சஞ்சிகை. நியூவேவ் மட்டுமன்றி வேறும் பல அம்சங்களில் ஆனந்த விகடனையும் குமுதத்தையும் அடியொற்றி வரும் ஆசிரியர் ஒரு பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரை வெளிவந்த அடுத்தமாதம் அந்த 'நியூவேவ் சஞ்சிகையில் என்னைப் பற்றிக் கொஞ்சம் காரமாக எழுதியதுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்றும் எச்சரித்திருந்தனர். அதுமட்டுமல்லாமல் எனது கட்டுரையை வெளியிட்ட சஞ்சிகையுடனும் தொடர்பு கொண்டு சீறியிருக்கின்றனர். இதன் காரணமாக எனது கட்டுரையைப் பிரசுரித்த சஞ்சிகை அடுத்த இதழில் இப்படி ஓர் அறிவித்தலை வெளியிட்டிருந்தது "கடந்த இதழில் '--------------' என்பவரால் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்பட்ட ஈழத்துத் தமிழ் பத்திரிகைகள் சஞ்சிகைகள்' என்ற கட்டுரையில் '-------------' என்ற சஞ்சிகை பற்றித் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் கட்டுரையாசிரியரின் சொந்தக் கருத்துக்களே என்பதையும் இக் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களைப் பாதித்திருப்பின் அவர்களிடம் மன்னிப்புக் கோருகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்."

சட்ட நடவடிக்கையென்றதும் அந்த நேரம் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது இருந்தாலும் எனது எழுது கோல் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறது.

***முரசொலி - ஜனவரி, பெப்ரவரி 1987***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பாடல் வெற்றிபெற.........

மொழிவளத்துக்கு மட்டுமல்லாமல் உலகம் நமது உள்ளங்கையில் இருக்கும் இன்றைய அறிவியல் யுகத்திலே ஊடக வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி என்பவற்றுக்கும்கூட, பேச்சும் எழுத்தும் மிக முக்கியமான அடிப்படைகளாக இருக்கின்றன.

பேச்சு என்று இங்கு குறிப்பிடுவது உரையாடலையே. உரையாடல் என்பது தொடர்பாடலுக்கு உறுதுணையாக உள்ளது. ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளுதல் என்று வரும்போது உரையாடல் அங்கு முதலிடம் பெறுகிறது. உரையாடும்போது நாம் கையாளும் சொற்கள், தொனி, முகபாவம் என்பன யாவும் நமது நோக்கத்தை வெற்றி பெறச் செய்வனவாக அமைகின்றன. அது சிலபேருக்குக் கைவந்த கலை. அதனால்தான் தொடர்பாடல்கலை என்றே சொல்கிறோம்.

**"மொழிவது அற மொழி"** என்கிறார் ஔவையார். அதாவது சொல்லும் செய்தியைத் தெளிவாகச் சொல்லவேண்டும். சந்தேகத்துக்கு இடமில்லாமல் திட்டவட்டமாகக் கூறவேண்டும் என்பதே இதன் பொருள்.

தமது மாணவர்களிடையே ஓர் ஆசிரியர் நடத்திய சிறிய விளையாட்டு இப்போது இங்கு நினைவுக்கு வருகிறது. சுமார் நாற்பது மாணவர்களை ஓர்அடி இடைவெளியில் வட்டமாக நிற்கவைத்துவிட்டு ஒரு மாணவனைத் தமக்கருகே அழைத்து இரகசியமாக ஒரு நீளமான வாக்கியத்தைச் சொன்னார். பின்னர் அந்த மாணவன் தனது இடத்திற்குப் போய்த் தனக்கு அடுத்த இடத்திலுள்ள மாணவனிடம் அந்த வாக்கியத்தைக் காதுக்குள் இரகசியமாகச் சொல்லவைத்தார். அவன் தனக்கு அடுத்த மாணவனிடம் அதைச் சொன்னான். இவ்வாறு நாற்பதாவது மாணவனிடம் சொல்லப்பட்டதும் அவன் ஆசிரியரிடம் வந்து தனக்குச் சொல்லப்பட்ட வாக்கியத்தை ஒப்புவித்தான். இதில் மிகச் சுவாரசியமான விஷயம் என்னவென்றால் ஆசிரியர் கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கியம் நாற்பது மாணவர்களின் காதுகளில் புகுந்து அவர்களின் வாயினால் வெளிவந்தபோது கொஞ்சம் கொஞ்சமாகத் திரிபடைந்து கடைசியில் அவரிடம் மறுபடி வந்தபோது முற்றிலும் மாறுபட்ட ஒரு வாக்கியமாக அது இருந்தது.

இதன்மூலம் ஆசிரியர் எடுத்துக் காட்ட விரும்பியது வதந்தி எப்படி உருவாகிறது என்பதைத்தான். ஆனால் நாம் இங்கு அதே உதாரணத்தை உரையாடல் கலையின் முக்கியத்துவத்தை உணர்த்தப் பயன்படுத்தலாம். இந்த மாணவர்களைப்போலப் பல பெரியவர்களும் தாம் உரையாடும்போது தெளிவாக உரையாடத் தவறுவதால் தமது நோக்கத்தை நிறைவேற்றத் தவறிவிடுகிறார்கள்.

எந்தக் காரியத்தைச் சாதிக்க நினைக்கும்போதும் அக்காரியத்துடன் தொடர்புடைய பலருடன் நாம் தொடர்புகொண்டு நமது எண்ணங்களைத் தெரிவிக்க வேண்டிய தேவை இருக்கிறது. அவ்வாறு நாம் கூறும் கருத்துக்கள் நமது உண்மையான எண்ணங்களுக்கு மாறுபடாத வகையில் தெளிவாக அவர்களைச் சென்றடையாவிட்டால் நமது நோக்கம் வெற்றிபெற மாட்டாது.

தொடர்பாடல் அல்லது உரையாடல் எனும்போது குறைந்தது இருவர் சம்பந்தப்படுகின்றனர். அவர்கள் இருவருமே அக்கறையுடன் உரையாடலில் ஈடுபட வேண்டும். கேட்பவர் அக்கறையின்றிக் கேட்டால் சொல்பவரின் கருத்து உரியமுறையில் சென்றடையாது. ஆனால் கேட்பவரது குறைபாட்டை நாம் இங்கு கருதுதல் முடியாது. ஏனெனில் சொல்லப்படும் விடயத்துக்கும் அதன் பயனுக்கும் உரியவர் சொல்பவரே என்பதால், தாம் சொல்ல வந்த கருத்தை மற்றவர் மனத்தில் நன்கு பதியச் செய்யவேண்டிய பொறுப்பு அவருக்கே உரியதாகிறது. அதனால் அவர்,

**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்**

என்ற வள்ளுவர் மொழியை மனங்கொள்ளவேண்டும். கேட்பவர்கள் விரும்பிக் கேட்கத்தக்கதாகவும் கேளாதவரும் கேட்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புமாறு சொல்வதே சொல்வன்மை என்று கூறுகிறார் வள்ளுவர். இக்கருத்து மேடைப் பேச்சுக்கு மட்டும் உரியதன்று. சாதாரண உரையாடலிலும் கவனிக்கவேண்டியதாகும்.

சொல்பவரிடம் இருக்கவேண்டிய இன்னொரு முக்கிய பண்பு கேட்டல். தாம் சொல்வதில் மட்டும் கவனம் செலுத்தாமல் தம்முடன் உரையாடுபவர் என்ன சொல்கிறார் என்பதை நன்கு கவனித்துக் கேட்கவும் வேண்டும்.

**கேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்**
**மாட்சியின் மாசற்றார் கோள்**

என்று இதனையே வள்ளுவர் கூறுகின்றார். ஒரு பெரிய விழாவுக்கு ஒழுங்குகளை மேற்கொண்டிருக்கும் ஒருவர் சிறப்புரையாற்றுவதற்கு ஒரு பிரமுகரை அழைக்கச் செல்கிறார். உரையாடலின் தொடக்கத்திலேயே பிரமுகர் தமது தொண்டை வருத்தம்பற்றிக் கூறித் தமக்கு உரையாடுவதற்கே கஷ்டமாக இருப்பதாகக் கூறுகிறார். விழா ஏற்பாட்டாளரோ தமது விழாவைப்பற்றிய நினைவிலேயே கவனமாக இருந்ததனால் பிரமுகர் கூறியவற்றைக் கவனத்தில் எடுக்கவே இல்லை. நீண்ட நேரம் உரையாடி அவரைக் கஷ்டப்படுத்தியதுடன் ஈற்றில் தமது வேண்டுதலைச் சமர்ப்பிக்கிறார். பிரமுகருக்குக் கோபமே வந்துவிடுகிறது. காரியம் தோல்வியில் முடிந்துவிடுகிறது. இங்கே அந்த நபர் முதலிலேயே பிரமுகரின் வார்த்தைகளை அவதானித்து அவரது துன்பத்தை உணர்ந்து தமது பேச்சைக் குறைத்து அவர்மதிப்பைப் பெற்று அதற்கிடையிலேயே தமது திட்டத்தில் சிறிது மாற்றம் செய்திருந்தால் பெருவெற்றி அடைந்திருப்பார். அதாவது, அவரைச் சிறப்புரையாற்றுமாறு கேட்காமல் மங்கல விளக்கேற்றி வைக்குமாறு கேட்டிருந்தால் அவரும் மகிழ்ச்சியடன் சம்மதித்திருப்பார். **பிறர்சொல் பயன்கோடல்** என்ற விடயத்தை அவர் கவனிக்காதபடியால் அவர் தமது வெற்றியை நழுவ விட்டார்.

எனவே தொடர்பாடலில் மிக முக்கியமான ஒரு விடயம் தமது எண்ணங்களைத் தெளிவுடன் மற்றையோருக்கு வெளிப்படுத்துதல். அடுத்த விடயம் பிறரது எண்ணங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளல் என்பதாகும். இந்த இரண்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயமாகிய கேட்டலில் பெரிய சாகசம் எதுவும் தேவையில்லை. மிகவும் அவதானமாக மற்றையோர் கருத்தைக் கேட்கவேண்டும். அவ்வாறு நாம் கேட்கின்றோம் என்பதை அவர்கள் அறியும் வண்ணம் நமது முகபாவங்களை வெளிப்படுத்த வேண்டும். இவை இரண்டும்தான் முக்கியமானவை.

முதலாவது விடயமாகிய மற்றவர்க்கு நமது கருத்துக்களை வெளிப்படுத்துதல்பற்றியே அதிகம் இங்கு பார்க்கப்போகிறோம். இரண்டாவதாகப் பார்த்த குறளிலும் **"கேட்பத் தாம் சொல்லி"** என்று கூறுவதன்மூலம் தாம் சொல்லும் விடயத்தைப் பிறர் விரும்பிக் கேட்கும்படி கூறவேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றார் வள்ளுவர்.

பிறர் விரும்பிக் கேட்கும்படி கூறுவது எப்படி? வாக்கு வன்மை என்பது அதுதான். நமது முகபாவங்களும் மெய்ப்பாடுகளும் தேவைக்கு ஏற்ப நமது பேச்சிற்குச் சுவை கொடுக்கும். நாம் உரையாடுபவர்களை நேரே முகம் பார்த்து உரையாட வேண்டும். இவ்விரண்டும் நேரே உரையாடும்போதுதான் கைகொடுக்கும். ஆனால் இன்றைய கணினியுகத்தில் நேரே உரையாடுவதைவிடத் தொலைபேசி, இணையம், மசெஞ்ஜர் முதலியவற்றின் மூலமாகவே அதிகமான தொடர்பாடல்கள் நடைபெறுகின்றன. இந்த நேரத்தில் பாவங்களைக் குரலில் காட்டத் தவறக்கூடாது. ஈடுபாடும் அக்கறையும் குரலில் வெளிப்படவேண்டும்.

மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய இன்னும் சில விடயங்கள் இருக்கின்றன. அவற்றைத்தான் "மொழிவது அற மொழி" என்பதன் மூலம் தமிழ் மூதாட்டி கூறிச்சென்றார். தெளிவாகக் கூறவேண்டும். ஆனால் சுருக்கமாகக் கூறவேண்டும். சுருங்கக் கூறி விளங்க வைத்தல் என இதையே சொல்வர். சுற்றி வளைத்துக் கூறாமல் நேரடியாக விடயத்துக்கு வரவேண்டும்.

"நான் உங்களுக்கு ஒரு விடயம் சொல்லப்போகிறேன். நீங்கள் அதைப்பற்றிக் கேள்விப்பட்டீர்களோ தெரியாது........" என்று புதிர் போடாமலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குமார் வீட்டில் நடந்தது என்ன தெரியுமே?..........." என்று பீடிகைகள் இல்லாமலும்,

"கண்டேன் சீதையை" என்ற பாணியில் அனுமனைப் போல நேரடியாக விடயத்துக்கு வருவதே வெற்றிக்கு வழி கோலும். சொல்லின் செல்வர் என்ற விருது அனுமனுக்குக் கிட்டியது இதனாலன்றோ?

உச்சரிப்புத் தெளிவாக இருக்கவேண்டும். பல்லைக் கடித்துக்கொண்டு அல்லது வெற்றிலையைக் குதப்பியபடி உரையாடுபவர்களால் மற்றவர்கள் படும் கஷ்டம் பலரும் அறிந்ததே. நகைச்சுவையான சில சம்பவங்களைச் சொல்லத் தொடங்கும் சிலர் சிரிப்பை அடக்கமாட்டாமல் அட்டஹாசமாகச் சிரித்தபடியே தமது உரையைத் தொடர்வார்கள். கேட்பவருக்கு ஒன்றும் விளங்காது.

ஏற்ற இறக்கங்களும் அழுத்தங்களும் விடயங்களைத் தெளிவுபடுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உணர்ச்சி வெளிப்பாடு ஆகிய பாவத்தை வெளிப்படுத்தாமல் பேசுபவர்களைப் பார்க்கும்போது பாவமாக இருக்கும். பாவத்தை வெளிப்படுத்த ஏற்ற இறக்கங்கள் உதவுகின்றன. சில வேளைகளில் சில சொற்களில் அழுத்தம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படும். அவற்றைக் கொடுக்கத் தவறுவதால் நாம் பிறர் மனங்களில் வேண்டிய சில உணர்வுகளை உருவாக்கத் தவறிவிடுகிறோம்.

சிலவேளைகளில் நாம் கூறிய வார்த்தைகளை மறுபடி கூறவேண்டிய தேவை ஏற்படுகிறது. அப்போதுதான் இந்த அழுத்தத்தின் முக்கியத்துவம் புலப்படும். அதுவும் தொலைபேசி மூலமான உரையாடலில் இதன் பங்கு மிக முக்கியமானது. தொலைபேசி உரையாடலின்போது ஆங்கில எழுத்துக்கள் தெளிவுபெறக் காட்டுவதற்காக தந்திச் செய்தியாளர் மத்தியில் ஒருவகையான சங்கேதக் குறி பயன்படுகிறது. உதாரணமாக Actor என்று ஒரு சொல் சொல்லப்படும்போது ஒலித் தெளிவின்மை காரணமாக Actor , Factor or Tractor என்ற மயக்கம் ஏற்படாமல் தவிர்க்க A for Arther, C for Charly என்று சொல்வதன்மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவுபடுத்துவார்கள். அதேபோல் தெளிவான வேறு சொற்களைப் பயன்படுத்துவதன்மூலம் தமிழ்ச் சொற்களின் தெளிவின்மையையும் நீக்க முயற்சிக்கலாம்.

சிலருக்கு முழுமையாகச் செய்தியைச் சொல்லிவிடுவது பிடிக்கும். ஆனால் வேறு சிலர் சிறிய சிறிய தகவல்களாகப் பிரித்துக் கேள்விகள் கேட்டு அவற்றுக்கான விடைகள் மூலமாகவே விடயங்களைக் கிரகித்துக் கொள்வார்கள். அவர்களுக்கு நாம் மறுபடி திருப்பி விடை கூறும்போது குறித்த சில சொற்களிலேயே அழுத்தம் கொடுக்கவேண்டும். மாறி அழுத்தம் கொடுத்தால் அவர் புரிந்துகொள்ளமாட்டார்.

உதாரணமாக ஒருவர் தொலைபேசியில் இன்னொருவருக்குக் கூறும் செய்தி இது.

"போன புதன்கிழமை கந்தசாமி விபத்திலை இறந்திட்டார்"

அவர் கேட்கிறார்,

"கந்தசாமிக்கு **என்ன** நடந்தது?"

பொதுவாக தொலைபேசி உரையாடலில் மட்டுமல்லாமல் நேரடி உரையாடலில்கூட இறுதிப்பகுதி தெளிவற்றுப்போவது வழக்கம். பலர் இந்தத் தவறை விடுகிறார்கள். வாக்கியத்தைத் தொடங்கும்போதுள்ள உற்சாகமும் ஏற்றமும் வாக்கியத்தின் முடிவில் இருப்பதில்லை. சிறு வயதில் பாடசாலையில் படிக்கும்போது "ஏன் விழுங்கிறாய்? வடிவாய்ச் சொல்லன்!" என்று ஆசிரியர்கள் ஏசியது இப்போது ஞாபகத்திற்கு வரலாம். அவ்வாறு 'விழுங்கு'வது பலரின் வழக்கம். அதனால் முதலாமவரின் செய்தியின் இறுதிப்பகுதி இரண்டாமவருக்குத் தெளிவில்லாமல் போயிருக்கலாம். அதுமட்டுமல்லாமல் இறப்புப் பற்றிய செய்தியை உடனடியாக நம்பவோ ஏற்றுக்கொள்ளவோ நமது மனம் தயாராக இருப்பதில்லை. எனவே ஓரளவு முழுமையாகக் கேட்டிருந்தாலும்கூட இப்படி ஒரு பதிற்கேள்வி எழுவது இயல்பே. அவர் **என்ன** என்ற வார்த்தையில் அழுத்தத்தைக் காட்டியிருப்பதன் நோக்கம் என்னவெனில் முதலாமவர் சொன்ன செய்தியில் கந்தசாமிக்கு ஏதோ நடந்துவிட்டதென அவருக்கு விளங்கிவிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் என்ன நடந்தது என்பதைத் தெளிவுபடுத்தவே அவர் திருப்பிக் கேட்கிறார் என்பதையும் புரிந்துகொள்ளவே. செய்தி சொன்னவர் புரிந்துகொண்டு

**"இறந்திட்டார்"** என மிக அழுத்தமாகப் பதில் கூறினால் பிரச்சினை ஒன்றும் இல்லை. ஆனால் அதிகமானோரின் உரையாடலில் அவதானித்த அனுபவ உண்மையை அடிப்படையாகக் கொண்டு இதன் மீதியைத் தொடர்வதானால்,

"**கந்தசாமி....** அதுதான் **சுசீலா**வின்ரை அண்ணா........." தேவையில்லாத ஒரு இடத்தில் தேவையில்லாத ஒரு விளக்கமும் தேவையில்லாத ஒரு அழுத்தமும் கொடுக்கப்படுகிறது.

"அதுசரி இப்ப என்ன **நடந்திட்டுது**?" இப்போது மேலும் ஆவலும் அவசரமுமாக அவர் கேட்கிறார்.

"அவர் போன **புதன்கிழமை** கடைக்குப் போகேக்கை லொறி ஒன்று அடிச்சசு....."

எப்ப? என அவர் கேட்காமலே புதன்கிழமைக்கு அழுத்தம் கொடுப்பது தேவையற்றது.

"அடிச்சு.....?"

"அதிலையே ஆள் சரி. நேற்றைக்குச் செத்தவீடு"

இங்கு கேட்கப்பட்ட கேள்வியைப்பொறுத்து சிறிய துண்டுகளாக மறுமொழி கூறலாம். சிலருக்கு அதுவே பிடிக்கும்.

| | |
|---|---|
| "என்ன நடந்தது?" | "செத்துப்போனார்" |
| "எப்ப?" | "போன புதன்கிழமை?" |
| "எப்பிடி?" | "விபத்திலை" |

இது ஒரு வகை.

"என்ன நடந்தது?" "போன புதன்கிழமை கந்தசாமி விபத்திலை **இறந்திட்டார்**"

"எப்ப?" "**போன புதன்கிழமை** கந்தசாமி விபத்திலை இறந்திட்டார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்பிடி?" "போன புதன்கிழமை கந்தசாமி **விபத்திலை** இறந்திட்டார்"

இது இன்னொரு வகை.

சொல்லப்படும் செய்தியில் தெளிவின்மை இருந்தால் அல்லது கேட்பவர் அவதானிக்காமலிருந்தால் மறுபடி திருப்பிக் கேட்பார். அப்போது முதல் கூறிய முறைக்கும் மறுபடி கூறுவதற்கும் இடையில் வேறுபாடு இருக்கவேண்டும். சில வேளைகளில் மூன்று நான்கு தடவை "என்ன?", "விளங்கேல்லை" எனக் கேட்பவர்கள் இருக்கிறார்கள். அப்போதெல்லாம் ஒவ்வொரு தடவையும் சொற்களின் உச்சரிப்பில் அதிக கவனம் செலுத்தித் தெளிவுற உச்சரிப்பதுடன் தொனியையும் சற்று அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. சிலர் நாடிக்குக் கை கொடுத்தபடி அல்லது மூக்கைத் தோண்டியபடி பேசுவார்கள். தெளிவின்மை உணரப்பட்டதும் மறுபடி பேசும்போது இந்த அங்க சேட்டைகளை விட்டுவிடவேண்டும். சிலர் மூன்றுமுறை திருப்பிக் கூறினாலும் ஒரே தொனி, ஒரே உச்சரிப்பு, ஒரே வேகம் எனக் கூறுவார்கள். அதனால் பயனில்லை. கேட்பவருக்குத் தொடர்பு அதிகமில்லாத சொற்கள், புதிய பெயர்கள் என்பன வரும்போது அந்த இடத்தில் அழுத்தம் கொடுக்கவேண்டும். சிலவேளைகளில் அத்தகைய சொற்களுக்கு எழுத்துக்கூட்டவும் வேண்டும்.

கேள்விக்கு விடை கொடுக்கும்போது எங்கே அழுத்தம் கொடுக்கவேண்டும் எனத் தெரியாமல் மறுபடியும் கேட்க வைப்பவர்கள் பலர். ஒரே விடை பல கேள்விகளுக்குப் பதிலாக அமையும்போது அங்கு அழுத்தம்பெறும் சொற்கள் வேறுபடுவதை ஓர் உதாரணம் மூலம் பார்ப்போம்.

"மாலை நேரத்தில் மாணவர்கள் விளக்கேற்றி வணங்கியபின் பாடங்களைப் படிக்கவேண்டும்."

இது ஒரு வினாவுக்கான விடை. வினா என்ன என்பதைப் பொறுத்து இந்த விடையில் கொடுக்கப்படும் அழுத்தங்கள் வேறுபடும்.

"மாலை நேரத்தில் என்ன செய்யவேண்டும்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாலை நேரத்தில் மாணவர்கள் **விளக்கேற்றி வணங்கியபின்** பாடங்களைப் படிக்கவேண்டும்."

"மாணவர்கள் மாலையில் என்ன செய்யவேண்டும்?"

"மாலை நேரத்தில் மாணவர்கள் விளக்கேற்றி வணங்கியபின் **பாடங்களைப் படிக்கவேண்டும்.**"

"எப்போது மாணவர்கள் படிக்கவேண்டும்?"

"**மாலை நேரத்தில்** மாணவர்கள் விளக்கேற்றி வணங்கியபின் பாடங்களைப் படிக்கவேண்டும்."

தெளிவாக வார்த்தைகளை உச்சரித்து தேவையான இடங்களில் அழுத்தும் கொடுத்து உணர்வுகளைக் குரலில் வெளிப்படுத்தி ஒருவர் ஒரு விடயத்தைக் கூறும்போது அது கேட்பவர் உள்ளத்தில் தெளிவாகப் பதிந்துவிடுகிறது.

பரஸ்பரம் புரிந்துகொள்ளலுக்கும் வெற்றியை நோக்கிச் செல்வதற்கும் இக் கருத்துக்கள் உதவும் என நம்புகிறேன்.

**- பூபாளராகங்கள் - லண்டன் 2005**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை மேடை

ஒரு சந்தேகத்தின் ஸ்திரம் சந்தேகப்படுறவர்களின் துணிவில்தான் தங்கியுள்ளது. சந்தேகப் படுவதற்கு யாருக்குமே உரிமை உண்டு. ஆனால் அச்சந்தேகத்தை நேர்கொண்டு விசாரித்து ஆராய்ந்து பார்ப்பதற்குத் துணிவு வேண்டும். சந்தேகம் இருக்கும் இடத்தில் பயம் இருக்கக் கூடாது. பயம் இருக்குமானால் சந்தேகப்படுவதை நிறுத்திவிட வேண்டும்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

சில மனிதர்கள் மற்றவர்களைச் சலிப்படையச் செய்வதற்கென்றே பிறந்தவர்கள். இப்படியான சிலரைச்சந்தித்து உரையாடுவதன் மூலம், அந்த நேரத்தை 'போரடிப்'பதில் வீணாக்கிவிடுவதோடு மட்டுமல்லாமல் அதற்குப் பின்னர்கூட சில மணி நேரங்களுக்கு நமது மன அமைதியே கெட்டு விடுவதையும் அநுபவ பூர்வமாக உணரலாம்.

"கேடபவர்களைக் களைப்படையச் செய்யும் இரகசியம் என்னவென்றால், எப்பொழுது பேச்சை நிறுத்துவதென்பதை அறியாமல் இருப்பதுதான்" என்று அறிஞர் வால்டேர் கூறியிருக்கிறார். உண்மையில மேடைப்பேச்சு மட்டு மல்ல, சாதாரணமாக நாம் நமது நண்பர்களோடு உரையாடும் போது கூட இந்த வார்த்தைகளை நினைத்துக் கொள்ள வேண்டும்.

ஒருவரைத்தேடி அவரது வீட்டிற்குப் போனால், போன அலுவலைச் 'சட்டென்று முடித்து நாலுவார்த்தை பேசி விட்டு வருகின்ற பண்பாடு இன்று மிக அரிதாகி விட்டது. மணிக் கணக்கில் இருந்து வழவழத்து விட்டுத்தான் புறப்படுது என்று சிலர் நடந்து கொள்வதால் பலர் தமது காரியங்களைச் சரிவரச் செய்ய முடியாமல் போய்விடுகிறது.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

இப்போதெல்லாம் எங்கே என்ன விசேஷம் நடந்தாலும் சரி அங்கெல்லாம் ஒலிபெருக்கி கத்துவதை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேஷம் நடக்கும் தினத்திற்கு முதல் இரண்டு தினம், பிறகு இரண்டொருதினம் என்று நாலைந்து நாட்கள் ஒரே இரைச்சல்தான். இதனால் அக்கம்பக்கத்திலுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் அந்த நிகழ்ச்சியோடு சம்பந்தப் பட்டவர்களுக்குக்கூட அநேக சிரமங்களும் சினமும் ஏற்படுகின்றன.

இது ஒரு புறம் போக அங்கே ஒலிக்கின்ற பாடல்களாவது கொஞ்சம் பொருத்தமானதாகவோ, தரமானதாகவோ இருக்கவேண்டுமே? அது தான் இல்லை! பிறந்த நாள் விழாவிலே "உலகே மாயம், வாழ்வே மாயம்" பாடலும்; கல்யாண வீட்டிலே "விளையாட்டுக் கல்யாணமே விபரீத உறவாகுமே" என்ற பாடலும்; புதுமனைப் புகுவிழாவிலே "தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு", பாடலும் பாடினால் எப்படியிரக்கும்?

மணவறையில் மணமகன் தாலியைக் கையில் எடுக்கும்போது "கட்டியவள் கொடுத்த தெல்லாம் வாய்க்கு ருசி; கையளவு நீ கொடுத்தாய் வாய்க்கரிசி" என்று பாடினால் எவ்வளவு அமங்கலமாக இருக்கும்.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

நம்மில் பலர் தாம் புதிதாகக் கற்றுக்கொள்ளும் பல விஷயங்களைத் தமக்கு ஏற்கனவே தெரிந்தவையாகக் காட்டிக்கொள்ள முயல்கிறார்கள். ஒரு விஷயத்தைப் புதிதாக ஒருவரிடமிருந்து தெரிந்துகொண்டால் இன்னார் மூலமாகத் தெரிந்து கொண்டேன் என்று சொல்ல வெட்கப்படுவானேன்? நாம் எப்போதுமே புதிது புதிதாகக் கற்கவேண்டியவர்கள் தானே! தெரியாத நல்ல விஷயங்களை அவற்றைத் தெரிந்தவர்களோடு அவற்றைப் பற்றிப் பேசி அவர்களிடமிருந்து கற்றுக் கொள்வது தானே சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் சிவம்-நூல் வெளியீடுகள்

1. கனவுப்பூக்கள் - சகோதரி சௌமினியுடன் இணைந்து கவிதைகள் மார்ச் 1975
2. அன்னை பராசக்தி -சக்தி மகிமையும் கீர்த்தனைகளும் 1978
3. நியாயமான போராட்டங்கள் (ரூ.5,000/= பரிசுபெற்றது) சிறுகதைகள் ஜுன் 1985
4. இலங்கையில் தமிழ்ப்பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் -ஆய்வும் தொகுப்பும் ஜுன் 1985
5. வெள்ளோட்டம் (பாராட்டுப் பரிசு பெற்றது) -இரு குறுநாவல்கள் மார்ச் 1986
6. சைவநற்சிந்தனை - வானொலியில் ஒலித்தவை - 1986 மறுபதிப்பு - 2006
7. சைவாலயக்கிரியைகள் - சமயம் 1986
8. சைவாலயங்கள் கிரியைகள் - ஒரு கையேடு ஓகஸ்ட் 1986
9. சைவ விரதங்கள் - ஓர் அறிமுகம் - சமயம் 1987
10. சைவ விரதங்களும் விழாக்களும் - சமயம் ஒக்டோபர் 1988 2ம் பதிப்பு 2005 3ம் பதிப்பு 2013
11. பஞ்சாக்ஷரம் - ச.ப.சர்மாவின் வாழ்வும் பணியும் - அவரது 70ஆவது வயது செப் 1987
12. பூந்தோட்டம் - சிறுவர் பாடல்கள் மே 1988
13. நொடியும் விடையும் பாகம்1 முதல் பாகம் 4 வரை -விடுகதைத் தொகுப்பு 1989 முதல் 1992 வரை
17. ரோஜாப்பூ - சிறுவர் பாடல்கள் செப்டம்பர் 1992
18. பொறுக்கிய முத்துக்கள் - பொன்மொழித் தொகுப்பு 1993
19. என்னாலும் பேசமுடியும் - சிறுவர்க்கான மேடைப் பேச்சுக்கள் 1993
20. தகவல் வங்கி - பொதுஅறிவு 1997
21. விவாஹசோபனம் - வைதிகவிவாகக்கிரியைவிளக்கம் 1998
22. அக்னிகார்யம் - ஓர் அறிமுகம் 2000
23. யாகமண்டப பூஜை - ஓர் அறிமுகம்- 2000
24. ஏன்? எதற்கு? எப்படி? -விநாயகஷஷ்டி விரதம் -சமயம் நவம்பர் 2000
25. ஏன்? எதற்கு? எப்படி? - ஸ்கந்தஷஷ்டி விரதம் -சமயம் 2000
26. சம்ஸ்கிருத ஸ்வபோதினி - தேவநாகரி - பாடநூல் ஜனவரி 2001


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. அக்ஷரபோதினி - பண்டிதர் ச.ப.சர்மாவின் புதுமுறை சம்ஸ்கிருத பாடநூல்- கிரந்தம்,நாகரம் பதிப்பாசிரியர் கோப்பாய் சிவம் 2001

28. மறுமலர்ச்சி கண்ட மாணிக்கம் - ச.ப.சர்மாவின்பணிகள்பற்றிய பல்கலைக்கழக ஆய்வு. பதிப்பாசிரியர் கோப்பாய் சிவம் (ஆய்வாளர் செல்வி செல்வராணி வேலுப்பிள்ளை) 2001

29. இந்துநாகரிகம், இந்துசமயம் A/L வினாவிடை பாகம்1 மார்ச் 2001

30. இந்துநாகரிகம், இந்துசமயம் A/L வினாவிடை பாகம்2 ஜுலை 2001

31. கும்பாபிஷேக திரவிய சூடாமணி -ஆலயக் கிரியைகளுக்கான பொருட்களின் பட்டியல் செப்டம்பர் 2001

இரண்டாம் பதிப்பு ஒக்டோபர் 2005

மூன்றாம் பதிப்பு ஜுலை 2009

நான்காம் பதிப்பு 2012

32. ஆற்றல் பல நல்கும் ஆஞ்சனேயர் -சமயம் 2001

33. பெருமாள் பெருமை

- வைஷ்ணவ சமய, தத்துவ, வழிபாட்டு விளக்கங்கள் 2003

34. மனன மஞ்ஜரி

- நினைவில் கொள்ளவேண்டிய ஆகம சுலோகங்கள் 2004

35. தார்மீகக் கோபங்கள் -சிறுகதைகள் 2004

36. அருள் வழங்கும் மாரியம்மன் -சமயம் - ஜுலை 2004

மறுபதிப்பு 2007

37. இதுதான் இந்துமதம் -சமயக் கட்டுரைகள் 2004

மறுபதிப்பு தமிழ்நாடு மணிமேகலைப் பிரசுரம் 2006

38. பஞ்சாக்ஷர தீபம் - மறுமலர்ச்சி எழுத்தாளர் பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மாவின் வாழ்வும் பணியும் 2004

39. நமது இந்து சமயம் - புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்கானது 2006

40. கிரியாகாலத் திருமுறைகள் - (தொகுப்பாசிரியர்) 2006

41. அக்ஷரானந்தம் - மொழிசார் கட்டுரைகள் 2007

பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா மற்றும்

ப. சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) எழுதிய கட்டுரைகள்

42. கண்ணகைஅம்மன் அஷ்டோத்தரசதம்

- சம்ஸ்கிருதத்தில் புதிதாக இயற்றப்பட்டது 2007

43. வளரும் சிறுவர்க்கு வாழும் இந்து சமயம் பாகம் 1 செப் 2007

2அம் பதிப்பு - ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. வளரும் சிறுவர்க்கு வாழும் இந்து சமயம் பாகம் 2 ஜனவரி 2008
2அம் பதிப்பு - ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு 2013
45. நவக்கிரக மஞ்ஜரி - நவக்கிரகங்கள் பற்றிய தகவல் தொகுப்பு (களஞ்சியம்) பெப்ரவரி 2008
46. மஹாகும்பாபிஷேக கிரியா விளக்கம் - இணுவில் அண்ணா தொழிலக வெளியீடு 2009
48. விவாஹ சோபனப் பாடல்கள் ஏப்ரல் 2009
49. துக்கம் துடைக்கும் துர்க்காதேவி ஏப்ரல் 2009
50. வீரகாவலர் வீரபத்திரரும் பத்திரம் நல்கும் பத்திரகாளியும். 2011
51. மந்திரங்கள் கூறும் மறைபொருள் விளக்கங்கள் 2010
52. சைவக் கோயில்களும் மனித உடலும் - வியத்தகு உண்மைகள் மணிமேகலைப் பிரசுரம் 2010
மறுபதிப்பு சர்வானந்தமய பீடம் 2013
53. முத்ராலட்சண விளக்கம் 2010
54. சந்தோஷிமாதா விரதம் 2011
55. விவாஹ மங்கள கிரியா பத்ததி 2011
56. ஆலய அமைப்பு... ஆண்டவன் இருப்பு... அருட்சிறப்பு2012
57. காப்பதில் வல்ல கருட பகவான் 2012
58. ஆன்மீக மங்கலம் அறுபது 2012
59. முன்னோர் கடமையும் முத்தல யாத்திரையும் - 2012
60. வரலக்ஷ்மி விரதம் - விரத முறையும் பூஜையும் 2012
61. லலிதா சஹஸ்ரநாமம் - கருத்து விளக்கத்துடன் 2013
62. மறுமலர்ச்சி தந்த பஞ்சாக்ஷரம் - வாழ்வும் வளமும். 2013
63. நலம் பல நல்கும் நாராயணன் - மஹாவிஷ்ணு மகிமையும், வழிபாட்டு முறைகளும். 2013
64. சிவானந்த விஜயம் - இந்துவாக வாழ்வோம் - இந்து சமயக் களஞ்சியம். 2014
65. அக்னிகார்ய விளக்கம் 2014
66. வைரவர் நாமார்ச்சனா மஞ்ஜரி 2014
(இதில் த்ரிசதி நாமாக்கள் புதிதாக இயற்றப்பட்டவை)
67. அம்பிகையின் அருள்வடிவங்கள் 2014
68. எங்கள் பெயரால் இறைவன்முன் என்ன சொல்கிறார் சிவாசாரியர்? 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. வாழ்க்கையில் ஜோதிஷம் - 2014
70. யாகமண்டப பூஜா விளக்கங்கள் 2015
71. சண்முக கதம்பம் 2015

## இயற்றி வழங்கிய ஊஞ்சற் பாடல்கள்

1. கோண்டாவில் வடக்கு அன்னுங்கை ஸ்ரீ சிவபூதவராயர் - 2000
2. புத்தூர், மணற்பகுதி, ஆலடி முருகன் - 2001
3. உடுப்பிட்டி வடக்கு, கம்பர்மலை பெரியதம்பிரான் - 2002
4. புத்தூர், மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் - 2003
5. புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதி, குருநாத சுவாமி - 2004
6. புத்தூர், வாதரவத்தை கேதுவுப் பிள்ளையார் - 2005
7. ஊவா மாகாணம், பண்டாரவளை, சேனநாயக்க மாவத்தை அருள்மிகு பத்திரகாளியம்மன் - 2005
8. கைதடி விநாயகர் தேவஸ்தானத்தில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்கேஸ்வரர் - 2005
9. புத்தூர், வாதரவத்தை வேலங்காட்டு இயமாவில் துர்க்கையம்மன் - 2007
10. அனலைதீவு மேற்கு, சீத்தாசல்லி அருள்மிகு பூதேவி ஸ்ரீதேவி சமேத ஸ்ரீ மஹாவிஷ்ணு - 2008
11. தென்கோவை - மாந்தோப்பு ஸ்ரீ மஹாமாரி அம்மன் - 2008
12. கண்டி, புசல்லாவ, புதிய மெல்போட் தோட்டம் ஸ்ரீ முத்துமாரி அம்பிகை - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஹங்வல்ல தோட்டம் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் - 2008

14. நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் தேவஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் விசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் - 2008

15. இளவாலை, கல்லூரி வீதி பேச்சியம்மன் - 2010

16. நீர்வேலி தெற்கு ஸ்ரீ வீரபத்ர சுவாமி - 2011

17. தென்மராட்சி - மறவன்புலோ சேதுகாவலப் பிள்ளையார் - 2011

18. புத்தூர் கிழக்கு, மீசாலை வீதி, திருவருள்மிகு கருகப்பை ஈஸ்வரன் (அண்ணமார்) என அழைக்கப்படும் ஜெகதாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் - 2012

19. இளவாலை, மாவடி ஞானவைரவர் - 2013

20. நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் தேவஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியப் பெருமான் - 2014

21. புன்னாலைக்கட்டுவன், கடவத்துறை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் - 2014

## கோப்பாய் சிவம்-
## சம்ஸ்கிருத நூல் வெளியீடுகள்

வேத, சிவாகம அடிப்படையிலமைந்த 130 இற்கு மேற்பட்ட சம்ஸ்கிருத பத்ததி நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. இவை உலகெங்குமுள்ள ஆலயங்களில் விரும்பி வரவேற்கப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரிகைத்துறை, மலர் வெளியீடு முதலியன.

1. புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரித் தமிழ்மன்ற வெளியீடு "புதுவை" யின் ஆசிரியர் குழு உறுப்பினர் 1973
2. ஈழநாடு நிருபர் 1974
3. செங்கதிர் அறிவியல் ஏட்டின் உதவி ஆசிரியர் 1974
4. கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத் தமிழ்ப் பண்பாட்டுக் கழக வெளியீடாகிய அருவி, பேரருவி ஆகியவற்றின் ஆசிரியர் குழு உறுப்பினர் 1984,85
5. அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலர் ஆசிரியர் 1986
6. கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக மலர் 1988
7. ஆவரங்கால் சிவன் கோவில் தேர் வெள்ளோட்ட மலர் 1995
8. புத்தூர் கிழக்கு தேரம்பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலர் ஆசிரியர் 2003
9. சிறுப்பிட்டி வடக்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கும்பாபிஷேக மலர் ஆசிரியர் 2004
10. புத்தூர் காரைக்கூடல் வைரவர் கோவில் கும்பாபிஷேக மலராசிரியர்.
11. நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலராசிரியர். 2008
12. பாலகுமாரம் - சுழிபுரம், பறாளாய் சிவஸ்ரீ பாலகுருசாமிக் குருக்கள் அமுதவிழா மலர்த் தொகுப்பாளர் 2010
13. ராகா சஹஸ்ரம் - நீர்வேலி பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா அமுதவிழாமலர்த் தொகுப்பாளர். 2010
14. புத்தூர் கிழக்கு, காளியானை ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக மலர் ஆசிரியர். 2010
15. தென்மராட்சி, மறவன்புலவு, சேதுகாவலப் பிள்ளையார் கும்பாபிஷேக மலர் ஆசிரியர். 2011
16. தேவகுமாரம் - இணுவில் சிவஸ்ரீ சி. குமாரராஜக் குருக்கள் பவளவிழா மலர்த் தொகுப்பாளர்.
17. அம்பிகையின் அருட்கோலங்கள் - புளியங்கூடல் மாரியம்மன் கோவில் அறங்காவலர் ஞாபகார்த்த மலர் தொகுப்பாளர். 2012
18. சுவிஸ், சூரிச் சிவன் கோவில் கும்பாபிஷேக மலர்த்தொகுப்பாளர். 2014
19. விவிதவித்யா காலாண்டுச் சஞ்சிகை ஆசிரியர் 2002 - 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ விருதுகள்

இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் - அருள்நெறி விழா - 1999 - கௌரவிப்பு

நோர்வே, ஒஸ்லோ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் **"வித்யாபூஷணம்"** விருது.

சர்வதேச இந்துமத குருபீடம் 2012இல் ஸ்கந்த சாம்பசிவ சிவாசார்யர் ஞாபகாரத்தப் பெருவிழாவில் **"ஸ்ரீ சுபஸ்வரம்"** சாதனையாளர் விருது.

15.11.2014 இல் கொழும்பு ஸ்ரீ ராமகான சபா பவளவிழாவில் **"ஆயுஸ் சதுரர்" (வாழ்நாள் சாதனையாளர்)** விருது

14.12.2014 இல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கை அரசின் **"கலாபூஷணம்"** விருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org